637

காவேரி

விரோதி - வைகாசி. May-1949.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
- JUN 1949
MADRAS

கட்டைகளும் கல்லுகளும்

நான் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும்போது ஒரு கல்லோ கட்டையோ இடறினால் எனக்கு எப்படியிருக்கும்? விட்டின் சுவற்றின்மீது மோதுவது போல்தான் எனக்கும் ஆபத்து. வளைந்து நிமிர்ந்து கொடுப்பது என் சுபாவமானாலும், கற்களையும் கட்டைகளையும் கண்டால் எனக்கு அதிகமான அபாயம்தான் உண்டாகிறது. ஆகையால் கரடுமுரடான பாதையில் வண்டியை செலுத்தும்போது கொஞ்சம் நிதானமாகவே போனால் கற்களையும், மற்ற இடைஞ்சல்களையும் ஒருவாறு சமாளித்து விடுவேன்.

கரடுமுரடான பாதையில் மெதுவாக கவனித்து ஓட்டுங்கள்



டன்லப்

TRADE MARK

DCX 9TM

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி, லிமிடெட்.

(இந்தியாவில் ஸ்தாபிதம்: 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

★

சிறந்த சேவைசெய்து வருகிறது.

நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 70,00,000

★

கிளைகள்: { பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, நாகபுரி.

2263

★

பிரதம ஏஜண்டுகள்:

ஏ & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை Etc.

பியூரிடி பார்லி எட்டு மடங்கு அதிக வேலை புரியும்

பியூரிடி பார்லியில், அரிசிபார்லியின் நற்குணம் பூராவும் சத்து மிகுந்த வகையில் அடங்கியுள்ளது. ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி, எட்டு ஸ்பூன் அரிசி பார்லிக்கு சமமானது. தவிர அது எப்பொழுது வாங்கினாலும் புத்தம் புதிய நிலையில் இருக்கும். ஏனெனில் அது சுகாதார முறைப்படி ஸீலிடப்பட்ட டின்களில் கிடைக்கின்றது. இருபதே நிமிஷங்களில் ருசிமிகுந்த கஞ்சி தயாரிக்கலாம். சீக்கிரமாக பார்லி வாட்டர் தயாரிப்பதற்கு. இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு பியூரிடி பார்லியை சிறிது ஜலத்துடன் மாவாக கரைத்து, இரு டம்ளர் ஜலத்துடன் ஐந்து நிமிஷம் கொதிக்கவைக்க வேண்டியதுதான். ருசிக்கு ஏற்றபடி உப்பு, சர்க்கரை அல்லது எலுமிச்சை ரஸம் சேர்த்துக்கொள்ளலாம்.

பியூரிடி பார்லி

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APBX 5TM

ரூ. 300 இனும்

இந்த மகாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத்ததை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்களைத் தேடி வரும். இந்தத் தகட்டை கைவசம் வைத்துக்கொண்டு தியானம்பண்ணும்போது, இந்த மகாகாளிதோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1—4—0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3—2—0. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத் தகடு ஒன்று ரூ. 3—14—0. தபாற்செலவு தனி. சக்தி இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனும்.

THE BENGAL MESMERISM HOUSE (C. V. K.)

HOSHIARPUR.

OFFICE OF THE REGISTRAR
4 - JUN 1949
MADRAS



எமது முதல்தரமான சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி,

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.
No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.
தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.

பட்டு

என்ருல் மிருதுவாயுள்ளது

அது மைசூர் பட்டானுல் ஸ்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகானதாகும்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

198050

இந்தியாவிலுமட்டுமன்றி, வெளிநாடுகளிலும் "பாரதி"க்கு ஏக கிராக்கி



குறைந்த செலவில் நேர்த்தியான அச்சடிப்பு, துரித வேலை, நீண்ட உழைப்பு. எளிய ஆனால் புதிய அம்சங்கள் பொருந்திய மெகானிஸம் இவைதான் இந்தியா. ஏன், மற்ற இதர நாடுகளிலுமுள்ள, அச்சாபீஸ்களில் *பாரதி* முக்கிய ஸ்தானம் வகிக்கக் காரணம்?

இத் தேசத்தில் இன்னும் அநேக அச்சாபீஸ்கள் அமைக்க இடமிருக்கிறது. சிறிய முதலில் பாரதி பிரிண்டிங் மெஷினின் உதவியைக் கொண்டு, நீங்கள் ஓர் லாபகரமான தொழிலை அமைத்துக்கொள்ளலாம்.

BHARATI

டெமி ஸயிஸ் பிளாட் மெஷின்கள், ஹாப்-டெமி, ஹாப்-கிரௌன், ஹாப் பூல்ஸ்காப் ஸைஸ்களில் உள்ள டிரெடில் மெஷின்கள் கிடைக்கும்.

கால்களினாலோ அல்லது எலெக்டிரிக் பவரினாலோ ஓட்ட வசதியுள்ளது விவரங்களுக்கு எழுதவும்.

பாரதி
பிரிண்டிங் மெஷின்

இந்தியா மெஷினரி கம்பெனி லிமிடெட்.

29, ஸ்டிராண்ட் ரோடு :: கல்கத்தா

போன் : வெஸ்ட் 1574

பொன் விழாவின் பொலிவு......

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்தின் சிகரம் ஆனந்தத்தாண்டவம். சுகவாழ்வும் ஆரோக்யமும் அனைவருக்கும் அத்தியாவசியமானது. அரை நூற்றாண்டுக்கு மேலாக மானிட வர்க்கத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியும் மாசற்ற தேகாரோக்யமும் அளித்து வரும் பண்டித டி. கோபாலாச்சார்லுவின் ஜீவாம்ருதம் பொன் விழாவின் பொலிவுடன் விளங்குகிறது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
(ஸ்தாபிதம் 1898)
மதராஸ் 17

1949-50-ல்
என்ன நேர இருக்கிறது

புத்தாண்டாகிய 1949-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு; அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ 1–4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri
Swami Satnarayan Jotish Ashram
(C. V. K.) HOSHIARPUR.

மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல- இது நல்லது !

தவிர ஜீவசக்தியளிக்கும் விடமின்கள் நிறைந்தது

போர்ன்-வீட்டாவிலுள்ள நேர்த்தியான சாக்லெட் வாசனை இளையோர் முதியோர் அனைவராலும் விரும்பப்படுவது. அதிலுள்ள கால்ஷியமும் விடமின்களும் உங்கள் எலும்புகளை நன்கு வளரச்செய்து புதிய ஆரோக்வமும் ஜீவசக்தியும் ததும்பச் செய்கின்றன.

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.

KB 37M

காட்பரி என்பது சிறந்த ரகத்திற்கு அறிகுறி

குறிப்பிட்ட காலத்தில்
நயம்
கவர்ச்சி
மகிழ்ச்சி
இவை அனைத்தும் பொருந்திய
அச்சு வேலைகளுக்கு

காவேரி கலர் பிரஸ்

14—5—49

போன்: 88
தந்தி: காவேரி
கும்பகோணம்

எல்லாவித சிறிய, பெரிய பிரிண்டிங்களும் ஏற்று செய்து கொடுக்கப்படும்.

ஜம்மி வெங்கடரமணைய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாப்பூர், மதராஸ்.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

கல்கத்தா

அதிகாரம் பெற்ற மூலதனம்	....	ரூ. 8,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	....	ரூ. 4,00,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	ரூ. 2,00,00,000
ரிஸர்வ் நிதி	....	ரூ. 45,00,000

●

டைரக்டர்கள்

G. D. பிர்லா—சேர்மன்

ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா
(வைஸ்-சேர்மன்)

ரமண்லால் ஜி. ஸரையா
(வைஸ்-சேர்மன்)

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

ஜெனரல் மானேஜர்
B. T. தாகூர்

●

இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.



மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 3-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 2-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா முதலியவற்றிற்கு, பி.எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்ருல் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

ஆஸ்த்மா

க்ஷயம் போன்ற எல்லா சுவாசகோச வியாதிகளும் ஒரேநாளில் குணப்படுத்தப் படுகின்றன. முறைப்படி ஆஸ்மோலா, ஒரு பாட்டில் உட்கொண்டால் உபாதையுற்ற சுவாசக் கருவிகள் குணம்பெற்று இயற்கை நிலை அடைகின்றன. ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKARAVARTHI

Ayurvedha Sasthri (K. M.)

24, Debendra Ghose Road, Bhowanipore

CALCUTTA, 25

Telephone : South 308

Stockists:

Messrs. APPAH & CO., 286, China Bazaar Road, Madras.

பொருளடக்கம்

விரோதி மலர் 8 — வைகாசி இதழ் 10

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்	13
மகாசபையின் நடவடிக்கைகள்	14
கனவு ரா. ஸ்ரீ தேசிகன்	17
பாரிஸ் கதைகள் பி. கோதண்டராமன்	25
அத்தையின் மனோரதம் கி. சந்தானம்	29
சிம்ஹநாதம் வேங்கடலட்சுமி பி. ஏ.	36
பட்டண் பெருமை (தொடர் கதை) கே. எம். முன்ஷி	41
ஆயிரம் ஆண்டிற்கு ஒரு பூ வாரன்	57
வெற்றி யாருக்கு? ஆர். எஸ்.	62
கர்நாடக ஸங்கீதம் கலாதாஸன்	70
லக்ஷியக் கனவு (புதிய தொடர் கதை) கே. சுந்தரம்மாள்	73
தமிழ்த் தெய்வ பத்தினி ஈ. ஸ்ரீ. நரசிம்மாசாரியார்	86

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

கோட்டையைப்போல
உறுதியும்...

விமானத்தைப்போல
வசதியும்..

உள்ள சைக்கிள்கள்
இப்போது வந்திருக்கின்றன...



BRITISH MAKE
MILNER
LONDON





ஒரு சைக்கிளில் முக்கிய அம்சம் உறுதி. இரண்டாவது அம்சம் அமைப்பு. எங்களுடைய சைக்கிள்கள் இந்த அம்சங்கள் அனைத்தும் பொருந்தியவை. அரசாங்கத்தாரும், இதர பெரிய ஸ்தாபனங்களும் எங்கள் நீண்ட நாளைய வாடிக்கைக்காரர்கள் என்பதே எங்கள் சைக்கிள்களின் உயர்வுக்கு அத்தாட்சி. மேல் நாட்டிலிருந்து சப்ளைகள் வேண்டிய அளவு வராதபோதிலும் கூடியவரை உங்கள் ஆர்டர்களைப் பூர்த்தி செய்ய முயற்சி செய்வோம்.

எப்பொழுதும் போல சரஸமான விலை.

ராயல் சைக்கிள் & மோட்டார் கோ.,

13/14 பிராட்வே, மதராஸ்

தி பயனீர் சைக்கிள் ஹவுஸ்

மேல கோபுர வீதி, மதுரை

A.C.111

காவேரி

விரோதி மலர் 8 | “சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—” பாரதியார் | வைகாசி இதழ் 10

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

அகில இந்திய பத்திரிகை ஆசிரியர்கள் மகாநாட்டுத் தலைவராக ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார் என்ற செய்தி தமிழ் மக்களை மகிழ்விக்கச் செய்யும். பிரபல தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் என்ற காரணத்தினால் மட்டுமல்ல; சிறந்த அறிவும் ஆற்றலும் படைத்த அகில இந்திய பத்திரிகை ஆசிரியருள் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸனும் ஒருவர்.

அவருடைய கம்பீரமான தோற்றத்திற்கேற்ப அவரிடம் தடபுடல் கிடையாது. தம்முடன் சம்பாஷிக்க வருபவர்களைச் சமநிலையில் வைத்துப் பேசுவதில் அவருக்கு இணையில்லை. அவருடைய அறிவின் ஆழத்தைப் பகட்டாகக் காட்ட மாட்டார். ஆனால் அவருடைய பரந்த நோக்கத்தைக் கண்டு வியப்படையாமலிருக்க முடியாது.

நிதானத்திற்கு அவர் இருப்பிடம். பத்திரிகை ஆசிரியர் எத்தகைய நடுநிலையில் இருத்தல் அவசியம் என்பதற்கு அவர் சிறந்த எடுத்துக்காட்டாவார். சில ஆசிரியர்கள் போல தங்கள் முக்கியகடமைகளை மறந்து அரசியலில் ஈடுபட்டுக் குழப்ப மாட்டார். தம் திடமான அபிப்பிராயத்தைத் தேசிய நலன் என்ற உரைகல்லில் நன்கு தீட்டிய பின்னரே வெளியிடுவார். பொது மக்களுடன் கட்சி பேதமின்றிப் பழகி, காலப்போக்கைக் கிரகிப்பதில் நிகரற்றவர். சிலர் பேச்சில் தம் அபிப்பிராயத்தையே புகுத்துவதிலும், வற்புறுத்துவதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பர். ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸன் இதற்கு நேர் விலக்காவார். தம் அபிப்பிராயத்தைக் கூறுவதின் மூலம் எதிராளிகள் அபிப்பிராயம் உருவடைய உதவி செய்வார். அவருடைய மேடைப் பிரசங்கங்கள் அவ்வளவு கவர்ச்சிகரமாக இரா. ஆனால், அவர் எழுத்துப் பிரசங்கங்களுக்கு இணை அரிது. கருத்துக்கள் ஒவ்வொரு சொல்லிலும் ததும்பும். அவருடைய தமிழ் அல்லது ஆங்கில நடை பழமொழிச் சுருக்கமாக இருக்கும். படிக்கப் படிக்க உற்சாகத்தை உண்டுபண்ணும்.

சிறிய ஆலோசனைக் கூட்டங்களில் தான் அவருடைய புத்திகூர்மையையும், பரந்த அறிவையும் நன்கு காணலாம். சாதாரண பேச்சுக்களில் தம் பரந்த ஞானத்தைக் காட்டிக்கொள்ளமாட்டார். நினைத்த பொழுதெல்லாம் எழுதமாட்டார். அவர் மனம் தூண்டினாலொழியப் பேனா எடுக்கமாட்டார். அவருடைய கட்டுரைகளைப் பார்த்து வாசகர்கள் அவர் அடிக்கடி எழுதுவதில்லையே என்று வருந்துவதுண்டு. பார்வைக்கு எதையும் லக்ஷியம் செய்யாதவர் போல் காணப்படுவார். உழைப்பாளி அல்லர் எனத் தோன்றும். ஆனால் காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பார். சாய்வு நாற்காலியில் அமர்ந்து புகையிலையை மென்றுகொண்டே மனதில் எண்ணங்களை உருவாக்கி விடுவார். எத்தகைய பதவி கிட்டினாலும்

தன்னடக்கத்தை விடாது, எல்லோருட னும் சகஜமாகப் பழகுவார்.

அவருடன் காரியக்கமிட்டிக் கூட்டங் களில் நெருங்கிப் பழகிய அகில இந்திய பத்திரிகை ஆசிரியர்கள் அவருடைய திற மையை மெச்சியே இவ்வுன்னத கௌர வத்தை அவருக்கு அளித்துள்ளார்கள் எனத் தோன்றுகிறது. ஸ்ரீமான் ஸ்ரீநிவா ஸன் தலைமையில் பத்திரிகை ஆசிரியர்கள் மஹாநாடு வெற்றிகரமாக நடைபெறும் என்பது திண்ணம்.

ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸனுக்கு அறுபது வயது நிரம்பப் போகிறது என்றால் ஆச்சரியப்படுவீர்கள். மேலும் மேலும் அவருடைய திறமைக்கேற்ற பதவிகள் சுதந்திர இந்தியாவில் அவருக்குக் கிடைக்க இது முதல் அறிகுறி என்று நம்புகிறோம்.

மகாசபையின் நடவடிக்கைகள்

வம்பர் மகாசபையின் நடவடிக்கைகள் வழக்கம்போல் கனபாடிகள் வீட் டுத் திண்ணையில் ஆரம்பமாயின. "கோடி வீட்டு மங்களத்துக்கு விமோச னம் கிடைத்துவிட்டது" என்று சொல் லிக்கொண்டு ஆபத்சகாயம் வந்துசேர்ந் தார். "என்ன சமாசாரம்? ஐந்து வருஷ மாய்த் திரும்பிப் பாராமலிருந்த புருஷன் அழைத்துக்கொண்டு விட்டானா பெண் ணை?" என்று கேள்விக் குரல்கள் கிளம் பின.

"விவாக ரத்துச் சட்டத்தைப் பற்றிய பிரஸ்தாபம்போல் தோன்றுகிறது" என்று ஒருவர் குறிப்பிட்டார். "இந்த மாதிரி கேசுகளில் விவாகரத்து ஞாயம்" என்றார் ஒரு ஆசாமி.

"பெண் என்றால் பேயும் இரங்கும் என்று சொல்வார்கள். புருஷர்கள் கதியைப்பற்றிப்பரிதாபம் கொள்வோரே இல்லை" என்ற பேச்சுக் கிளம்பியது.

"புருஷனுக்கும் விமோசனம் உண்டு ஸ்வாமி! விவாகரத்துச் சட்டத்தை விளக்குகிறேன் கேளுங்கள்" என்று ஆரம்பித்தார் அண்ணாசாமி.

"மனைவியின் துர்நடத்தை, சகிக்கமுடி யாத துன்புறுத்தல், குணமடையாத வியாதி, மதம் மாற்றல் இத்தகைய குற் றங்களை ஆதாரமாகக் கொண்டு புருஷன் விவாக ரத்துக் கோரலாம். புருஷன் விப சாரம் செய்தாலும், குறைந்தது மூன்று வருஷ காலமாக மனைவியைத் திரும்பிப் பாராம லிருந்தாலும், மேக வியாதி போன்ற கொடிய வியாதியால் பீடிக்கப் பட்டிருந்தாலும், மனைவியைக் கொடூர மாக நடத்தினாலும் ஸ்திரீ விவாக ரத்துக் கோரலாம்.

"விவாக ரத்து என்றால் ஸ்திரீ மறுபடி புனர் விவாகம் செய்துகொள்ளலாமா? ராம ராம! எல்லாம் கலியின் சேஷ்டை!" என்று அங்கலாய்த்தார் கனபாடிகள்.

"கனபாடிகளுக்குப் பிள்ளைகுட்டி இல் லையே! புத் என்ற நரகத்திலிருந்து தப்ப, புனர் விவாகம் செய்துகொண்டால் என்ன?" என்று கேட்டான் குப்பு.

"செய்துகொள்ளலாம்! ஆனால் ஆறு மாதம் சிறைவாசம் அனுபவிக்கக் கனபா டிகள் தயாரா? தவிர சட்டப்படி ஒரு தாரமிருக்க மறுதாரம் கொண்டால் மறு மணம் செல்லாது" என்று பஞ்சு பதில் சொன்னான்.

பிறகு சாரதா சட்டம் திருத்தப்பட்ட தைப்பற்றி விவாதம் எழுந்தது.

"அவசியமற்ற, அர்த்தமற்ற சட்டம்! பெண்ணின் விவாக வயதை 14 லிருந்து 15 ஆக உயர்த்தினதினால் என்ன கெட்டுப் போச்சு? 20 வயதுக்குமுன் எந்தப் பெண்ணுக்கு ஸ்வாமி விவாகம் நடை பெறுகிறது? சட்டசபை மெம்பர்களுக்கு வேறு வேலை இல்லை!" என்று சுடச்சுட மகாலிங்கம் முடித்தார்.

"சரி சரி! வீண் வம்புப் பேச்சு வேண்டாம். பிரதம மந்திரி நேரு காமன்வெல்த்தில் இந்தியா சேர்ந்து இருப்பது எவ்வளவு நல்லது என்பதைக் கச்சிதமாக விளக்கியிருக்கிறார் தெரியுமா?'' என்று ஒருவர் ஆரம்பித்தார்.

"அது என்ன காமன் வெல்த்''? தமிழில் சொல்லுமய்யா? சுத்த தமிழில்தான் இனி நடவடிக்கைகள் இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்க ஆங்கிலத்தைக் கலந்துவிட்டீரே?'' என்று பஞ்சு கிண்டலாகக் கேட்டான்.

''காப்பிக்குச் சரியான தமிழ் வார்த்தை என்ன சொல்லும்? பேத்துகிறார்! பழக்கப்பட்ட வார்த்தைகள் எந்தப் பாஷையிலிருந்தாலும் அதை உபயோகித்தல் தவறல்ல என்று அறிவாளிகள் ஒப்புக்கொள்கிறார்கள். காமன்வெல்த் என்றால் காமன்வெல்த்! கூட்டுறவு, பொதுநலம் என்று வேண்டுமானால் புரிபடாமல் சொல்லிக்கொள்ளலாம். பிரிட்டனுடன் இந்தியா தொடர்பு வைத்துக்கொள்ளுதல் நல்லது என்பதே நேரு சொல்வதின் சாராம்சம். ஆனால் இனி இந்தியா பிரிட்டனின் அடிமையல்ல. இஷ்டம் போல் எதையும் செய்துகொள்ளலாம். அவசியமானால் உறவை முறித்துக்கொள்ளலாம்.''

"இதனால் யாருக்கு இலாபம்'' என்ற கேள்வி கிளம்பிற்று. இருவருக்கும் இலாபம் என்று சொல்லிப் பஞ்சு முற்றுப்புள்ளி வைத்தான்.

காஷ்மீர் விஷயம் என்னவாயிற்று என்ற பேச்சுக் கிளம்பியது. "அது விஷயமாக நமது ஜோஸ்யரைக் கேட்கலாமே?'' என்று பஞ்சு குத்திவிட்டான்,

நாணு ஜோஸ்யர் ஆத்திரமடைந்தார். காஷ்மீர் விவகாரத்தைப்பற்றி எதற்கு ஜோஸ்யம் பார்க்கவேண்டும்? தீராத தகராறு, மறுபடியும் உலக யுத்தம் தோன்றி முடிந்தபின்தான் காஷ்மீர் விவகாரம் சரிப்படும். கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு? பித்தலாட்டக்காரர்கள் மத்தியஸ்தர்களாக அமைந்தால் விவகாரம் தீருமா? அவர்களது யோசனையைச் சுதந்திரமாகப் பெருமையுடன் வாழும் இந்தியா எப்படி ஒப்புக்கொள்ளும்?

''தொலையட்டும், நமது மாகாண மந்திரி சபை விஸ்தரிப்பு என்ன ஆயிற்று?'' என்ற கேள்வி கிளம்பியது.

''மண்ணாங்கட்டி ஆயிற்று? சுயநலக் கும்பல்களின் வேஷம் கலைந்து வருகிறது. மந்திரி பதவிகள் ஏலத்தில் சாமான்கள் விடப் படுவதுபோல ஆகிவிட்டன. சென்னை மந்திரிசபை சிரிப்பாய்ச் சிரிக்கிறது. குமாரசாமிராஜா திண்டாடுகிறார். பாவம், திரை மறைவில் பிறர் இருந்து மந்திரி சபையைப் பதுமைகளைப்போல் ஆட்டி வைக்கிறார்கள்.

''என்ன சுந்தரமய்யர், வாய் பேசாமல் ஏதோ பறிகொடுத்தவர்போல் இடிந்து உட்கார்ந்திருக்கிறார்'' என்றார் ஓர் கிண்டல் பேர்வழி.

"உங்களுக்கெல்லாம் என்ன கவலை? புண்யாத்மாக்கள். இன்னும் ஒரு மாதம் சென்றால் காலேஜ்கள் திறந்துவிடுவார்களே என்று எனக்குத்திகிலாயிருக்கிறது. பையன் பாஸ் செய்துவிடுவான். இந்தச் சனியன் பிராமணனாகப் பிறந்து தொலைய வேண்டுமா?''

''ஓய்! சுந்தரமய்யர், எதற்காக வீண் கவலைப்படுகிறீர்? காலேஜ் படிப்பே வேண்டாம்!''

"ஏன் அய்யா என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீர்? எதிலும் விளையாட்டா? எனக்கென்ன சிபார்சு உண்டா? மார்க்குகள் வாங்கினாலும் விகிதாசாரமாகத்தான் சேர்த்துக் கொள்ளுவார்களாம். சர்க்கார் காலேஜ் அல்லாது வேறு ஊரில் போய் வேறு காலேஜ்களில் சேர்த்துவிடலாமென்றால் நமக்கு அந்தஸ்து இல்லை. ஈசுவரன்தான் வழிவிடவேண்டும்!''

''நமது மாகாணத்தில் மட்டும்தான் இந்தமாதிரி விசித்திர அநீதிகள் இழைக்கப்படுகின்றனவா?''

''நமது மாகாணத்தில் மட்டும்தான் இந்த விபரீதப் போக்கு.''

"மத்திய அரசாங்கத்தார் ஜாதி மத வித்யாசங்கள் எதிலும் கூடாது என்று சொல்லுகிறார்களே!''

"அதெல்லாம் யார் ஐயா கேட்கிறார்கள்."

"ஆமாம், ஜமீன் ஒழிப்பு மசோதா என்னவாயிற்று" என்றார் ஒருவர்.

"திரிசங்கு ஸ்வர்க்கத்தில் ஊசலாடுகிறது. மசோதா சட்டமாகிவிட்டது. கவர்னர் ஜனரல் அங்கீகாரம் கொடுத்துவிட்டார். ஆனாலும் சட்டம் அமுலுக்கு வருவதில் கஷ்டங்கள் பல. ஜமீன்தார்களை ஒழித்துக்கட்டிப் பணம் கொடுக்காமல், கடுதாசுகளைக் கொடுத்துத் திருப்தி செய்யப் பயனற்ற திட்டம் சென்னை சர்க்கார் வகுத்தார்கள். மத்திய சர்க்கார் சென்னை அரசாங்கத்தை மண்டையிலடித்து நஷ்டஈடு ரொக்கமாகக் கொடுபட வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். பணமில்லாததால் கடன் வாங்கச் சென்னை அரசாங்கம் அனுமதி கேட்டது. முடியாது என்ற பதில் வந்துவிட்டது. சட்டப்படி ஜமீன்தார்கள் ஒழிந்தார்கள். ஆனால் நடைமுறையில் ஜமீன்தார்கள் இருந்தே வருகிறார்கள். இரண்டும் கெட்டான்நிலைமை,எல்லோருக்கும்தொல்லை."

"இப்படிப்பட்ட மோசமான சட்ட திட்டங்களை ஏன் ஏற்படுத்தவேண்டும்? முன்யோசனை வேண்டாமா?"

"திறமை, அனுபவம், முன்யோசனை இல்லாத ஆசாமிகள் அரசாங்க இயந்திரத்தை ஓட்ட ஆரம்பித்தால் குரங்கின் கைப்பூமாலைபோல்தான்' என்றார் ஒருவர்.

"அதெல்லாம் கிடக்கட்டும். உணவுப் பிரச்னை எப்பொழுது தீரும்? விலைவாசிகள் எப்பொழுது குறையும்?" என்று கேட்டார் கனபாடிகள்.

"உணவுப் பொருள்கள் நிறையக் கிடைத்தால் பிரச்னை தானே தீர்ந்துவிடும்! அது எப்பொழுது நடக்கும் என்பதைத் திட்டமாகச் சொல்ல முடியாது. சர்க்கார் எப்பொழுது தம் ஊழியர்களுக்குப் பஞ்சப்படி கொடுப்பதை நிறுத்துகிறார்களோ அன்றே விலைவாசிகள் குறையத் தொடங்கும்" என்றான் கிண்டல் கிட்டு,

"சுபிட்சம் என்பது இந்த ஜன்மத்தில் இல்லை என்று சொல்லுங்கள்?"—கனபாடிகள்.

"உமக்கென்னய்யா அதைப்பற்றிக் கவலை?"

"சர்வேஜனு சுகினோபவந்து!"

"கனபாடிகளே இனி தமிழிலேயே உளறும்!

"எல்லோரும் இன்புற்று வாழ்வதேயல்லால் வேறொன்றும் அறியேன் பராபரமே! என்பதைப் பஞ்சாதியாகக்கொள்ளும்"

"சரி சரி நாழியாகிறது. எனக்குத் தூக்கம் வருகிறது. மற்றதைப் பிறகு வைத்துக்கொள்ளலாம். எல்லோரும் போய் வாருங்கள்" என்று சொல்லி, கனபாடிகள் விளக்கையும்எடுத்துக்கொண்டு போய்விடவே கூட்டம் கலைந்தது.

கனவு

ரா. ஸ்ரீ. தேசிகன்

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலின் மணி பன்னிரண்டு அடித்தது. அம்மணியின் நாதம் சூழ்ந்துள்ள அமைதி மீது மிதந்து வந்து என் செவியில் பாய்ந்ததும், நான் படுக்கையை விட்டெழுந்தேன். மாடியிலிருந்து கீழே இறங்கிப் போனேன். எல்லாம் தூக்க மந்திரத்தில் கட்டுண்டுகிடந்தன. தெருவில் ஒரு பாலைவன அமைதி குடிகொண்டிருந்தது. ஊழிக் காலமாக விண்ணில் கண் அயராமல் காவல் புரியும் உடுக்கணங்களைத் தவிர மற்றொன்றும் விழித்திருக்கவில்லை. பொழுது விடிந்தால் பொங்கிப் பாயும் வாழ்க்கைப்பெருநதி எங்கே ஓடி ஒளித்து விடுகிறது? அது சிந்தைக்கெட்டாத எந்த மலைச் சுனையில் பிறக்கிறது? கண்கள் காணாத எந்தக் கடலில் அது கலக்கின்றது? ஒன்றும் விளங்கவில்லை. இரண்டு பெரும் இருளுக்கு நடுவில் மின்னலெனப் பாயும் வாழ்வின் விசித்திரத்தைச் சிந்தித்தபடியே தெருவில் சற்று உலாவினேன். பொழுதும் மெல்லத் தேய்ந்து கொண்டிருந்தது. மாடிக்கு வந்து விளக்கைப் போட்டுச் சற்று நாற்காலியில் சாய்ந்தேன். விளக்கைச் சுற்றிப் பூச்சிகள் பறக்கத் தொடங்கின. அப்பூச்சிகளை ஒரு பெரும் பல்லி பிடித்துத் தின்றது. திடீரென்று ஒரு எலியின் ஓலங்கேட்டது. ஒரு பூனை அதைக் கவ்விச் செல்லக் கண்டேன். குளத்தில் பாம்பின் வாய்ப்பட்ட தவளையின் அரவமும் என் செவியில் விழுந்தது. பசி-மரணத்தின் வாய்—ஓயாமல் அசை போட்டுக் கொண்டிருந்தது. இக்காட்சிகளுக்கிடையே நான் கண் அயர்ந்தேன். பல கனவுகள் என் முன் விரிந்தன. செறிந்த காடுகள் தோன்றின. மிருகங்கள் ஒன்றையொன்று அடித்துத் தின்றன. புலியின் சீற்றக் குரல், சிங்கத்தின் பேரிடி முழக்கம்—இவை என் காதில் விழுந்தன. மரத்தடியில் கட்டப் பட்டிருந்த ஒரு எருதின் மீது புலி பாய்ந்தது; அப் புலியைச் சுட்டுக் கொன்றான் புலிவேட்டையாடுவோன்; துப்பாக்கியின் சப்தம் காதில் விழுந்தது.

காலை மலர்ந்தது. பறவைகள் துயிலெழுந்து எங்கும் பறந்தன. அப்பறவைகளின் பல்லாயிரக் கணக்கான ஒலிகளில் பசியின் குரலைக் கேட்டேன். கழனிகளில் கணக்கிலா உழவர்கள் வேலை செய்தனர். அவர்கள் பசியிலே விளைந்த எண்ணிறந்த பயிர்கள் அவர்கள் பசியிலேயே அழியக் கண்டேன்.

பிறகு யந்திரசாலைகளில் நுழைந்தேன். யந்திரங்கள் சுழன்று கொண்டிருந்தன. இடையறாத மழையொலி போல் அவைகளின் சப்தம் என் காதில் விழுந்து கொண்டிருந்தது. தேனடை ஈக்கள் போல அந்த யந்திரசாலைகளில் வேலை புரியும் மக்கள் மொய்த்துக்கொண்டிருந்தனர். இத்தனை பேர்களையும் ஆட்டி வைக்கிறது எது? பசி, பசிதான்.

ஒரு ரஸாயன கூடத்திற்குச் சென்றேன். பசி தாகத்தை மறந்து, பெண்டு குட்டிகளை மறந்து கண்ணாடிக் குழாய்களையே நோக்கியிருந்த ஆசிரியர் தோன்றினார். இவருக்கென்ன பசியிருக்கும்? என்ற கேள்வி என் மனத்தகத்தே எழுந்தது. உண்மையை நாடுகின்ற பசிதான் என்று தேர்ந்தேன்.

அதே கூடத்தில் வியாதியைத் தன்மீது வரவழைத்துக்கொண்டு அதற்குப் பரிகாரம் தேடுகின்ற ஓர் உத்தமனைக் கண்டேன். சுயநலமற்ற பரோபகாரப் பசி அவரைத் தூண்டுவதைப் பார்த்தேன்.

வடதுருவத்தை நோக்கிச் சிலர் விரைந்துகொண்டிருந்தனர். கண்ணுக்கெட்டின வரையில் பனிக்காடுதான். நிலவு போல எங்கும் வெண்மை நிறம் பரந்து விரிந்து கிடந்தது. பனிக் கடல் மீது ஊர்ந்து போகிறவர்களை எது பிடித்துத் தள்ளுகிறது? அப் பிராந்தங்களிலுள்ள உண்மைகளைத் துருவி ஆராயும் ஆர்வந்தான். அவ்வார்வமும் ஒரு தீராத பசியன்றோ?

அழியாப் பனி மூடிய மலைகளின் பயங்கரமான உச்சிகளை நாடினர் வேறு சிலர். அவர்கள் திரும்பிவரக் காணோம், ஆனால்

அவரைப் பின் தொடர்ந்து அநேக வீரர்கள் சென்றுகொண்டே இருந்தனர். அனலைக் கக்கிக் கொதித்தெழும் எரிமலை வாய்க்குள் குதித்தனர் மற்றுஞ் சிலர். ஆகாயத்தில் பறந்து சென்றனர். விண்ணில் சுழலும் கிரகங்களுக்கும் பாலம் வகுக்க முயன்றனர். தூரதிருஷ்டிக் கண்ணாடி கொண்டு கணக்கிலா நக்ஷத்திரங்களைப் பார்த்துப் பார்த்துக் கண் அயர்கின்றனர். அம்மண்டலங்களின் மர்மங்களைக் காண வேண்டுமென்ற பசிதான் இதற்குக் காரணம். அளப்பரும் கடலின் அடித்தளத்தை அளக்க மூழ்கினர். பாரின் குடலைக்கிழித்து அதனுள் புகுந்தனர்.

கடல் போலச் சேனைகள் என் முன் விரியக் கண்டேன். பீரங்கிகளின் இடி முழக்கம் கேட்டது. ஆகாய விமானங்களிலிருந்து வெடி குண்டுகள் சடசடவென விழுந்தன. செழிப்பான நிலங்களெல்லாம் வெம்பாலைவனமாய் மாறி விட்டன. விஷப்புகை எங்கும் சூழ்ந்தது. கடல்களில் கப்பல்கள் சுக்கு நூறாய்ச் சிதறப் பார்த்தேன். இதென்ன பசி என்று வியந்தேன். வெற்றி வெறி என்ற பதில் என் உள்ளத்தில் எழுந்தது. இக்காட்சிகளெல்லாம் மெல்லத் தேய ஆரம்பித்தன. ஒரு தனி இடத்தில் ஓர் ஓவியப் புலவன் கிழியில் சித்திரம் வரைந்து கொண்டிருந்தான். ஒரு வர்ணத்தைத் தீட்டினான்: அதை அழித்தான்; மற்றொன்றைப் பூசினான்; அழித்து அழித்து வரைந்து கொண்டே போனான்: இன்னும் தான் கனவு கண்ட உருவம் கிழியில் அலரவில்லை. அழகுப் பசி அப்புலவனை வாட்டக் கண்டேன்.

மேகங்கள் அணிவகுத்தது போல் இருண்டு வந்தன. மின்னல்கள் எங்கே பார்த்தாலும் வீசின. இடி எங்கும் முழங்கிற்று. வட திசையை நோக்கி இரண்டு சஞ்சலமுள்ள கண்கள் விரைந்தன. "கார்காலம் வந்து விட்டதே; போர்க் களத்திற்குச் சென்ற என் தலைவன் திரும்பிவரவில்லையே" என்று அவள் ஏங்கினாள். மடியிலே வீணையை வைத்து மீட்டினாள். கண்ணீர் வீணைத் தந்திகள் மீது அருவி பாய்ந்தது. தந்திகள் பேசாமல் மௌனம் சாதித்துவிட்டன. சோகத்தால் தன் நினைவு இழந்து விட்டாள்.

போர்க்களத்தில் முரசொலி அவிந்துவிட்டது. வீரன் ஆகாயத்தை நோக்கினான். கார்காலம் வந்துவிட்டதே என்று உணர்ந்தான். "என் தலைவி உயிர் மாய்த்துவிடுவாள் நான் விரைந்து செல்லாவிடில்" என்ற எண்ணம் அவனை வாட்டிற்று. மிக விரைவாய்த் தேரைச் செலுத்தினான். தேர் ஓடுகிற ஒலி என் காதில் விழுந்தது, காதற் பசி இவர்களைப் பிடுங்கித் தின்னக்கண்டேன். இவ்விரு உருவங்களும் மறைந்துவிட்டன.

ஒரு மலை அடிவாரம் தோன்றிற்று. அதன் பக்கத்திலுள்ள குகையில் ஒரு முனியைக் கண்டேன். கண்மூடி மௌனியாய் அமர்ந்திருந்தார். எல்லாவற்றையும் துறந்த இவருக்கென்ன பசியிருக்கும் என்று எனக்குள்ளே பேசிக்கொண்டேன்; "எத்தனைகாலம் தவம் புரிவேன். உன் அருள் கிட்டவில்லையே; எத்தனையோ ஊழிகள் தோன்றித் தோன்றி மறைந்துவிட்டனவே; நீ வருகின்ற சங்கொலி என் செவியில் விழவில்லையே; எப்பொழுது உன் அருள்முகில் என்மீது பெய்யுமோ" என்ற அவர் பிரார்த்தனை என் செவியில் பாய்ந்தது. அருட் பசியன்றோ இவரை ஆட்கொண்டுவிட்டது என்று தேர்ந்தேன். பசியின் வாய் கொண்டு அழகு, காதல் இவைகளை அழிக்கும் மரணத்தையும் கண்டேன். இம் மரணத்தையும் விழுங்கும் ஒரு பெரும்—கால—நாகம் நடனமாடிற்று. அதன் தலைமீதுஆடும் ஆயர்குல நந்தனைக் கண்டேன். இதற்குள் பார்த்தசாரதி கோயிலின் வைகறை மணி அடித்தது. என் தூக்கமும் கலைந்தது; அத் தூக்கக் கலையோடு என் கனவும் தேய்ந்தது. தெருவில்,

"காவலிற் புலனை வைத்துக்
கலிதன்னைக் கடக்கப் பாய்ந்து
நாவலிட் டுழிதரு கின்றோம்
நமன் தமர் தலைகள்மீதே
மூவுல குண்டுமிழ்ந்த
முதல்வநின் நாமம் கற்ற
ஆவலிப் புடைமை கண்டா
யரங்கமா நகரு ளானே"

என்று ஒரு பாகவதர் பாடிவந்தார். என் முன் உள்ள காளிங்க நர்த்தனப் படத்தின்மீது, காலைச் சூரியனின் இளங்கதிர் விழுந்துகொண்டிருந்தது.

இந்திய டொமினியன் கவர்னர்கள் மகாநாடு புதுடெல்லி சர்க்கார் காரியாலயத்தில் நடைபெற்றது. ஒன்பது மாகாண கவர்னர்களும் பண்டித நேரு, ராஜாஜி, ஸர்தார் படேல் ஆகியோருடன் வீற்றிருப்பதைக் காணலாம்.



புது டெல்லி க்வீன்ஸ்வேயில் நடைபெற்ற மத்திய குடிசைக் கைத்தொழில் பொருட் காட்சியைத் திறந்து வைத்துப் புத்தகத்தில் கையெழுத்திடுகிருர் கவர்னர் ஜெனரல் ராஜாஜி.



மிஸ் பமீளா மௌண்ட்பேடன் ஸர்தார் படேலுடன் கை குலுக்குகிருர், அருகில் நிற்பவர் ஸ்ரீமதி இந்திரா காந்தி.

புது டெல்லியில் சமீபத்தில் நடைபெற்ற அகில இந்திய சித்திரக் கலைக் காட்சி ஓர் அரிய முயற்சி. நம் பண்டைய நாகரீகத்தின் கலை முன்னேற்றம் எவ்வாறு ஓங்கியிருந்தது என்பதை அடுத்துவரும் சிற்பங்கள் நிரூபிக்கின்றன.





கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

கல்யாண காலத்திற்கேற்ற கொள்ளேகாலம், பெங்களூர், காஞ்சீவரம், மைசூர் கிரேப் பட்டுச் சேலைகள், ஜாக்கிட் & ஷர்ட்டிங் ஸில்க் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்துள்ளோம்.

கால நிலவரப்படி குறைந்த ஒரே விலை விற்பனை

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

99, பெரியதெரு :: கும்பகோணம்

***Props:* S. R. G. Sons.**



பாரீஸ் கதைகள்

['பாரீஸ் பிரஜை ஒருவன்' திரட்டி வெளியிட்ட 'பாரீஸ் கதைகள்' என்ற பிரஞ்சு நாலிலிருந்து பி. கோதண்டராமன் மொழிபெயர்த்த குட்டிக் கதைகள்.]

இறுதிப் பிரயாணம்

துய்ப்போன் என்னும் முதியோன் ஒருவன் சொத்துக்களைத் தன் மருமகன் துய்வாலுக்கு எழுதிவைத்து, அதில் தன் இறுதி விருப்பங்களை நிறைவேற்றும் பொறுப்பையும் அவன்மீதே சுமத்தி விட்டுப் பரலோக யாத்திரை செய்தான்.

உயிலில், 'புய்யி என்னுமிடத்திலுள்ள சிறிய இடுகாட்டில் என்னருமை மனைவியின் கல்லறைக்கு அருகிலேயே என் சடலமும் புதைக்கப்பட வேண்டுமென்பதே என் விருப்பம்' என்று கண்டிருந்தது.

புய்யி இருநூறு மைல் தூரத்திலிருந்தது. பட்டிக்காட்டானான அம் மருமகன் தனக்கு ஆஸ்தி வைத்துப்போனவனின் விருப்பத்திற்கு இணங்கவே விரும்பினான். ஆனால் பிணத்தை அவ்வளவு தூரம் தூக்கிச்செல்ல மிகுந்த செலவாகுமே என்று யோசித்தான். உயிருடனிருப்பவர்களைவிட உயிர் துறந்தவர்களின் பிரயாணச் செலவு அதிகம். திடுமென அவன் மூளையில் பளிச்சென்று ஒரு எண்ணம் பட்டது. அதைத் தன் தோழன் ஒருவனிடம் சொல்ல, அவனும் அதை ஏற்று உதவிசெய்வதாக வாக்களித்தான்.

அடுத்த நாள் விடியற்காலை, வார்சுதாரனும் அவனுடைய தோழனும் பிணத்தை ஒவ்வொருவனும் ஒரு கரத்தைப்பிடித்துக்கொண்டு, உயிருள்ளவன்போல அதன் காதில் ஏதோ எச்சரிக்கை செய்துகொண்டே சென்று முதல் வகுப்பு ரயில் வண்டியில் ஏற்றினர். அதை ஒரு மூலையில் சௌகரியமாகப்படுக்கவிட்டு அடுத்த வண்டியில் ஏறிக்கொண்டனர், ரயில் புறப்பட்டது. இடையேயுள்ள ஸ்டேஷன்களில் சிறிது நின்று மீண்டும் புறப்பட்டது. மூன்ருவது ஸ்டேஷன் வந்தபோது, கப்பித்தான் ஒருவன் ஏறி, இறந்தவனுக்கு எதிராக உட்கார்ந்துகொண்டான். கப்பித்தான் சிகரெட்டொன்றை எடுத்துப் பற்றவைத்தபின் கடிகாரத்தைப்பார்க்க, அது ஓடாதிருக்கக் கண்டான்.

"ஐயா, தயவு செய்து இப்போது மணி என்ன என்று சொல்வீர்களா?" என்று நீட்டிக்கொண்டிருந்த சடலத்தை நோக்கிக் கேட்டான்.

கண்களைக் கொட்டையாக விழித்துக்கொண்டிருந்த அந்தப் பிணம் தன்னுடன் பிரயாணம் செய்தவனின் முகத்தை உற்றுப்பார்ப்பது போலிருந்தது. அதன் வாயில் பரிகசிப்பதைப் போன்றதொரு குறிப்பும் புலப்பட்டது.

"மன்னிக்கவேண்டும், ஐயா, உம்மை மணி என்ன என்று கேட்கிறேன்" என்றான் மீண்டும் அந்த ராணுவ அதிகாரி.

— ....

"நண்பரே, சொல்லுங்கள். நீங்கள் அசட்டையாயிருப்பது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை,"

— ....

"இதோ பாருங்கள். ஒன்று, இரண்டு, மூன்று என்று ஐந்துவரையில் எண்ணப் போகிறேன். ஐந்துக்குள் நீங்கள் பதில்

சொல்லாவிடின், கன்னங்களில் ஓங்கி அறைவேன், நீங்கள் ஆயுசிலேயே அவ் வித அறைகள் பட்டிருக்கமாட்டீர்கள்; அப்படி அறைவேன். ஆமாம், எச்சரிக்கை செய்துவிட்டேன்.''

"ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு.''

....

"ஐந்ந்து!

கப்பித்தான் தன் பலமெல்லாம் கொண்டு இறந்தவனை ஓங்கியறைந்தான். கன்னங்களில் நன்ருக அடிபட்டது. பிணம் தரையில் விழுந்தது. கப்பித்தான் குனிந்து அதைத் தொட்டுப் பார்த்தான். முகம், கை, யாவும் சில்லென்று இருந்தன.

"ஆகா! உன்னைக் கொன்றுவிட்டேன். உன்னைக் கொன்றுவிட்டதாக என்மீது குற்றஞ் சாட்டப்போகிருர்கள்.''

அதே சமயம், ரயில் மலையைக்குடைந்து சென்ற ஒரு பாதையில் நுழைந்தது. கப்பித்தான் ஒரு முடிவுக்கு வந்தான். அவன் கதவைத் திறந்து, பிணத்தை வெளியே தள்ளிவிட்டு அமைதியாகத்தன் புத்தகத்தைப் படிக்கலானுன்.

ரயில் புய்யியை அடைந்தது. மருமகன் துய்வாலும் அவன் தோழனும் இறந்தவ னிருந்த வண்டியில் நுழைந்தனர். சடலம் அங்கு இல்லாமையைக்கண்டு பெரிதும் ஆச்சரியமடைந்தனர்; கண்ணைப் பிசைந்தனர்; ஒருவரையொருவர் பீதியுடன் பார்த்துக்கொண்டனர்.

கடைசியாக, மருமகன் தெளிவடைந்து ராணுவ அதிகாரியை நெருங்கினுன்.

"ஐயா, மன்னிக்கவேண்டும். வண்டியில் உம்முடன் ஒருவர் பிரயாணம் செய்யவில்லையா?''

"ஆமாம், செய்தார்.''

"அவர் எங்கே?''

"அவர் கடைசியாகச் சென்ற ஸ்டேஷனில் இறங்கினுர்.'' என்று அமரிக்கையாகப் பதில் கூறினுன் அந்தக் கப்பித்தான்.

சகோதரியை மணக்கலாமா?

பியேர் என்னும் வாலிபன் ஒருநாள் தன் தந்தையான லவாந்தியூர் சீமானிடம் வந்து சொன்னுன்:

"அப்பா, நீயும் நாலு வருஷமாக, கலியாணம் பண்ணிக்கொள், கலியாணம் பண்ணிக்கொள், என்று என்னிடம் விடாமல் சொல்லிக்கொண்டே வருகிருய். வசீகர நங்கையொருத்தியைப் பார்த்து விட்டேனென உனக்குப் பெரு மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். அவள் என்னைக் காதலிக்கிருள்; நானும் அவளைக் காதலிக்கிறேன். சம்மதம் அளித்துவிடு. ஒரு வருஷத்தில் நீயும் பாட்டனுய்விடுவாய்.''

வயோதிகச் சீமானுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. "ஆ! ஆ! ஆ! மகனே, நீ பூரண திருப்தியளிப்பாய் என்று எனக்கு நன்ருகத் தெரியுமே. மிகவும் சந்தோஷமாகச் சம்மதிக்கிறேன்.'' என்ருர்.

"வந்தனம், வந்தனம், அப்பா.''

"சரி, யார் அந்த இள நங்கை?''

"அற்புதமான சம்பந்தம்; அழகும், செல்வமும், உயர்குடியும் வாய்க்கப் பெற்ற என் காதலியின் பெயர் குமரி மரியேகூர்.''

"ஆ! என் பாவிப் பயலே! என் பாவிப் பயலே!'' என்று கத்தினுர் சீமான்.

அவர் கண்ணீர் விட்டார்.

"என்ன அப்பா? என்ன?''

"ஐயோ, நீ குமரி மரியேகூரை மணக்க முடியாதே.''

"ஏன் அப்பா?''

"ஏனென்ருல்......... அதை உன்னிடம் சொல்லித்தான் ஆகவேண்டும். குமரி மரியேகூர் உனக்குச் சகோதரியாவாள்''

இளைஞன் வருத்தத்துடன் வெளியேறினுன்.

ஐந்து மாதங்கள் சென்றன.

வசந்தகாலத்தில் மிக ரம்மியமாயிருந்த ஒருநாள் காலை, பியேர் தன் தகப்பனுரின் அறைக் கதவைத் தட்டினுன்.

"உள்ளே வா" என்ருர் சீமான்.

பியேர் உவகை பொங்க உள்ளே நுழைந்தான்.

"அப்பா, உனக்கொரு சந்தோஷமான செய்தி கொண்டுவந்திருக்கிறேன்" என்ருன்.

"என்ன அது?"

"நான் குமரி மரியேகூரை அடியோடு மறந்துவிட்டேன்."

"ஆண்டவன் நம்மைப் பாதுகாப்பாராக!"

"எனக்கு இப்போது காதல் வெறி தலைக்கு ஏறியிருக்கிறது."

"என் சம்மதத்தைப் பெறத்தானே வந்திருக்கிருய்?"

"அதற்கேதான்."

"அருமைக் குழந்தாய், அதை உனக்கு முன் கூட்டியே அளித்து விடுகிறேன், இந்தத் தடவையாவது உனக்குத் திருப்தியுண்டாக்கக்கூடிய நிலையில் இருக்கிறேன் என்று எனக்கு மிகவும் சந்தோஷம்."

"வந்தனம், அப்பா, எல்லோரையும் விட நானே பாக்கியசாலி."

"நானும்தான். என்னைக் கட்டிக்கொள்"

இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளுகின்றனர்.

"சரி, எனக்கு நாட்டுப் பெண்ணுகை வரப் போகிறவளின் பெயரென்ன?"

"குமரி ஐஸெலே."

"ஆ!" என்று கத்தினுர் சீமான்.

"இன்னெரு தரம் சொல்லு!"

"ஐஸெலே"

"நன்ருகக் கேட்டேன். ஐயோ, என் பாவிப்பயலே! நீ உண்மையாகக் கொடுத்துவைக்கவில்லை. நீ ஐஸெலேயை மணக்கவே முடியாது."

"ஏன் அப்படி? அவள் நம் ஜாதியைச் சார்ந்தவளல்லவோ?"

"அவள் நம் ஜாதியைச் சார்ந்தவள் தான்."

"அவளுக்குச் செல்வமில்லையா?"

"அவள் நிரம்பப் பணக்காரி."

"அவளுடைய அழகும் லக்ஷணமும் உமக்குக் கௌரவமளிப்பனவாக இல்லையா?"

"நீ சொல்பவை யாவும் சரி. தடை செய்வன இவையல்ல, வேறு விஷயங்கள். பாவிப்பயலே, குமரி ஐஸெலேயும்—நான் உன்னிடமிருந்து மறைக்க உரிமை கிடையாது—உன் சகோதரியே"

....

"ஆ! என் வாலிபத்தில் செய்த முட்டாள்தனங்களுக்காக நான் எவ்வளவு வருந்துகிறேன்!"

பியேருக்குப் பாதி வருத்தம், பாதி எரிச்சல். பியேர் தன் தகப்பனுரின் அறையிலிருந்து வெளியேறி நேராகத் தாயிடம் சென்ருன். அவள் தன் தனிச் சிற்றறையில் எதையோ படித்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா, உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்" என்ருன் அவன்.

'ஏசு வழி நிற்றல்' என்ற புத்தகத்தை மூடி வைத்து, "குழந்தாய், என்ன விசேஷம் சொல்" என்ருள்.

"அப்பாவும் நீயுமாக, கலியாணம் பண்ணிக் கொள் என்று விடாமல் சொல்லி வருகிறீர்கள்."

"என் கண்ணே, அது உண்மை தான். எங்கள் பேரவா அதுவே."

"சில மாதங்களுக்கு முன், குமரி மரியே கூரை மணந்து கொள்ளப் போவதாக அப்பாவிடம் தெரிவித்தேன்."

"அவர் சம்மதமளிக்கவில்லையே?"

"இல்லை"

"ஏன்?"

"ஏனென்ருல், அந்த இளநங்கை என் சகோதரியாம்."

அலட்சியமாக, "ஆ!"

"ஆகையால் அவளைத் துறந்தேன். பிறகு குமரிஜிஸெலேயின் பழக்கமேற்பட்டது"

"அவள் லக்ஷணமாயிருப்பாளே."

"என் அபிப்பிராயமும் அதுவே. அவளும் நானும் மணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டுவிட்டோம்."

"பின்னே தயக்கமென்ன?"

"அப்பா இந்தச்சம்பந்தத்தை எதிர்க்கிறார்."

"ஏன்?"

"ஜிஸெலே என் சகோதரியாம்."

"அவளுமா?"

"அவளும் தானும்."

சீமாட்டி சில நிமிடம் மௌனமாயிருந்தாள். பிறகு ஆழ்ந்த சிந்தனையிலிருப்பது போலிருந்தாள்.

கடைசியாக, "பியேர், நீ குமரிமரியே கூரைக் கலியாணம் செய்து கொள்ளலாம்." என்றாள்.

"எப்படி அம்மா?"

"ஜிஸெலேயையே மணந்துகொள்ள விரும்பினாலொழிய"

"ஆமாம்,........"

"அவளும் சரி, இவளும் சரி உன் சகோதரிகளல்லர்."

"எப்படி அம்மா?"

"எப்படி என்றால், உன் அப்பா உன்னைப் பெற்ற அப்பாவல்ல."

பணிப்பெண்ணின் ரகசியங்கள்

பணிப்பெண்: வேலையை முடித்துக் கொண்டு போகுமுன் அம்மாவுக்கு நான் பல விஷயங்கள் சொல்லவேண்டியிருக்கின்றன.

சீமாட்டி: பெண்ணே, சொல். என் இரண்டு செவிகளாலும் கேட்கிறேன்.

பணிப்பெண்; முதலில், நான் சீமாட்டியைவிட அழகு மிகுந்தவள், சீமான் தான் எனக்கு அதைச் சொன்னது. அப்புறம், சீமாட்டியின் ஆடைகள் அவள் உடலைவிட என் உடலில்தான் மிகவும் பொருந்தியனவாயும், சோபையுள்ளனவாயும் இருக்கின்றன. சீமான்தான் எனக்கு அதைச் சொன்னது. சீமாட்டி, இன்னுமொரு விஷயத்தையும் சொல்ல வேண்டும்; அவளைவிட நானே சுவை மிக்க காதல் புரிகிறேன்.

சீமாட்டி; சீமான்தான் உனக்கு அதையும் சொன்னது, இல்லையா?

பணிப்பெண்: இல்லை, சீமாட்டி, மோட்டார் ஓட்டிதான் அங்ஙனமாகச் சொன்னது.

மணப் பரிசம்

விக்டோரினா: ஜூல், நான் உன்னை எதற்காகக் காதலிக்கிறேன் தெரியுமோ? நீ அழகனாயிருப்பதனால்தான்.

ஜூல்: ஆ! விக்டோரினா!

விக்டோரினா: உன்னிடமுள்ள எது அழகாயிருக்கிறது தெரியுமா?

ஜூல்: கடவுளே! போதும்!

விக்டோரினா: உன் பற்கள்.

ஜூல்: (தன் பொய்ப் பற்களின் மேல் வரிசையையும், கீழ் வரிசையையும் வாயிலிருந்து எடுத்து) இவற்றை மணப் பரிசமாக உனக்கு நான் அளிக்கட்டுமா?

அத்தையின் மனோரதம்

கி. சந்தானம்.

"இந்த ஏழையின் குடிசை ஏறிவர இப்பொழுதாவது மனம் வந்ததே. இது என் பாக்கியம்தான் – இல்லை! நான்தான் பாக்கிய மற்றவளாயிற்றே. என் முன்னோர்கள்செய்த தவப்பயன்! இல்லையா? அப்படித்தானே நான் நினைக்கவேண்டும் என்று சொல்லுகிறீர்கள்?"

"இல்லையே! நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லையே. நீ ஏன் வீணாய்க் கோபித்துக்கொள்ளுகிறாய்?"

"வாய்விட்டு வேறு சொல்ல வேண்டுமா? வெட்கக்கேடுதான். அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பார்கள். கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? இந்தச் சொற்பப் புத்திகூட எனக்கு இல்லாமலிருந்தால் நான் எப்படித்தான் இந்தப் பன்னிரண்டு வருடங்களைத் தனியே கழித்திருக்க முடியும் என்று எண்ணுகிறீர்கள்?"

"நீ புத்திசாலி என்பதை முதலிலேயே ஒப்புக்கொண்டுவிடுகிறேன். அப்புறம் என்ன?"

"இந்த மாய்மாலமெல்லாம் யாரிடம் செல்லுமோ அவளிடம் காண்பியுங்கள். அவள் பெயரே பத்மா இல்லையா? அன்றலர்ந்த தாமரை! மின்னற்கொடியிலே பூத்த மென்மலர்! கருந்தடங்கண்ணி! கார்மேகக் கூந்தலாள்! கிள்ளை மொழியாள்!......"

"போதும், போதும் வர்ணனை. கியன்ன குணா. என்றெல்லாம் ஒவ்வொரு எழுத்திற்கும் அலங்காரச் சொற்கள் அடுக்கிக் கொண்டே போனாலும்..........."

"அவளுக்கு அத்தனையும் தகும் தகும் என்று தானே சொல்லப் போகிறீர்கள்? அப்படியானால் அவளை விட்டு எதற்கு......"

"நான் சொல்வதைக் கொஞ்சம்........."

"என்ன கேட்க வேண்டியிருக்கிறது? உள்ளுக்குள்ளே நைந்து உருகித் தவித்த என்னை இத்தனை காலம் உளளோ இலளோ என்று கூடக் கேட்டறியாத உமக்கு இப்பொழுது என்ன கரிசனம் வந்துவிட்டது? ஏழுவயதினிலே, அறியாப்பருவத்திலே, என்னைத் தொட்டுத் தாலி கட்டிய நீர் ஒரு மாமாங்கம் கழித்து எற்றுக்கு என் மருங்கில் வந்தீர்? என்னோடு வாதம் செய்ய வேண்டாம். என் குடிசை வாயிலைக் கண்டிருக்கிறீர்களா? அதோ தானிருக்கிறது! எழுந்தருள்க!........ உங்கள் விறைப்பெல்லாம் இங்கே வேண்டாம். குனிந்துதான் செல்ல வேண்டும்...... தலையில் இடித்துக் கொள்ளப் போகிறீர்கள்!" அன்பும் கோபமும் கலந்த இந்தக் கட்டளையின் முன் அவன் என்ன செய்ய முடியும்?

*　　*　　*

"அப்பப்பா! என்ன ரோஷம் அவளுக்கு! கோபத்திலேதான் அவளுடைய சௌந்தர்யம் எப்படி ஜ்வலித்தது! அந்தச் சீற்றத்திலும்தான் என்ன உள்ளன்பு! இவளைத்தானா—சரஸ்வதி கடாக்ஷமும் லக்ஷ்மியின் கடைக்கண் நோக்கும் ஒருங்கே பெற்ற இவளைத்தானா – நான் மறந்திருக்க நேர்ந்தது, என்னே விதியின் விளையாட்டு!" என்றெல்லாம் சிரித்துக்கொண்டே கோடிலிங்கம் சென்றான்.

அவன் சென்றதும் விநதா விம்மினாள். அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது! அவ்வுணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுக்கவே கீழ்க்கண்ட பாட்டை ஆரபி ராகத்தில் அற்புதமாய்ப் பாடினாள்.

"ரஜனி ஜனித குரு ஜாகரராக கஷாயித மலஸ நிமேஷம்

வஹதி நயன மனுராக மிவஸ்புட
முதிதர ஸாபி நிவேசம்

யாஹிமாதவ யாஹி கேசவ பாவத
கைதவ வாதம்

தாமனுஸர ஸரஸீருஹலோசன
யாதவ ஹரதி விஷாதம்-யாஹி"

2

"ஏண்டி பொண்ணே! என்னடீ இது? ஒருநாளுமில்லாத திருநாளாய் உன் கணவன் இங்கே வந்தால் அவனை என்ன

வெல்லாமோ சொல்லி விரட்டிவிட்டு ஆனந்த மாய்ப்பாடிக் கொண்டிருக்கிறாயே. உனக்கு என்ன துணிச்சலடி" என்று கோபித்துக் கொண்டாள் அவள் அத்தை.

விநதாவின் கண்களிலிருந்து பொலபொல வெனக் கண்ணீர் உதிர்ந்தது "ஐயோ என்ன பேதைமை! இந்த ஈராறு வருடங்களாய் அவரை எண்ணி யெண்ணி ஏங்கினேன். அவர் இந்தப் பக்கம் வருவாரோ, வருவாரோ என்று வழிமேல் விழிவைத்து வாசலுக்கும் உள்ளுக்கும் எத்தனை தடவை அலைந்திருப்பேன்! அன்றொருநாள் நான் அவரைக் கண்டபோது அவரை என் கண்ணினால் பருகி என் இதயத்திலே தேக்கிக்கொண்டேன். அங்கே அவர் முன்னிலையில் – அவர் கடைக்கண் என்னும் வேலால் நெஞ்சு ஊடுருவத் தாக்குண்டு தளர்ந்து நைந்து உருகிய என்னை, 'அஞ்சேல்' என்று ஒருதரம்கூட இயம்பாத, கல்நெஞ்சு படைத்த அவர் முன்னிலையில் — எத்தனை தரம் தெண்டனிட்டு நின்றேன்! நான் அழுதும் தொழுதும் என்னுள்ளே அவர் உருக்காட்டா தொழிந்தது எத்தனை முறை! புறங்கையால் ஒதுக்கிப் புறக்கணித்தும், என்னைத் தழுவி, முழுகிப் புகுந்து, சுற்றிச் சுழன்று, போகாது லீலைகள் புரிந்தது எத்தனையோ! அவரை நினைந்து நினைந்து அவர்பின் போன நெஞ்சமும் என்னை மறக்க, ஊராருறங்கிலும் உறங்கியறியாத என் விழிகள் என்னுள்ளே அவரைத் தேடித் தேடித் திரிந்தது எத்தனை இரவுகளோ! பேதைப்பெண் வருத்தமறியாத பெம்மானைப் பேணில் பெற்ற பயன் என்னோ?

"உள்ளேயுருகி நைவேனை உளளோ விலளோவென்னாத,

கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோடிலிங்கத்தைக் கண்டக்கால்,

கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும்,

அள்ளிப் பறித்திட்டவன் மார்வில் எறிந்தென் அழலைத் தீர்வேனே".

அவர் ஸ்ரீமான். நான் ஏழை. இருந்தாலும் அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்? என் கழுத்திலே மங்கல நாணைப் பூட்டிய போதே என் இதயத்தையும் சுருக்கிட்டுக் கொண்டு போனவரல்லரோ அவர்? எப்படி என்னைப் புறக்கணித்து வேறொருத்தியைக்கைப்பிடிக்க முடியும்? அப்படிப் புறம்போனவர் எதற்காக என்னிடம் திரும்பி வர வேண்டும்?...... அடியம்மா! என்னை ஏன் பெற்று இவ்வுலகில் விட்டுச் சென்றாயோ........."

இவ்வித எண்ணங்களால் அலைக்கப்பட்டுக் கோவெனக் கதறினாள் விந்தா. அவள் அத்தை அவளைத் தன்னோடு சேர்த்தணைத்துச் சமாதானம் செய்தாள்.

"குழந்தாய்! அழாதேயம்மா! நான் என்னவோ சொல்லியதெல்லாம் நீ மனசிலே வைக்காதே. கொண்டானும் குடித்தனமுமாய், கையும் குழந்தையுமாய், நீ நல்வாழ்வு வாழ வேண்டுமென்பதுதான் என் மனோரதம். இந்தச் செல்லரித்த கட்டை எத்தனை நாளிருக்கும்? நான் கண் மூடிவிட்டால், நீ என்ன செய்வாய். வயிற்றை அலம்ப ஏதோ சொற்ப வரும்படி பகவான் கொடுத்திருக்கிறார், இருந்தாலும் இந்தப் பரந்த உலகில் உன்னைத் தன்னந்தனியே விட்டுவிட்டு நான் எப்படிப் போவேனடி கண்ணே! ஸ்திரீகளுக்குப் பொறுமைதான் பூஷணம் அம்மா. தானாய் வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளலாமா?"

"அத்தை! அவரை நம்பித்தானா நான் பிறந்து வளர்ந்தேன்? திக்கற்றவருக்குத் தெய்வம் துணை. கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும் உவந்து உணவளிக்கும் ஈசன் என்னை ஊட்டி வளர்ப்பான் என்று நீயே சொல்வதுண்டே. அதெல்லாம் ஏட்டுச்சுரைக்காயா?"

"அடியம்மா! உனக்குத்தான் என்ன வாய்த்துடுக்கு! உன் வாயடங்க, கர்வமெல்லாம் தொலைய, உன் நிமிர்ந்த தலை குனிய, அவன் உன்னை வலிய அணைக்க நான் ஒருதரம் கண்டுவிட்டால்—அப்புறம் தான் என் கட்டை வேகும்"

"போ அத்தை!"

"போகிறேன் அம்மா, போகிறேன்.

"போறேனிதோ போகிறேனிதோ
போறேனிதோ அடுக்களைக்கே"

என்று அத்தை பாடவும், விநதா 'களுக்' கென்று சிரித்துவிட்டாள்.

3

கோடிலிங்கத்தின் தகப்பனார் லக்ஷாதிபதி. இருந்தும் தெய்வ பக்தியுள்ளவர். அவருக்கு என்ன தோன்றிற்றோ யாருக்குத் தெரியும்? விநதா ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயரின் பெண்தான். இருந்தாலும் மாசற்ற குலத்து வந்தவள். 'குறுகுறு' வென்றிருந்த அவள் கருவிழிகளையும் நின்ற விடம் நில்லாது பம்பரம் போல் சுழன்ற அவள் உடலின் சுறுசுறுப்பையும் கண்ட அவர் அவளைத் தம் மகனுக்கு விவாகம் செய்து

வைத்தார். அடுத்த வருடமே அவர் கண் மூடி விட்டார். அவரைத் தேடிக் கொண்டு அவர் மனைவியும் போய்விட்டாள். சிறிய வயதிலேயே பெரியோர்களைத் துறந்த கோடிலிங்கத்திற்கு உறவினர் பலரும் 'துவஜம்' கட்டிக் கொண்டு ஒத்தாசைக்கு வந்தனர். அப்புறம் கேட்பானேன்? "நன்றாயிருக்கு! மடைப்பள்ளியில் வேலை செய்பவனின் பெண் அழகாயிருக்கிறாள் என்றால் அவளை மணந்து கொண்டு விடலாமா? அவள் அதிர்ஷ்டமும் அப்படித் தானேயிருக்கும்? ஒரு லக்ஷாதிபதிக்கு ஏற்றவளாகுவாளா, ஒரு "வாத்தி"யின் மகள்?" என்றெல்லாம் ஏசிப் பேசி, கோடிலிங்கத்திற்கு மறுமணம் செய்து வைத்துப் புண்ணியத்தைக்கட்டிக்கொண்டார்கள்.

விநதா, பாவம்! அறியாக்குழந்தை அவள் என்செய்வாள்? குழவிப் பருவத்திலேயே தாயை இழந்த அவளுக்குத் தாயும் தகப்பனும் அவள் தந்தைதான். அவரும் அவளை அருமையாய் வளர்த்ததோடு, தமக்குத் தெரிந்த கல்வியெல்லாம் அவளுக்குப் புகட்டினார். அவருக்குச் சங்கீத ஞானமும் கொஞ்சம் உண்டு. அதையும் அவளுக்குக் கற்றுக் கொடுத்தார். வளர்பிறைச் சந்திரன்போல சுதந்திரமாய்த் துள்ளி விளையாடும் மான் போல – அவள் நாளுக்குநாள் வளர்ந்து வருவதைக்காணக் காண அவர் மனம் சாம்பினார். இதே கவலையாக இருந்து அவரும் இவ்வுலகை நீத்தார். விநதாவிற்கு இப்பொழுது பெற்றோர், உற்றார், உறவினர் எல்லாம் வயது சென்ற அவள் அத்தைதான்!

பத்மா!—அவள் தான் கோடிலிங்கத்தின் இரண்டாம் மனைவி—அவளும் ரூபவதிதான். குணத்திலோ தங்கக் கம்பி! ஆனால், இந்த விதி என்று ஒன்றிருக்கின்றதே! அதன் செயல்கள் என்ன விசித்திரமாயிருக்கின்றன!

"பத்மா!"

"சொல்லுங்கள், பிரபோ!"

"நீ ஏன் இப்படி இளைத்துப் போகிறாய்? ஏன் நன்றாய்ச் சாப்பிடுவதில்லை? ஒருவேளை உனக்கு என்னைப் பிடிக்கவில்லையா!"

"ராம ராம! இதென்ன கேள்வி?"

"நீயோ பத்மா! நான் பகலவனாயிருந்தால் தானே உன் முகம் மலரும்"

கலியாண

விசேஷங்களுக்கு வேண்டும்

ஜவுளிகள்

எல்லாம் ஏராளமாக வந்திருக்கின்றன

கொள்ளேகாலம் பட்டுப்
புடவைகள், உயர்ந்த அழகிய
கூறைச்சேலைகள், பட்டுகள்,
பட்டுவஸ்திரங்கள், சிறந்த
துப்பட்டாக்கள், வேஷ்டிகள்

எல்லாம் நயம், நம்பிக்கை, நாணயமானவை.

நேரில் ஒருமுறை எங்கள் கடைக்கு விஜயம் செய்யுங்கள்.

ஆரணி சில்க் ஹௌஸ்,

சன்னிதித் தெரு, மயிலாப்பூர், சென்னை.

டெலிபோன் நெ. 86349.

"அப்படியெல்லாம் சொல்லி என்னை அழவைக்காதீர்கள்.........அதிருக்கட்டும். நீங்கள் அவளைச் சமீபத்தில் பார்த்தீர்களா?"

"யாரை?"

"அவளைத்தான், அன்றொரு நாள் நான் தூரத்திலிருந்து பார்த்தேன். அந்தத் தங்கப் பொம்மையையா நீங்கள் தள்ளி வைத்திருக்கிறீர்கள்?"

"இதற்குத்தான் தினம் ஒருதரம் பதில் சொல்லுகிறேனே......... அவளைப் பார்த்து மூன்று நான்கு வருஷங்களிருக்கும்."

"இது என் யோகத்தின் பயன்போலும். நீங்கள் அவளைமட்டும் ஒருமுறை பார்த்துவிட்டீர்களானால் அப்புறம் நாங்கள் இருவரும் இடம் மாற்றிக்கொள்ள வேண்டியதுதான்."

"அப்படியானால் எதற்காக அவளைப்பற்றித் தினமும் பிரஸ்தாபித்து என் மானத்தை வாங்குகிறாய்? சென்றுபோனவைகள் என் சம்மதமின்றியே நடந்துவிட்டன என்றுதான் சொன்னேனே. அதில் உனக்கு நம்பிக்கையில்லையா?"

"சொல்லிவிட்டால் ஆய்விட்டதா? ஒரு வழி தேடவேண்டாமா? பெண் பாவம் பொல்லாது!"

"வழி நீதான் கண்டுபிடியேன்"

"நீங்கள் அவளைப்போய் ஒரு முறை பார்த்துவிட்டு வாருங்கள். முடிந்தால் அழைத்துக் கொண்டே வந்துவிடுங்கள். அவள் ஸ்தானத்தைப் பிடுங்கிக்கொள்ள எனக்கு யாதொரு உரிமையுமில்லை. உங்கள் இருவருக்கும் பணிப்பெண்ணாகவே இருந்து நான் என் காலத்தைக் கழித்துவிடுகிறேன்."

"பத்மா! இதென்ன அசட்டுத்தனம்! தனக்குத் தானே கேடு தேடிக்கொள்வாரும் உண்டா? பெண் புத்தி பின் புத்தி என்பது சரியாய்ப்போச்சு. உங்கள் இருவருக்கும் நடுவில் நான் அகப்பட்டுக்கொண்டு சுப்பிரமணியர் மயில்வாகனத்தில் இருப்பதுபோலத் திண்டாட நேரிடும்."

"நாங்கள் அக்கா தங்கைபோலிருப்போம்."

"ஆமாம்! முதலில் அப்படி ஆரம்பிப்பது தான் முடிவில் வரவர மாமியார் என்னவோ போல் ஆனாளாம் என்ற கதையாய் முடிந்துவிடும்"

"நீங்கள் போகமாட்டீர்களா?"

"அவள் கர்வி என்று சொல்லிக்கொள்கிறீர்கள். என்னைத் தூக்கி எறிந்து பேசினாலும் பேசுவாள்"

"ஏன் பேசமாட்டாள்? நீங்கள் செய்த தப்பிதத்திற்கு இராமேசுவரம் போனாலும் பாபம் தொலையாதே"

"சரி, என்னதான் செய்யச்சொல்லுகிறாய்?"

"ஒருதரம் போய் அவளைப் பார்த்துப் பேசிவிட்டு வாருங்கள்."

கோடிலிங்கம் விநதாவைப் பார்த்துவிட்டுப் போன விஷயம் வாசகர் அறிந்ததே.

* * *

4

"அவள் என்ன சொன்னாள்?"

"என்ன சொல்வாள்?"

"எனக்கு ஜோஸ்யம் தெரியாது."

"நான்தான் சொன்னேனே, அவள் கர்வம் பிடித்தவள் என்று. நான் பணக்காரனும், அவள் ஏழையாம். இந்த பன்னிரண்டு ஆண்டுகளாய்த் திரும்பிப் பாராமலிருந்துவிட்டு இப்பொழுது மட்டும் அவளிடத்தில் தயை பிறக்கக்காரணம் என்னவென்று கேட்கிறாள். இன்னும் என்னவெல்லாமோ சொல்கிறாள். எனக்கு என்ன தெரிகிறது? முடிவில் தெருவாயிலைக் காண்பித்துவிட்டாள். அவளுக்கிருந்த கோபதாபத்தில் நான் எப்படிப் பேச முடியும்? வாய்திறக்காமல் வந்துவிட்டேன். நான் அவமானப்பட்டு வந்ததில் உன் மனம் குளிர்ந்ததா?"

"ஏனிப்படிப் புண்ணில் கோல் இடுகிறீர்கள்? உங்களுக்கு வாகாய், வக்கணையாய்ப் பேசத்தெரிந்திராது."

"ஆமாம்! உன்னை அழைத்துக்கொண்டு போயிருக்கவேண்டும்!"

"அப்படிப் போயிருந்தால் ஒன்றும் குடிமுழுகிவிட்டிருக்காது, போகட்டும், அவள் எப்படி இருக்கிறாள் பார்த்தீர்களா? என்ன செய்து கொண்டிருந்தாள்? என்ன சொன்னாள்?"

"எனக்கென்ன தெரியும்? நான் போகும் போது ஏதோ பாட்டுக் குரல் கேட்டது.

"என்ன பாட்டு?"

"ஏதோ லிங்கம் என்று கேட்டது".

"முழுதும் தான் சொல்லுங்களேன்"

"தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்,

பானவர் பக்தி பிரவேச லிங்கம்

தினகர கோடிப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்''

"அப்புறம்"

அப்புறம் என்ன?''

''பார்ப்பதற்கு அவள் எப்படியிருந்தாள்?"

''அவளை யார் பார்த்தார்கள்? அடேயப்பா! அவளுக்கு வந்த கோபம், அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது! அவள் என்னைப் பார்த்த பார்வை உண்டே.........''

''நீங்கள் தான் அவளைப் பார்க்கவில்லையே"

''இல்லவேயில்லை! அவள் தான் எரித்து விடுவாள் போல் விழித்துப் பார்த்தாள்; அடேயப்பா ரொம்ப துஷ்டை!''

பத்மா சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிருய்? ஒருத்தியிடம் அவமானப்பட்டாய்விட்டது; உன்னிடம் கேலிப் பேச்சுக் கேட்க.........''

''வேண்டாம் நீங்கள் இருக்கவேண்டியபடி இருந்துவிட்டால்......"

''எப்படி?''

''நீங்கள் தான் சொன்னீர்களே மயில்வாகனத்தில்......''

''என்ன விளையாட்டு வேண்டிக்கிடக்கிறது பத்மா! என் மனம் புண்ணுப்க் கிடக்கிறது''

''நான் ஒரு மருந்து சொல்லட்டுமா?"

''என்ன மருந்து?''

''காந்தி மகானின் கிராமோத்தாரண வேலைகளைப்பற்றி வாசித்துணர்ந்திருக்கிறீர்களா?''

''இல்லை''

''நான் வாசித்துக் காண்பிக்கிறேன் வாருங்கள்''

''சரி, என்னவோ மருந்து என்ருயே"

''ஆமாம்! உங்களுக்கும் எனக்கும் உள்ள பாந்தவ்யம் எப்படி என்று கருதுகிறீர்கள்?''

''ஏன், நீ என் அருமை மனைவி"

''இல்லை, இனி உங்கள் அருமைத் தங்கையாய்ப் பாவியுங்கள்''

"அப்படியானல் விநதா?"

''அவள் என் தமக்கை"

நயம், நாணயம், நம்பிக்கைவாய்ந்த பட்டுப் புடவைகளுக்கு சிறந்த இடம்?

ருக்மணி சில்க் எம்போரியம்

பெரியதெரு, கும்பகோணம்.

கலியாண விசேஷங்களுக்கு வேண்டிய கொள்ளேகாலம் கூறைச் சேலைகளும், இன்னும் பலஊர் பட்டு, நூல் புடவைகள், ஜவுளிகளும் ஏராளமாக வந்து குவிந்திருக்கின்றன.

இன்றே ஒருமுறை நேரில் விஜயம் செய்யுங்கள்

மயிலாப்பூர் ராதா சில்க் எம்போரியம்

14, சன்னதித்தெரு, மயிலாப்பூர், மதராஸ்.

Proprietors :- R. K. Radhakrishna Chettiar & Brother

Phone No: 84188.

"எனக்கு எப்படி?"

"உங்களுக்குத் தங்கை............வாருங்கள் விவரமாய்ச் சொல்லுகிறேன்"

5

விநதா வெலவெலத்துப் போய்விட்டாள்.

"ஏதோ கோபத்தில் சொல்லிவிட்டால் என்ன குடிமுழுகிப்போய்விட்டது? அவருக்குத்தான் என்ன அவ்வளவு ஆணவம்? இன்னெருநாள் வந்து பார்க்கக் கூடாதா? நான் அங்கு எப்படிப் போவேன்? ஐயோ! பேதைப் பெண்ணே! கையிலே கிடைத்த பழத்தை நழுவவிட்டுவிட்டுக் கொட்டாவி விடுவதில் என்ன பயன்! இது தான் தலைவிதி என்பதோ? அதிர்ஷ்டம் ஒவ்வொருவர் வீட்டுக் கதவையும் ஒரு தரம் தட்டுகிறதென்ருர்களே. நான் திறக்காமல் இரட்டைத் தாழ்ப்பாளாய்ப் போட்டுவிட்டேனே" இப்படியெல்லாம் ஏதேதோ எண்ணி அவள் அங்கலாய்த்தாள். பச்சாத்தாபப்பட்டாள். அவள் கண்களினின்றும் தாரை பெருகிற்று.

"என்டி பெண்ணே! கேட்டையோ சமாச்சாரத்தை?" என்று சொல்லிக் கொண்டே அத்தை வந்தாள். விநதா அவசர அவசரமாகக் கண்ணைத் துடைத்துக்கொண்டு,

"என்ன அத்தை?" என்ருள்.

"எல்லாம் உன் அகமுடையான் விஷயந் தான். அவன் சாமியாராய்விட்டானமே!



பணத்தை யெல்லாம் தானதருமங்கள் செய்து ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டானாம். ஒரு குடிசை போட்டுக்கொண்டு அவன் பெண்சாதி – அவள்தான்! அவள் யாரு? பத்மா, நல்ல பத்மா! – அவளோடு அதில் வசிக்கிறானாம்.

"என்னமோ கிராமோத்தாரகமாமே, கிராமசேவை, கிராமசேவை என்று நீ வெறுமனே படித்துச் சொல்வையே அதுவா—அதுதான் செய்துகொண்டிருக்கிறார்களாம். அவர்கள் ஊரே மாறிவிட்டதாம். ஒரே அல்லோல கல்லோலம். பள்ளிக்கூடம், ஆசுபத்திரி, குழந்தைகள் சம்ரக்ஷணை, கோ சம்ரக்ஷணை, இன்னும் என்னவெல்லாமோ ஏற்பாடு செய்திருக்கிறார்களாம், இந்த ஊருக்கும் வந்திருக்காளாம். தெருத் தெருவா வராளாம்."

விநதா ஆச்சரியத்தால் அசந்து போனாள்.

"அத்தை ராமராஜ்யம் என்று கேட்டிருக்கிறாயா?"

அத்தை பதில் சொல்வதற்குள், பக்கத்துத் தெருவில் பாடும் சப்தம் கேட்டது. அந்த ஒலி வர வர நெருங்கி வந்தது.

"பஜமன ப்யாரே ஸீதாராம்
பஜமன ப்யாரே ஸீதாராம்"

ஆச்சு இதோ கோஷ்டி வாசலில் வந்துவிட்டது. வில்லிலிருந்து அம்பு புறப்படுவதுபோல் விநதா வாசல்பக்கம் ஓடினாள். மறுகணம் அவள் கணவன் காலடியில் வெட்டிச் சாய்த்த மரம்போல் வீழ்ந்துவிட்டாள். கோடிலிங்கம் அவளை வாரி எடுத்து அணைத்துக்கொண்டான். விநதா மெல்லக் கண் விழித்தாள் "அடியக்கா!" என்று சொல்லிக் கொண்டே பத்மா வந்து விநதாவைக் கட்டிக்கொண்டாள். பஜனை கோஷ்டி நகர்ந்தது."

அத்தை வாசலில் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் கண்களில் ஜலம் தளும்பிற்று. எத்தனை நேரம் நின்றாளோ அவளுக்கே தெரியாது. மறுபடியும் "பஜமன ப்யாரே ஸீதாராம்" என்னும் ஒலி நெருங்கி வந்தது. ஆம்! அதோ வருகிறார்கள் நடுவில் கோடிலிங்கம். அவனுக்கு வலப்புறத்தில் விநதா உல்லாசமாய், உற்சாகமாய் வருகிறாள். ரோஜா மலரைத் தோற்கடித்த அவள் முகத்திலே ஒரு மோகனப் புன்னகை, இடுப்பிலே ஒரு குழந்தை, கையிலே ஒரு வாண்டுப் பயல்! அவனுக்கு இடப்புறத்திலே பத்மா! அவளைச் சுற்றியும் சிரித்துக் கும்மாளமிடும் குழந்தைகள்.

அத்தைக்கு ரோமாஞ்சலி ஏற்பட்டது. நாத் தழு தழுக்க, 'நீங்கள் நீடூழி வாழ்ந்து நன்றாயிருக்க வேண்டும்' என்று இரண்டு கைகளையும் தூக்கி ஆசீர்வதித்தாள். விநதாவின் கன்னத்தைத் தொட்டுக் கையைச் சொடுக்கித் திருஷ்டி கழித்தாள்.

"அத்தை! உன் மனோரதம் நிறைவேறி விட்டதா? என்னைக் கையும் குழந்தையுமாய்ப் பார்க்கவேண்டுமென்றாயே. இதோ பார்! இடுப்பில் ஒரு "கண்ணு," கையில் ஒரு "குஞ்சு," கழுத்தைச்சுற்றி ஒரு "வாண்டுப் பயல். போதுமா அத்தை?"

"போதுமடியம்மா! நீ நன்றாயிருக்கணும்."

அத்தையின் ஆசிச்சொல்லோடு கோடிலிங்கத்தின் கனிந்த பார்வையும் கலந்துகொண்டது.



சிம்ஹ நாதம்

வெங்கட லட்சுமி B.A.

"திம்மப்பா!" என்று உரத்துக் கூப்பிட்டான் கங்கராயன். அவன் கையிற் பிடித்திருந்த சாட்டை சொடுக், சொடுக்கென்று சப்தம் செய்தது.

எதிரேயிருந்த சிங்கக் கூண்டுகளை அலட்சியமாய் நோக்கினான். உள்ளே இருந்த சிங்கங்களிரண்டும் பிடரிமயிர் சிலிர்க்கக் கம்பீரமாய்க் குறுக்கும் நெடுக்கும் உலாவிக் கொண்டிருந்தன. இடை யிடையே அவை கம்பிகளண்டை வந்து நின்று, அனல் கக்கும் பார்வையுடன் அவற்றைப் பிராண்டின. அப்பொழுதெல்லாம் இலேசான சிரிப்பொன்று கங்கராயனின் கண்டத்திலிருந்து எழும். அதைத் தொடர்ந்து சிங்கங்களின் உர்ரென்ற உறுமலும் ஆகாயத்தில் அதிர்ந்து எழும்பும்.

"திம்மப்பா!" என்று மீண்டும் கூப்பிட்டபடியே கையிலிருந்த சாட்டையைச் சொடுக்கினான் கங்கராயன்.

"இதோ வந்தேன்!" என்று குரல் கொடுத்துக்கொண்டே அவனெதிரில் தோன்றினான் கருங்கல் சிலை போன்ற வீரனொருவன். அவனுடைய கை கால்கள் இருப்புலக்கைகள் போன்றிருந்தன. அவன் கையிலும் நீளமான சாட்டை யொன்றிருந்தது. தவிர இடையில் உறையுடன்கூடிய வாளொன்றும் சொருகியிருந்தான்.

"ஏன் அழைத்தீர்கள்?" என்று கேட்டான் அவன்.

ஒரு விநாடி அவனை ஏற இறங்க நோக்கினான் கங்கராயன். பின் மெதுவான குரலில், "போன ஒற்றர்கள் திரும்பி வந்தார்களா? என்ன சமாசாரம் கொண்டு வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டான். அவன் குரலில் ஒரு அரசனின் கம்பீரம் தொனித்தது.

திம்மப்பன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, கங்கராயனின் சமீபம் வந்தான். "நாம் நினைத்ததுதான் பிரபு. பாமினி சுல்தானின் படை நிலைமை அவ்வளவு திருப்திகரமாயில்லை யாதலால் யுத்தம் இன்னும் ஒரு மாதத்துக்கு மேலும் ஒத்திப் போகலாமெனக் கூறுகிறார்கள்." என்று தாழ்ந்த குரலில் பதிலளித்தான்.

ஒரு விநாடி மௌனமாக ஏதோ யோசித்தான் கங்கராயன். பின் சட்டென்று தலை நிமிர்ந்து, "இளவரசியைப் பார்த்தாயா? அது விஷயம் கேட்கவே மறந்துவிட்டேனே!" என்றான்.

சட்டென்று இடுப்பிலிருந்து ஒரு கடிதத்தையெடுத்து அவனிடம் கொடுத்தான் திம்மப்பன். "ஆம் பிரபு, பார்த்தேன். அது விஷயம் நானும் தங்களிடம் கூற மறந்துவிட்டேன்" என்றான்.

கடிதத்தைப் பெற்றுக்கொண்ட கங்கராயனின் முகம் மலர்ந்தது. கடிதத்தைப் பிரித்து ஆவலுடன் படிக்கலானான்.

ஐந்து நிமிஷம் பொறுத்துப் பொறுமையிழந்தவனாய், "நான் போகலாமா?" என்று கேட்டான் திம்மப்பன்.

"போகலாம்; இரவு இன்னொரு முறை இவைகளை வந்து கவனித்துச் செல்" என்று கூண்டிலிருந்த சிங்கங்களைச் சுட்டிக்காட்டினான் கங்கராயன்.

"ஆகட்டும், பிரபு;" என்று வணக்கமாகப் பதில் கூறிவிட்டு அங்கிருந்து மறைந்தான் திம்மப்பன்.

2

விஜயநகரத்தின் மன்னன் தேவராயனுக்குக் குழந்தைகளில்லை. இளைய அரசனான கங்கராயன் அவனுக்குப் பின்பு பட்டத்துக்கு வருவானென எதிர்பார்க்கப்பட்டது. மன்னனின் எண்ணமும் அதுவே.

தேவராயனின் தங்கை மகள் ரங்கதேவி. அவளுக்குப் பெற்றோர் கிடையாது. மன்னன் தேவராயனும் அவன் மனைவியான ராணி திலகம்மாவும் அவளைத் தங்கள் குழந்தையா

கவே பாவித்து வந்தனர். கடவுள் சித்தமிருந்தால் அவளைக் கங்கராயனுக்கேகொடுத்து மணமுடிக்கலாமென்பது அவர்களுடைய அவா. இளைஞர்களின் சம்மதமும் அதுவே.

கங்கராயன் மகாவீரன். யுத்த களத்தில் அவனுக்கெதிராக ஒருவராலும் நிற்கமுடியாது. துங்கபத்திரைக் காடுகளில் சதா திரிந்துகொண்டிருப்பான். துஷ்டமிருகங்களை வேட்டையாடுவதிலும், அவைகளை நாய்க்குட்டிகளைப்போலத் தன்னிஷ்டப்படி பழக்குவதற்கும் அவனிடம் அமானுஷ்யமான திறமையிருந்தது. ஒரேவொரு கர்ஜனையினால் ஊரையே கதிகலங்கவைக்கும் அனேகம் சிங்கக்குட்டிகளைத் தன் குரலுக்கே பணியும்படியாக அடக்கியிருந்தான். அவனுடைய அசாதாரணமான இத்திறமை எங்கும் பரவியிருந்தது.

* * *

அடுத்த மூன்றாவது தினம் இரவு. அன்று நிறைமதி தவழும் தினம். அமுதம் பொழிந்த பால் நிலவின் ஒளியில் விருபாக்ஷன் கோயிலின் தங்கச் சிகரங்கள் பளீரென மின்னிக் கண்பறித்தன.

நல்ல நடுநிசி; கர்ப்பக்கிருகத்தில் ஒரேயொரு விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது. அவ்விளக்கின் ஒளியில் விருபாக்ஷனின் நெற்றிக்கண் நெருப்புக்கங்குல்போல் பளபளத்து ஒளி வீசியது. சிலையினெதிரே கரம் கூப்பிகக்கண்மூடி நின்றிருந்தான் கங்கராயன்.

விஜயநகரக் கோட்டையின் பெரிய மணி கணகணவென்றடித்து எதிரொலியைக் கிளப்பிவிட்டு அடங்கியது.

நடு நிசியாகிவிட்டது என்பதையுணர்ந்தான் கங்கராயன். கண்களை விழித்து விருபாக்ஷனெதிரில் நமஸ்கரித்தெழுந்தான். பின்பு வேகமாய்க் கர்ப்பக்கிருகத்தைவிட்டு வெளியே வந்தான். பிராகாரங்களில் நிழலும் ஒளியும் கலந்து படர்ந்திருந்தன. எங்கும் பரவியிருந்த ஆழ்ந்த அமைதி கங்கராயன் மனதில் ஒருவகையான பயம் கலந்த உணர்ச்சியையுண்டாக்கியது. விரைவாய் நடந்து கோயிலின் பிராகாரங்களையும் மதிற்சுவரையும் தாண்டி நந்தவனத்துக்குள் நுழைந்தான்.

மண்டிப் புஷ்பித்திருந்த மலர்ச் செடிகளிலிருந்து சுகந்தத்தையள்ளிக்கொண்டு உலாவிச் சென்றது மந்தமாருதம். ஆனால் தன் எண்ணங்களிலேயே லயித்திருந்த கங்கராயன் ஒன்றையும் கவனியாமல் துரிதமாய் நடந்து சென்றான். சற்றுநேரத்திற்கெல்லாம் அங்கேயிருந்த தாமரைக் குளத்தின் படித்துறையையடைந்தான்.

நிலவு வெளிச்சத்தில் குளத்தின் மேற்பரப்பில் உண்டான சிறுசலனம் உருக்கிய வெள்ளிக் குழம்பு ஓடிச்செல்வது போன்ற பிரமையை யுண்டாசகியது. அங்கங்கே மலர்ந்திருந்த ஜல புஷ்பங்கள் தென்றலில் இலேசாய்த் தலையசைத்தன.

கங்கராயன் வேகமாய்ப் படிகளிலிறங்கிக் கடைசிப் படியில் உட்கார்ந்து நீரில் தன்கால்களால் துளைந்தபடியேசிந்தனையிலாழ்ந்தான்.

விஜயநகர சாம்ராஜ்யம் அப்பொழுது இலேசாய் க்ஷீணமடைய வாரம்பித்திருந்தது. பாமினி சுல்தான்களின் அதிக்ரமித்த படையெடுப்புக்காரணமாக, எத்தனையோ வருஷங்களாக மகோன்னத நிலையிலிருந்து புகழ் மண்டிக்கிடந்த விஜயநகர சாம்ராஜ்யம், விஸ்தீரணத்திலும் செல்வப் பெருக்கிலும் குறைவு பெறலாயிற்று. நிம்மதியாகக் கவலையற்று வாழ்ந்துகொண்டிருந்த ஜனங்களை இப்பொழுது யுத்த பீதி யென்னும் பயங்கர நிழல் கவ்வலாயிற்று.

தேவராயனுக்கு அனாவசியமாக ரத்தம் சிந்துவது வெறுப்பைக் கொடுத்தது. பாமினி சுல்தான்களுடன் அனாவசிய யுத்தத்தை அவன் விரும்பவில்லை. எப்படியாவது சமாதானமாகப் போகவே விரும்பினான் அவன். அதற்காகத் தூது பேசுவதற்கு ஆட்களை அனுப்பியிருந்தான். அவர்கள் திரும்பிவந்து கூறியபதில் யாவரையும் திடுக்கிடச்செய்தது.

இளவரசி ரங்க தேவியின் ரூப சௌந்தர்யத்தையும் குண விசேஷங்களையும் பற்றிக் கேள்விப்பட்ட சுல்தான் பிரோஜ்ஷா, அவளைத் தம்முடைய மனைவியாய்க் கொடுத்தாலொழிய, விஜயநகரத்தை யுத்தத்தில் நிர்மூலமாக்கிவிடப் போவதாக நிபந்தனை கூறியனுப்பியிருந்தான்.

இனிமேல் யுத்தத்தைத் தவிர வேறு வழியில்லையென்ற முடிவுக்கு வந்தான் தேவராயன். யுவராஜாவான கங்கராயனுக்கு இதில் அளவற்ற சந்தோஷம். யுத்தத்துக்கு வேண்டிய எத்தனங்களெல்லாம் வெகு வேகமாக நடந்துகொண்டிருந்தன.

* * *

கங்கராயனின் பிடியிலிருந்து தன் கைகளை விடுவித்துக்கொண்டாள் ரங்கதேவி.

"நான் போய்வரட்டுமா?" என மெல்லக் கேட்டாள்.

"இவ்வளவு சீக்கிரமாகவா?"

"அதோ பாருங்கள்!" என்று கீழ்வானைச் சுட்டிக் காட்டினாள் இளவரசி. திரும்பிப் பார்த்தான் கங்கராயன்.

உதயத்தின் வெண்புரை ஓடிக்கொண்டிருந்த வானின் கிழத் திசையில் விடிவெள்ளி உதித்திருந்தது.

"ஏயப்பா! எவ்வளவு சீக்கிரம் நேரம் கழிந்துவிட்டது! ....வா! ....போவோம்!" என்று கூறிக்கொண்டே தடாகத்தின் படிகளில் ஏற எத்தனித்தான் கங்கராயன்.

"ஒரேயொரு விஞடி! அதோ கரையோரமாக மெல்ல மெல்ல முகிழ் விரிக்கின்றதே, அந்தப் பெரிய செந்தாமரை மலரை மட்டும் எனக்குப் பறித்துக் கொடுங்கள்" என்று கேட்டாள் ரங்கதேவி.

சட்டென்று திரும்பிய கங்கராயன் கைக்கு எட்டிய அம்மலரைத் தண்டுடன் பறித்து அவளிட மளித்தான்.

"எத்தனை பெரிய புஷ்பம்?" என்று ஆச்சரியத்துடன் மொழிந்துகொண்டே பாதி விரிந்தும் விரியாமலுமிருந்த அந்தத் தாமரை மலரைக் கையில் பெற்றுக்கொண்டாள் கட்டழகி.

"அதே விஞடி நிசப்தமாயிருந்த அவ்வமைதியைக் கலைத்துக்கொண்டு "உர்! ...உம்...ம் ...உர்...ர்! ......உர்ர்!" என்ற இடிமுழக்கம் போன்ற பெருங் கர்ஜனை யொன்று அவர்கள் செவிகளில் வந்து தாக்கியது. "உர்ர்...உர்ர்!"

திடீரென்று ஏற்பட்ட அச்சத்தினுல் பதறிய உடலுடன் கையிற் பிடித்திருந்த புஷ்பத்தைக் கீழே நழுவவிட்டுவிட்டாள் இளவரசி; அவள் விழிகள் பயத்துடன் நாற்புறமும் மருண்டு நோக்கின.

அவளுடைய கரங்களைச் சட்டென்று பற்றிக்கொண்ட கங்கராயனின் முகத்தில் புன்சிரிப்பின் ரேகையொன்று படர்ந்தது.

"ரங்கதேவி! அதிகம் பயந்துவிட்டாயா, என்ன?" என்று கேட்டான்.

"ஆம், பிரபு. நிச்சயமாய் நடுங்கியேபோய் விட்டேன்! ......ஏயப்பா! இதுதான் நீங்கள் புதிதாகப் பிடித்திருக்கும் சிங்கம்போலும்! கர்ஜனை செய்யும் பொழுதே என் உயிர் நடுங்குகிறதே! நீங்கள் எப்படித்தான் அவற்றை இவ்வாறு சொன்னபடியெல்லாம் கேட்குமாறு பழக்குகிறீர்களோ?" என்று ஆச்சரியத்துடன் மொழிந்துகொண்டே கீழே கிடந்த புஷ்பத்தைக் கையிலெடுத்துக்கொண்டாள் இளவரசி.

"எல்லாம் விருபாக்ஷன் அருள்! ரங்கதேவி! அவள் அருளால் நான் பாமினி சுல்தானைப் பணியவைக்கிறேன் பார்! உன்னையா அவன் கேட்கிறுன்! இந்தச் சிம்ஹநாதத்தைக்கேட்டே அவன் திகிலினுல் பணிந்து போகும்படி செய்கிறேன்! இல்லாவிட்டால் நான் கங்கராயனில்லை! விருபாக்ஷன் கிருபை எனக்குப் பரிபூரணமாக இருக்கிறதென்னும் நம்பிக்கை உண்டு. சுல்தானைப் பணிய வைக்கிறேன் பார்! விஜயநகரின் கீர்த்தி முன்னைக்காட்டிலும் ஓங்கப்போகிறது!"

தாழ்ந்த குரலிற் பேசினுனுலும் அவனுடைய குரலிற் பொங்கிய உணர்ச்சி ரங்கதேவியை அதிசயிக்கச் செய்தது. பிரமிப்புடன் அவனைநோக்கினுள் அவள்.

"உர்ர் ...! உர்ர்! ... உர் ... ர் ... !"

மீண்டும் மேக கர்ஜனையையொத்த அச்சிம்ஹநாதம் ஆகாயத்தைப் பிளந்துகொண்டு வந்து அவ்விடத்தில் எதிரொலித்தது.

இம்முறை இளவரசி பயப்படவில்லை. கங்கராயனுடைய பிடியில் தைரியமாகவேயிருந்தாள்.

இருவரும் படிகளிலேறி நிசப்தமாயிருந்த கோயிலுக்குள் நுழைந்தார்கள்.

3

கதிரோனின் பொற்கோளம் ஆகாயத்தில் மேலெழும்பும் தருணம் கங்கராயன் இளவரசியை அந்தப்புரத்தில் கொண்டு போய் விட்டுவிட்டுத் தன் சகோதரனின் அரண்மனைக்குள் நுழைந்தான்.

ஏதோ சிந்தனையிலாழ்ந்திருந்த தேவராயனின் கவலை குடிகொண்ட முகம் தம்பியைக் கண்டதும் சிறிது மலர்ச்சியடைந்தது.

"வா, தம்பி!" என்று அவனை அன்போடு வரவேற்றுன்.

மன்னனை வணங்கி ஆசனத்திலமர்ந்தான் கங்கராயன்.

நெடுநேரம்வரையில் இருவரும் தாழ்ந்த குரலில் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

கடைசியில் போவதற்கு எழுந்தான் கங்கராயன்.

"தம்பீ! என்றுன் தேவராயன். "உண்மையாகவே நீ கூறுவது நடக்கக்கூடியதா?" என்று கவலைதோய்ந்த குரலிற் கேட்டான்.

"ஆம், அண்ணு! விருபாக்ஷன் கிருபையில் கண்டிப்பாய் நடக்கும்!" என்று அழுத்தமான குரலில் நம்பிக்கை த்வனிக்கக்கூறிவிட்டு எழுந்தான் கங்கராயன்.

அவன் விடுதியைவிட்டு வெளியே போகும் பொழுது இடிமுழக்கம் போன்ற கர்ஜனை

அவன் செவிகளில் விழுந்தது.—சட்டென்று ஒரு விநாடி நின்றான். அவன் முகத்தில் புன்னகை யொன்று நிலவியது. திரும்பித் தன் சகோதரனைப் பார்த்தான்.—அசைவற்று நின்றுகொண்டிருந்தான் அவன்.

"இதுதான் நீ புதிதாகப் பிடித்துவந்திருக்கும் சிம்ஹமா?"

"ஆம்!" என்று பெருமிதத்துடன் பதிலளித்தான் கங்கராயன்.

மீண்டும் "இந்தச் சிம்ஹநாதத்திலேயே பாமினி சுல்தானைப் பணியவைக்கிறேன், பாருங்கள்!" என்று கூறிவிட்டு விரைவாக அங்கிருந்து போனான்.

4

கிருஷ்ண பட்சத்து இரவு முன்னேரம். விஜயநகரத்தின் எல்லைக்கு வெளியே கும்மென்ற காட்டுப்பாதையில் வாயுவேகமாக வந்துகொண்டிருந்தனர் மூன்று வீரர்கள். அவர்களைச் சுமந்துகொண்டிருந்த குதிரைகளின் வாயில் நுரை தள்ளியது.

முதலில் வந்துகொண்டிருந்த வீரன் குதிரையைச் சட்டென்று நிறுத்தினான். பின்னால் வந்துகொண்டிருந்த இரு குதிரைகளும் உடனே நின்றன.

"ரஜாக்! காஸிம்!"

"ஏன் பாதுஷா?"

"இனிமேல் நான்மட்டும்தான் தனியே செல்லவேண்டும்!" என்றான் பாமினி சுல்தான் பிரோஜ்ஷா.

"கங்கராயனை நம்பலாமா, பாதுஷா?" என்று கேட்டான் ரஜாக்.

"நம்பத்தான் வேண்டும்! அப்படி ஏதாவது சதி நடந்தால் என்னுடைய வாள் இருக்கிறது!" என்று தோளைத்தட்டினான் சுல்தான்.

மற்ற இருவரும் ஒன்றும் பேசாமல் ஒருவரை ஒருவர் நோக்கினர்.

"இரண்டு மணி நேரத்தில் திரும்பிவிடுவேன்!" என்று கூறிவிட்டுக் குதிரையுடன் இருளில் மறைந்தான் சுல்தான்.

* * *

விருபாக்ஷன் கோயிலுக்குப் பின்னால் பயத்துடன் நின்றிருந்தாள் ரங்கதேவி. அருகே நின்றிருந்த கங்கராயனின் கரத்தைக் கெட்டியாய்ப் பற்றியிருந்தாள் அவள். அடிக்கடி அவளுடைய கருவிழிகள் இருளை ஊடுருவி நோக்கின. அவர்களுக்குச் சற்று தூரத்தில் நின்றிருந்தான் திம்மப்பன். அவன் கையில் பிடித்திருந்த இருப்புச்சங்கிலி கலகலவென ஓசை செய்தது. அவ்வோசை காதில் படுந்தோறும் இளவரசியின் உடல் இலேசாய் நடுங்கியது.

"பயப்படாதே! ஒன்றும் நேரிடாது!" என்று அவளைத் தைரியப்படுத்தினான் கங்கராயன். "ரங்கதேவி! உன்னைத் தனக்குக் கொடுக்குமாறு துணிச்சலுடன் கேட்டானில்லையா? அதற்காக அவனை என்னுடைய சிங்கத்தின் மூலம் பயமுறுத்திவைக்கப் போகிறேன். அவ்வளவுதான்! சிங்கம் அவனை ஒன்றும் செய்யாது! நானில்லையா, அருகில்?" என்றான். அதேவிநாடி தூரத்தே கேட்டது குதிரையின் குளம்போசை.

இளவரசியின் உடல் அச்சத்தினால் குலுங்கியது. கங்கராயனருகில் நெருங்கி நின்றுகொண்டாள் அவள்.

"பிரபு! சுல்தான் வருகிறார்!" என்று எச்சரித்தான் திம்மப்பன்.

"தெரிகிறது! நீ தயார்தானே!" என்று கேட்டான் கங்கராயன்.

"ஆமாம்" என்று கையிலிருந்த சங்கிலியை இழுத்துப்பார்த்தான் திம்மப்பன்.

"சங்கிலி கெட்டியாக இருக்கிறதா? பத்திரம்! தவறு செய்துவிடாதே!" என்றான் கங்கராயன்.

உர் ... உர்ர்! ... ... ர்! என்று லேசான சப்தம் சமீபத்திலேயே கேட்டது.

இருளில் லேசாகப் புன்னகை செய்தான் கங்கராயன்.

குதிரையின் குளம்போசை சமீபித்துக் கொண்டே வந்தது.

இருளை ஊடுருவிப் பார்த்தவண்ணம் மூவரும் அசைவற்று நின்றனர்.

5

உர்! ... உர்ர்! ... ர்ர்!

"ஐயோ! ... அல்லா! சிங்கம்! ... சிங்கம்!" என்று கூவினான் பாமினி சுல்தான். "ஓ! அல்லா! ..."

"உர்ர்! ... உர்ர்! ..." என்ற பெரும் கர்ஜனை ஆழ்ந்த அவ்விரவின் அமைதியைப் பிளந்து பயங்கரமாய் எதிரொலித்தது.

அதைத்தொடர்ந்து கனத்த இரும்புச் சங்கிலிகளின் கலகலவென்ற ஓசை.

"திம்மப்பா!......... ஜாக்கிரதை!" என்று கூறினன் கங்கராயன்.

"ஆம், பிரபு!........... ஜாக்கிரதையாக இருக்கிறேன்!"

மீண்டும் "......உர்ர்!......உர்ர்!.........ர்!" என்ற கர்ஜனை.

அதைத் தொடர்ந்து, "...ஐயோ...பிரபு! ......சிங்கம்!......அருகில் வந்துவிட்டது!...... ஐயோ!......ஐயோ!'...... என்று அளவற்ற திகிலுடன் அலறினுள் இளவரசி. சுல்தான் மேல் பாய்கிறது!......ஐயோ! ஐயோ!"

"ரங்கதேவி! ஒன்றும் நேரிடாது; நான் அருகிலேயே இருக்கிறேன் கவலைப்படாதே!" என்று தாழ்ந்த குரலில் விடையளித்தான் கங்கராயன்.

மீண்டும் குதிரைக் குளம்புகளின் பட் பட் டென்ற ஓசை. "சிங்கம்! சிங்கம்! ஓ! அல்லா" என்று சுல்தானின் குரல் அமானுஷ்யமாக ஒலித்தது.

மீண்டும் ஓவென்று அலறியபடியே கங்க ராயனின் தோளிற் சாய்ந்து மூர்ச்சையாய் விட்டாள் ரங்கதேவி.

* * *

விரூபாக்ஷனின் முகம் தூங்கா விளக்கின் ஒளியில் கருணைக்கே இருப்பிடமாய் விளங்கியது. அபயஹஸ்தம் உயரத் தூக்கப் பட்டிருந்தது.

எதிரே கரங்கூப்பி நின்றூர்கள் ரங்கதேவி யும் கங்கராயனும். அவர்களுக்குப் பின்னல் நின்றிருந்தான் திம்மப்பன்.

வெளியே உதயத்தின் மனேகரம் பரவிக் கொண்டிருந்தது. தரையிற் பணிந்து நமஸ்கரித்துவிட்டு மூவரும் வெளியே வந்தார் கள். பிராகாரங்களைக் கடந்து செல்லுகை யில் "ரங்கதேவி!......... இப்பொழுது என் வார்த்தையை நம்புகிறுயில்லையா?" என்று மெதுவாய்க் கேட்டபடியே அவள் கரத்தை அழுத்தினன் கங்கராயன்.

இளவரசியின் முகம் சிவந்தது. "ஆம், பிரபு, நம்புகிறேன்," என்று கூறியபடியே பின்னல் வரும் திம்மப்பனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவர்களைக் கவனியாதவன் போன்று மறு பக்கம் திரும்பிக்கொண்டான் திம்மப்பன். கருங்கல்லில் செதுக்கப்பட்டது போன்ற அவன் முகத்திலும் புன் சிரிப்புப் படர்ந்தது.

"சிங்கத்தைப் பிணைத்துவிட்டாயா ?" என்று கேட்டான் கங்கராயன்.

'பிணைத்துவிட்டேன் பிரபு!" என்று அவன் கூறியதை ஆமோதிப்பதேபோன்று தூரத்திலிருந்து, உர்ர்! ... உர்ர்ர்! என ஆகாயத்தைப் பிளந்து சென்றது சிம்ஹ கர்ஜனை. சற்றுப் பொறுத்துத் தாழ்ந்த குரலில் "பாமினி சுல்தான் பாதிதூரம் திருப்பிப் போயிருப்பார்!" என்றுன் கங்க ராயன்.

'ஆமாம்," என்றுன் திம்மப்பன். மீண்டும் புன்சிரிப்பு அவன் உதட்டில் படர்ந்தது.

"சிம்ஹநாதம் சுல்தானை அலறச்செய்து விட்டது!" என்றுன் கங்கராயன்.

இளவரசி ஒன்றும் பேசாமல் அவனை வியப்புடன் நோக்கினுள்.

6

"அண்ணு! பிரோஜ்ஷாவிடமிருந்து, நாம் கூறும் நிபந்தனைப்படி சமா தானமாப் போகத் தயாராயிருப்பதாகத் தெரிவிக்கத் தூதன் வந்திருக்கிறுன்!" என் றுன் கங்கராயன்: அவன் குரலில் பெருமிதம் ஒலித்தது.

"எல்லாம் விரூபாக்ஷன் அருள்" என்று தூரத்தே தெரிந்த கோயிலின் சிகரத்தை நோக்கிக் கரங்கூப்பினுன் தேவராயன்.

சந்தியாகால பூஜை மணியுடன் சேர்ந்து ஒலித்தது அவன் குரல். அதைத்தொடர்ந்தே உர்! ... உர் ர்! என்ற சிம்ஹ கர்ஜனை.

பட்டண பெருமை

கே. எம். முன்ஷி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு—''சேதி''

பந்தயம் தோற்றது

மீனல் தேவி முஞ்ஜால் வழியை விட்டு யதியை அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டதற்குப் பல காரணங்கள் உண்டு, எதிர்பார்த்து எதிர்பார்த்து அவள் சலித்திருந்தாள். அதிகாரத்தை ஒருமுகப்படுத்துவது என்பது எவ்வளவு கடினம் என்பது அவளுக்குத் தெரியவில்லை. மற்றும் ஒரு காரணம் உண்டு. அதை அவள் தன்னிடம் சொல்லிக்கொள்ளவே நாணமடைந்தாள். பிள்ளைப் பருவத்திலிருந்தே அவள் அவனிடம் அன்பும் மரியாதையும் வைத்திருந்தாள். என்றாலும் அவன் பெருமையும் புத்திக்கூர்மையும் ஜனங்கள் அவனிடம் வைத்திருக்கும் அன்பும் அவளிடம் பொறாமையை எழுப்பிவிட்டிருந்தன. அந்த ராஜ்யத்தில் மீனல்தேவின் இருப்பே முஞ்ஜாலின் அரசியல் திறமையால்தான் என்ற நிலையை மாற்றி அவள் தானே உண்மை ராணியாகி முஞ்ஜாலுக்குத் தன் திறமையைக் காட்ட விரும்பினாள். தவிரவும் யதியின் உபதேசமும் அறிவுரையும் தர்மாவேசமும் அவளுக்கு உபகாரமாகும் என்று பட்டன. ஆகவேதான் அவள் இந்த வழியில் தன் தேரைச் செலுத்த ஆரம்பித்தாள்.

கூடவே, மதுபுரி அனுப்பப்பட்டவுடன் முஞ்ஜால் கோபிப்பான், ராணியிடம் கெஞ்சுவான், தான் அவனை இன்னும் கொஞ்சம் வருத்தலாம், பிறகு வருத்தம் நீங்க வார்த்தைகள் பேசலாம் என்றெல்லாம் சில ஆசைகள் அவள் கர்வம் உண்ட மனதில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. ஆனால் முஞ்ஜாலோ, இருவருக்குமிடையே 'பதவி வித்யாஸத் திரை'யை இட்டுவிட்டான். அதைக்கண்டு அவள் திடுக்கிட்டுப் பின்னடைந்தாள். பதின்மூன்று வருஷங்களாகப் பக்கத்திலிருந்த முஞ்ஜால் விலகித் தனித்து நிற்பது அவளுக்கு ஒரு புது அனுபவமாகப் போய்விட்டது. ஆனால் அவள் இதயம் வீர இதயம்; சங்கடத்தைக் கண்டு துள்ளி எழும் இதயம். அவள் நன்றாய் யோசித்தாள். 'நல்லதாய்ப் போயிற்று. தேவப்ரஸாத் கோட்டைக்குள் அடைக்கப்பட்டுவிடுவான். அவன் சேனை மேரளத்தில் இருந்துவிடும். இனி அவனைப்பற்றிய கவலையில்லை. முஞ்ஜாலும் மதுபுரிசென்று ஒன்றும் செய்யமாட்டான். இருந்தாலும் மேரளத்தின் சேனை அவன் சொற்படி கேட்கும். கொஞ்ச நாள் அவனை இப்படியே விட்டுப் பிறகு இரண்டு சேனைகளையும் சேர்த்து மாளவ ராஜ்யத்தின்மேல் படையெடுக்கலாம். கைதியான மண்டலேசுவரனையும் தன் நிபந்தனைகளுக்கு உட்படுத்தி வசம் செய்துகொள்ளலாம். சந்திராவதியிலிருந்து அவன் வரவழைத்த சேனையைத் தேகஸ்தல மண்டபத்தில் தண்டு இறங்கச்செய்யலாம். தேவப்ரஸாதும் வழிக்கு வந்துவிடுவான். இல்லாவிட்டாலும் தேவப்ரஸாதை வேண்டும்போது ஒரே நொடியில் பட்டணில் அடைத்துவிடலாம்' என்றெல்லாம் ராணி மனக்கோட்டை கட்

(ஹிந்திப்பிரதி பிரசுர கர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச் சார்ந்த க. ஸ்ரீ நாதுராம் பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

டினுள். அவளுக்கு இவைகள் எல்லாம் சுலபமாகவே தென்பட்டன. அதிகாரக்கனி யின் கனவின்பச்சுவை கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகத்தையும் விலக்கிவிட்டது. ஆனல் முஞ்ஜால் செல்லும்போது என்ன சொல்லிச் சென்ருன்?

"மகாராணி சேட் சாந்தி சந்திரன் வந்துள்ளார்." தாஸி எண்ணக்கோவையை அறுத்துவிட்டாள்.

"வாருங்கள் சாந்தி மேத்தா!" சாந்தி சந்திரனின் முகத்தில் வருத்தக் குறிகள் கோடிட்டு நின்றன. "ஏன்?" என்று கேட்டாள் ராணி.

சாந்தி சந்திரன் வயதானவர்; நம்பிக்கைக்கு உகந்தவர்; நற்குணமுடையவர்; தர்மநிஷ்டர். எல்லையற்ற பணம் சேர்த்து அரசாங்கப் பொக்கிஷத்தையும் காப்பாற்றியவர். அவர் பட்டணின் வழி வழி வந்த மந்திரி. சந்திராவதியில் அவருக்குத் தேவதைக்குள்ள மதிப்பு உண்டு.

"ஒன்றுமில்லை. மகாராணி, பட்டண் வாயில்கள் இப்பொழுது மூடப்பட்டு விடும். ஒவ்வொரு வாயிலிலும் மிகவும் நம்பிக்கையுள்ள காவற்காரர்களே இருக்கிருர்கள்"

மீனல் தேவி: "ரொம்ப சரி. கவலைவிட்டது."

"தேவப்ரஸாத் சிக்கியபிறகுதான் நிம்மதி ஏற்படும்."

"அவன் மாட்டி இருப்பானே!"

"ஆம். இதோ சமாச்சாரமும் வந்துவிடும்."

"ஏன்? ஒருகால் ஓடிவிடுவானென்று பயப்படுகிறீர்களா?"

"இல்லை. பயம் எதற்கு? ஆனலும் மண்டலேசுவரன் கெட்டிக்காரன்." மீனல்தேவி பறந்தாள்: "நீங்கள் ஏதோ சொல்ல விரும்புகிறீர்கள்?" சேனதிபதி கொஞ்சம் கலங்கிச் சொன்னர்: "ஒன்றும் விசேஷமில்லை!" மீனல் தேவி புருவம் நெளிந்தேறச் சொன்னள்: "ஒன்றும் விசேஷமில்லாமற்போனலும் சொல்லுங்கள்!"

"ஒன்றுமில்லை. முஞ்ஜாலும் தேவப்ரஸாதும் மோதி சௌக்கில் சந்தித்தனர். அங்கே யார் முன்னே போவதென்று சண்டை ஏற்பட்டது?"

மீனல்தேவி கவலைக்குறி பறக்க—"பிறகு என்ன நடந்தது?"

"பிறகு சண்டை அடங்கிற்று. காலை மறுபடி சந்திப்பதாகப் பேச்சும் நடந்து விட்டது."

மீனல் தேவிக்குக் கவலை அதிகமாயிற்று. பதற்றத்துடன் கேட்டாள்:

"ஏன் இதுவரை சொல்லவில்லை? எங்கே சந்திக்கப்போகிருர்களாம்? பிறகு சண்டையிட்டார்களா?"

"இல்லை, சண்டையிடவே யில்லை. உடனே மண்டலேசுவரன் இங்கேவந்துவிட்டார்."

ராணிக்குப் பளீர் என்று விஷயம் விளங்கி விட்டது. முஞ்ஜால் தான் தேவப்ரஸாதை இங்கே அனுப்பி யிருக்கவேண்டும். அவன் வேகமாய்த்திரும்பியதிலிருந்து கதவு மூடும் விஷயமும் தெரிந்திருக்கவேண்டும். இவை எல்லாம் முஞ்ஜால் வேலைகள் தான்.

"பிறகு நீங்கள் என்ன செய்தீர்கள்?"

"பிறகு என்ன செய்வது? வில்லாளிகளிடம் சொல்லிவந்திருக்கிறேன்; தேவப்ரஸாதை எவ்விதத்திலும் வெளியேருமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று. மண்டலேசுவரன் விஷயம் இப்பொழுது தெரிந்துவிடும்."

"சரிதான், அவன் எங்கேபோய்விடுவான்? வேறு ஒன்றும் பயமில்லையே?"

"வேறு என்ன பயம் மகாராணி! நம்பிக்கைக்குரிய வீரர்கள் அரண்மனை முழுவதும் பகல் இரவாகப் பாராக் கொடுக்கிருர்களே!"

"இல்லை, ஏதோ சூழ்ச்சி நடக்கிறதென்று கேள்விப்பட்டேன்."

கொஞ்சம் பதற்றத்துடன் சாந்தி சந்திரன், "அதற்கு யாருக்குத் தைரியம் உண்டு?" என்று கேட்டுவைத்தார்.

வெளியிலிருந்து குரல் கேட்டது: "மகாராணி, நான் உள்ளேவரலாமா?"

"யார் அது, வைத்தியரா? வாரும்; சொல்லும். என்ன சமாசாரம்? ஏன் இவ்வளவு பெருமூச்சு வாங்க ஓடிவந்திருக்கிறீர்?"

வைத்தியர் துப்பட்டாவினல் துடைத்துக் கொண்டு சொன்னர்: "மகாராணி, என் மாப்பிள்ளை வாசஸ்பதி ஒரு சமாச்சாரம் கொண்டுவந்திருக்கிருர். நம்பக்கூட மனம் வரவில்லை. உங்களிடம் சொல்லலாம் என்று ஓடிவந்தேன். அவர் சொல்லும் விதத்திலிருந்து ஏதோ முக்கியமான சமாச்சாரம் தெரிவிக்க வந்திருக்கிருர் என்று தெரியவந்தது. சேட் இருக்கும்போது சொல்வதில் தடையொன்றுமில்லையே!"

"பரவாயில்லை; சொல்லும்."

"மகாராணி! சில மண்டலேசுவரர்கள் குமார் ஜயதேவைக் கர்ணுவதிக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்திருக்கிருர்கள்."

'நான் முந்தி',
'நான் முந்தி' என்று
அனைவரும்
போட்டிபோடுகிறார்கள்

ஹமாம் ஸோப்புத் தேய்த்து
அவர்கள்
அன்றாட ஸ்நானத்திற்கு



ஹமாம் ஸோப்பு

தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்

சாந்திசந்திரன் கொஞ்சம் பதறி "அப்படியா!" என்றார்.

"நான் அறிவேன்" என்றாள் ராணி. அவள் குரலில் அதிகாரம் அமைதியை அடையும் முயற்சி தென்பட்டது.

சாந்திசந்திரன்: "ராணி! நீங்கள்கூட அறிவீர்களா?" என்றுகேட்டார்.

"ஆம், நான் அறிவேன். சேனாதிபதியாகிய உங்களுக்குத் தெரியாதா? அது இருக்கட்டும். எப்படிஎப்பொழுது என்று யாருக்காகிலும் தெரியுமா?"

லீலாதரர்; "அது ஒருவருக்கும் தெரியாது, இந்தச் சமயம் மட்டும் முஞ்ஜால் மேதா இருந்தால்..."

ராணியின் கோபம் கொஞ்சம் படபடக்க வைத்தது. அவள் இதயத்தில் எழுந்த எண்ணத்தையே லீலாதரர் சொன்னார். அது யாருக்குத்தான் பிடிக்கும்?

"இங்கிருக்கிறவர்கள் எதற்காக இருக்கிறார்களாம்!"

"மகாராணி தேவி! நான் கிழவன். மருந்தரைத்தே என் வாழ்க்கை கழிந்துவிட்டது. நான் என்ன கண்டேன், பட்டணத்து ஜனங்கள் சொல்கிறார்கள்: "முஞ்ஜால் மேதாவை வெளியேற்றியது நல்லதற்கல்ல என்று"

"உன் பட்டண் ஜனங்களிடம் சொல்; அவர்கள் தங்கள் வேலையைச் செய்துவரட்டும். எனக்கு என் வேலை தெரியும்."

"அது யார் இல்லை என்கிறார்கள், தேவி! ஏதாவது கஷ்டம் ஏற்பட்டுவிட்டால்...?"

ராணி கர்வத்துடன் சொன்னாள்; "ஏற்பட்டால் ராணி உம்மையும்சேர்த்துக் கவனித்துக்கொள்வாள்."

"மகாராணி! நான் மூன்று தலைமுறையாக ஸோலங்கி வம்சத்துக்கு ஏவல்புரிந்து வருகிறேன். ஏதாவது அவசரத்தில் வார்த்தை தவறி வந்தாலும்மன்னிக்க வேண்டும். இவைகளுக் கெல்லாம் முடிவு நன்றாய் இருக்காது" மிகவும் தைரியத்துடன் சொல்லிவிட்டு, கிழ வைத்தியர் சரீரத்தில் எழுந்தவியர்வை நீரைத் துடைக்க ஆரம்பித்தார்.

"ரொம்ப சரி. பார்த்துக்கொண்டேயிரும்; எல்லாம் சரியாய்ப் போகும்."

தாஸி குறுக்கிட்டாள்: "மகாராணி! ஆனந்தசூரி எழுந்தருளியிருக்கிறார்"

ராணி ஆவலுடன் "அனுப்பு. அவர்தான் வேண்டும்" என்று பறந்தாள்.

கவசம்அணிந்து தலைப்பாகையில் மறைந்து மாறிக்காட்டும் முகத்தோற்றத்துடன் ஜைன மகாத்மா உள்ளே வந்தார்,

"யாரது? ஆனந்தசூரி அவர்களா?"

முகத்தை மறைக்கும் பாகையைக் கொஞ்சம் உயர்த்திக்கொண்டே, "ஆம் தேவி! தாயே! நான்தான். காரணமாகத்தான் வேஷம் போட்டேன்" என்றார் யதிமகராஜ். சாந்தி சந்திரரும் லீலாதர வைத்தியரும் வாயால் இந்த அதிசயத்தைப் பருகிக் கொண்டிருக்கும்போதே, யதி— "தாயே குறிப்பிட்டநேரம் வந்துவிட்டதே!" என்றார்.

மூவரும் "என்ன?" என்று கேட்டனர்.

"மண்டலேசுவரன் அரண்மனைக்கு வந்தார் என்று தெரிந்தபோது அவரும் முஞ்ஜாலும் ஏதோ ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். நானும் வேஷம் மாற்றி மண்டலேசுவரரைத் தொடர்ந்தேன். மாண்டேரி வாயிலுக்குப்போக முதலில் சாம்பானேரி வாயிலைத் தாண்ட வேண்டும். அது மூடியிருந்ததைப் பார்த்த மண்டலேசுவரன் பாதையை மாற்றி அங்கிருந்து ஒரு மேட்டின்மேல் ஏறி, தற்காப்புக்குக் கட்டப்பட்டிருந்த கரையைக் குதிரையுடன் தாண்டிவிட்டார்.

மூவரும் ஒரே சமயத்தில் "என்ன—என்ன?" என்று சத்தமிட்டனர்.

"என்ன என்ன? நாம் பேசிக்கொண்டே இருந்தோம். மண்டலேசுவரர் கையைவிட்டுப் போய்விட்டார்!"

நால்வரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

ராணி யதியைப்பார்த்துக் கேட்டாள்: "அப்படிஎன்றால் அவரும் முஞ்ஜாலும் அவசியம் சேருவார்கள் என்று சொல்லும்."

வைத்தியர்: "நான் சொன்னேனில்லையா, மகாராணி!"

"சரிதான் சொல்லிவிட்டீரல்ல. போதும் அதை ஞாபகப்படுத்தவேண்டாம்."

ராணி: "இப்பொழுது என்ன செய்வது? நாளை இருவரும் சேர்ந்து மேரளமதுபுரி சேனைகளும் ஒன்றாகிவிட்டால் பிறகு சாவு தான்."

சாந்தி: "ஆம்! திரிபுவன்பாலன் என்ன ஆனான்?"

யதி: "அவன் அநேகமாகப் பட்டணத்தில் தான் இருக்கிறான்."

சாந்தி: "அவனையாவது கையில்போட்டுக் கொள்ளவேண்டும்." எல்லோருக்கும் இந்த உபதேசம் ஹிதமாகப்பட்டது.

ராணி "அது சரிதான். அவர்கள் இருவரும் எப்படியும் சேரக்கூடாது."

சாந்தி: "அதை எப்படிச்செய்வது?"

யதி: "ஒருவழி இருக்கிறது. நீங்களும் ஜயதேவனும் மதுபுரி சென்றால் ஒருகால் முஞ்ஜால் தங்கிவிடுவான்."

சாந்தி: "மகாராணி பயமில்லாமல் செல்ல முடியுமா?"

யதி: நான் இல்லையா? பயம் என்ன? சந்திராவதியின் சேனை என்னுடன் இருக்கிறது. மூன்று நாள்கூட ஆகவில்லை; நான் சந்திராவதிக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். இன்னும் ஒரு சேனையும் தயாராகிறது; வந்து சேர்ந்துவிடும்.'

வைத்: "அது சரிதான். ஆனால் பட்டண் வாசிகள் விஷயமறிந்துகொண்டால்? ஏற்கனவே எங்கும் சந்தேகமும் பதற்றமுமாயிருக்கிறதே!"

சாந்: "அது இன்று மாலை ஆனவுடனேயே புறப்பட்டால்தானே முடியும்."

ராணி: "ஆனந்தசூரி, நீர் சொல்வதுதான் சரி. தற்சமயம் நாம் இரு பறவைகளைக் கை நழுவ விட்டுவிட்டோம். இவர்கள் இருவரும் சேர்ந்துவிட்டால் நாம் கட்டிய வீடு இடிந்து விழவேண்டியதுதான். அதைக் காப்பாற்ற யதி சொல்லும் வழி ஒன்றுதான். இதனால் மற்றொரு லாபமுமுண்டு."

சாந்தி: "அது என்ன?"

"வைத்தியர் சொன்னது உண்மையானால் அந்தச் சூழ்ச்சியிலும் தப்பலாமல்லவா? ஆனால் பட்டண் என்ன ஆகும்?"

யதி: "ஏன் இங்கேதான் சாந்திசந்திரர் இருக்கிறாரே!"

வைத்: மகாராணி! கொஞ்சம் உஷாராயிருக்கவேண்டும். பட்டண்வாசிகளை அதிகம் நம்பக்கூடாது."

ராணி மின் ஒளி பாயும் கண்களால் பார்த்துவிட்டுக் கேட்டாள்: "பட்டண்வாசிகள் என்ன செய்துவிடுவார்கள்? வைத்தியரே! உமக்கு மனிதர்களிடம் பயம் அதிகமாயிருக்கிறதே!"

"ஆம், ஆனால் மண்டலேசுவரர் மேரளத்துச் சேனையுடன் இங்கே வந்துவிட்டால்?"

யதி: "என்ன? சாந்தி சந்திரன் இரண்டு நாளைக்குக்கூடப் பட்டணைக் காப்பாற்றமாட்டாரா?"

சாந்தி: "யதிஜீ! நீங்கள் தெரியாமல் சொல்லுகிறீர்கள். ஸோலங்கிகள் படையெடுத்து வந்தால் பட்டண் வாசிகள் கோட்டைக்கதவு மூடியிருக்க விடமாட்டார்கள் ஒரு மணி நேரத்துக்குக் கூட!"

"சரி, நான் யோசனை செய்கிறேன். சாந்தி மேதா! நீர் சென்று திரிபுவன்பாலைச் சொல்லி அழைத்து வாரும் இங்கே!"

"தங்கள் கட்டளைப்படியே!"

"வைத்தியரே! நீர் வீட்டுக்குப் போகலாம். உம் உதவியும் வேண்டியிருக்கலாம்."

மூவரும் செல்ல ராணி தனித்து நின்றாள். அவள் புத்தி சுழலில் அகப்பட்டுக்கொண்டிருந்தது. க்ஷண நேரத்தில் எல்லாப் பக்கங்களிலிருந்தும் உபத்திரவம். ஆஹா! இந்தச் சமயத்தில் முஞ்ஜால் இங்கே இருந்தால்...? சை! முஞ்ஜால் இல்லாவிட்டால் வாழவே முடியாதா?" கையில் தலையைத் தாங்கி அவள் வெகுநேரம் யோசித்தாள். இதுவரை எல்லாம் அமைதியாய் நடந்துவந்தது. சக்கரவர்த்தினி யாவதற்காகவே அவள் இந்த நெருப்பை மூட்டியிருந்தாள். இந்த நெருப்பு இப்பொழுது அவள் வீட்டையே பொசுக்க ஆரம்பித்துவிட்டது போல் தோன்றிற்று. எங்கே போவது? யாரிடம் உதவி கேட்பது? மிகவும் கஷ்டப்பட்டு யோசனை செய்ததின் மேல் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். எப்படியாவது மண்டலேசுவரனைச் சில தினங்களுக்காவது சும்மா இருக்கச் செய்யவேண்டும். அவன் பட்டண் பக்கம் வரவோ, அல்லது முஞ்ஜாலுடன் சேரவோ கூடாது. என்ன செய்வது? திடீரென்று ஒரு மின்னல் மின்னிற்று. இருண்ட மேகத்தைக் கிழித்து ஒரு சூரிய ஒளி வெளியேறிற்று. ராணியின் கண்கள் ஒளி பறந்தன. உதடுகள் அழுங்கின, முகத்தில் ஒரு பயங்கரச் சிரிப்பு விளையாட ஆரம்பித்தது.

"ஆம். நான் என் பிர்மாஸ்திரத்தை மறந்தேவிட்டேனே!" மீனல் எழுந்தாள். உள்ளே சென்ருள். அவள் பூசை அறைக்குப் பின்னுல் ஒரு அறை இருந்தது. அங்கே சென்று அதன் கதவைத் தட்டினுள். யாரோ உள்ளே நடந்துவரும் சப்தம் கேட்டது. தாழ்ப்பாள் திறக்கக் கதவைத் தள்ளிக்கொண்டு மீனல் தேவி உள்ளே சென்ருள்.

வேட்டையாளும் மானும்

கதவைத் திறந்தவள் முப்பது வயதுடைய ஒரு ஸ்திரீ. அவள் வெண் துகில் புனைந்திருந்தாள். அவள் முகம் சுருண்டு கருகி இருந்தது. நீண்ட பெரிய கண்கள் உலர்ந்து உணர்வின்றிக் காணப்பட்டன.

வெண் துகிலைத்தாண்டி வெளியே தெரியும் அந்த எலும்புக்கூட்டிலும் சாவின் இனிமையற்ற அந்த நிழலிலும் கூட ஓர் அதிசய அழகு கண்களுக்கு விருந்து இட்டுக்கொண்டிருந்தது. நடையில் கண்களின் உருவ அமைப்பில் கைகால் அசைவில் ஒரு தெய்வீக ஒளி கவிதையின் அழகு மிளிர்ந்து கண்களை இன்பமடைய வைத்தது. பார்ப்பவன் இந்த மானிட உருவம் எந்தத் தெய்விக ஆகாய தத்துவத்தைக்கொண்டு ஆக்கப்பட்டது என்று சந்தேகப்படுவான்: உயிருடன் இந்த உருவம் இருப்பது உண்மையானுல் இது கண்டிப்பாகப் பிரேதலோகத்துக்கு மத்தியால் சென்று திரும்பிய ஓர் தெய்வீகப் பெண்மணியே என்று யோசிப்பான் உடனேயே. இந்தப்பெண்மணி இப்படி உணர்வு நீங்கி, தேய்வு பொருந்தியவளாக இல்லாவிட்டால் எப்படி யிருந்திருப்பாள் என்ற ஓர் ஆச்சர்யமூட்டும் கேள்வியும் மனத்தே எழும். ஆனுல் கடவுளின் கருணையற்ற தன்மையால் அவளை மிகவும் குறைவானஜனங்கள்தான் பார்த்தார்கள்.

மீனல் தேவி கொஞ்சம் மதுரமாகப் புன்னகைபுரிந்து, "ஏன் ஹம்ஸா?" என்று கூப்பிட்டாள்.

ஹம்ஸாவின் தவிடென உலர்ந்த கண்கள் மீனல் தேவியைப் பித்துக் கொண்டவை போலப் பார்க்கத்தொடங்கின.

"ஏன் பேசக்கூடாதா? என்னிடம் அவ்வளவு கோபமா?"

"எனக்கு என்ன அவசியம் நேர்ந்துவிட்டது இப்பொழுது?" அவள் குரலும் ஒரு சமயம் இன்பத் தேன்குரலாயிருந்திருக்க வேண்டும். துருப்பிடித்த தந்தி கரகரப்புச் சத்தமிட்டது.

"அவசியமா? அவசியமிருந்தால்தான் வர வேண்டுமா?"

"இல்லாவிட்டால் யார் என்னிடம் வருகிருர்கள்? எவ்வளவு வருஷங்கள் சென்றுவிட்டன. யாராவது என்னிடம் வந்திருக்கிருர்களோ?"

"ஹம்ஸா: உனக்கு வாழ்த்துக் கூற வந்திருக்கிறேன். இப்பொழுது உனக்கு விடுதலை கிட்டி விடும்."

ஹம்ஸா திரஸ்காரம் நிறைந்த குரலில் சொன்னுள்: "ஏன்? அதிலும் ஏதாவது உனக்கு ஆதாயமிருக்கும்!"

"என்னை இவ்வளவு சுயநலம் கொண்டவள் என்று நினைக்கிருயே, இது சரியா?"

"சுயநலம் கொண்டவளா? இந்தா, வினை ஏன் என் வாயைப் பிடுங்குகிருய்? ஆனுல் சொல்வதில்தான் என்ன பலன்? போகட்டும். நீதான் வருகிருயே, ஒரு தடவையாவது என் சகோதரனை அழைத்து வருகிருயா?"

மீனல்தேவி கசந்து சொன்னுள்: "உன் சகோதரரும் போய்விட்டார். அவருக்கு என்னையும் பிடிக்காமல் போய்விட்டது."

ஹம்ஸாவின் உணர்ச்சியற்ற முகத்தில் கடுமைக் குறிகள் தோன்றின. "இது என்ன புதிதா? நான் முதலிலேயே அதைத்தானே எண்ணினேன்! நீ வந்ததிலிருந்து என் சொந்த சகோதரன், என்னைக் கொஞ்ச நேரத்துக்குக்கூட கண்களுக்கப்பால் விட்டு வைக்கச் சகிக்காத என் உடன் பிறந்தவன் எனக்காகாமல் போய்விட்டான். என்னை இங்கே தவித்து அலறி மடியவிட்டுவிட்டுப் போய்விட்டான். நீ அவனையும் என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டாய். ஆனுல் உன் சுயநலத்துக்கெதிரே அவனும் தோற்றிருப்பான்."

"நீ என்னை மிகவும் கெட்டவள் என்றே எண்ணியிருக்கிருய். உண்மை அதில்லை. நான் உனக்காக உன்னை உன் சகோதரனிடமிருந்து பிரித்து மோக்ஷ மார்க்கத்தில் விட்டேன். நீயானுல் இப்படிச் சொல்லுகிருய்!"

ஹம்ஸா களைப்புற்றுச் சொன்னுள்: "மோக்ஷம்! யாருக்கு? வருஷக் கணக்காக அழுது அலறித் துடித்துத் தவித்து வேறு வழியில்லாமல் ஜைன பகவான் அடிதொழுதால் மோக்ஷம் கிட்டிவிடுமா? தனித்திருந்து யோசனைசெய்ய எனக்கு நல்ல நேரம் கிடைத்திருக்கிறது. மீனல்தேவி! உன் சுயநலத்துக்காக நான் இங்கே அழுகிறேன் என்றுகூட எனக்குக் கண்டுகொள்ளத் தெரியாது என்ரு

நீணக்கிருய்? பரமாத்மா உயிரையும் வாங்கிக்கொள்ள மறுக்கிருர். ஒரு சங்கடமாவது நீங்கும்." ஹம்ஸாவுக்குக் கண்களில் நீர்வரக் கூடச் சக்தியில்லே.

"ஹம்ஸா! நீ என்ன இப்படிப் பேசுகிருய்? உன்னைப் போன்ற பரமார்த்த சேவிகைகள் செய்யவேண்டிய காரியங்கள் இன்னமும் எவ்வளவோ இருக்கின்றனவே!"

"பரமார்த்த சேவிகையா! இது என்ன அம்மா புதுப் பேர் சொல்லுகிருய்?"

"புதிதென்ன? உள்ளதைச்சொல்கிறேன்."

ஹம்ஸா ஓர் கடுஞ்சிரிப்பு கசந்து சிரித்தாள்.

"எங்களை எல்லாம்விட உன்னிடம் தேவ அம்சம் அதிகம் இருக்கிறது." மீனல் தேவி இனிமையாகச் சிரித்தாள். ஹம்ஸாவின் கையை ஆசையுடன் தன் கையில் எடுத்தாள்.

ஹம்ஸா நெருப்புப்பட்டவள்போலத் துடித்துநகர்ந்தாள். "ராணி, இந்த வீண்புகழ்ச்சி எதற்காக? என்ன சுயநலம் கருதி இந்த வேஷம் போடுகிருய்?"

"வீண் புகழ்ச்சியா?" மீனல் அனுவசியமாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருந்துபவன் போல் சொல்ல ஆரம்பித்தாள். அவள் மூளை இந்தக் காட்டுமானை வசப்படுத்தும் வழியைச் சிந்திக்க ஆரம்பித்தது.

"பிறகு என்னவாம்! என்னிடம் தெய்வீக அம்சம் இருக்கின்றது. அதனுல்தான் பதினைந்துவருஷங்கள் என் சகோதரன் உயிருடன் புதைத்து எரித்தான்! என்னிடம் தேவாம்சம் இருக்கிறது. அதனுல்தான் பதினைந்துவருஷங்களாக அன்பின் ஓர் சொட்டுக்கூடச் சுவையாமல் வாழ்ந்து வருகிறேன்......அவள் வார்த்தைகள் அம்புபோல் பாய ஆரம்பித்தன. அவள் கண்கள் ஒளி பெற்று மிளிர்ந்தன. பொங்கிச் சீறும் அவள் எண்ண வேகத்தில்பட்டு உதடுகளும் கைகளும் நடுங்க ஆரம்பித்தன.

மீனல்தேவி ஆசுவாசப்படுத்தினுள். "எதற்காகம்மா அலட்டிக்கொள்கிருய்? கொஞ்சம் தைரியமாயிரு"

"தைரியம், பொறுமை. என்ன கல் உள்ளத்துடன் சொல்கிருய்! உனக்கு வெட்கம் இல்லே. நீ எவ்வளவு பொறுமை காட்டிஞய்? சுதந்திரம்பெற்று பதி புத்திரனுடன் வாழ்ந்தாயே. போதும் என்று பொறுமைகொண்டாயா? என் சகோதரனை அடிமையாக்கிக் கொண்டாயே, அப்பொழுதாவது அமைதிகொண்டாயா? பொறுமை. தைரியம். பதினைந்து வயதில் நீயும் சிம்மம்போன்ற கணவனைப் பிரிய நேர்ந்தால், பூப்போன்ற சுகுமாரன் செல்வப்புதல்வனை உன் மடியிலிருந்து துடிக்கத் துடிக்க வேறு ஒருவன் பிடுங்கிக்கொண்டுபோனுல்; நாள் செல்ல நீ தனியாக, உறு துணையின்றி அழாதே என்று கண் துடைக்க ஆளின்றி இதயம் வெளியேற அழுது கலங்கும் அவசியம் ஏற்பட்டிருந்தால், அப்பொழுது தெரியும்—பொறுமையுடன் தைரியம்கொண்டு இருப்பது எப்படி என்று!" ஹம்ஸாவின் துடிக்கும் குரலில் ஆழ்ந்த வருத்தம்கொண்ட கோபம் கொதித்தெழுந்தது.

ராணி உதட்டைக் கடித்தாள். "சகோதரி நடந்ததை யெல்லாம் மறந்துவிடு. ராணியின் அமைதியுள்ள உள்ளத்தில் மற்றவர்களின் உணர்ச்சிக்கு இடமே கிடையாது. இப்பொழுது உன்னை நம்பித்தான் வந்திருக்கிறேன்." மீனல் கொஞ்சம் பணிவுடன் சொன்னுள்.

ஹம்ஸா மறுபடியும் திரஸ்காரம் நிறைந்த குரலில் சொன்னுள்: "ஆமாம், சொல்லு சொல்லு. நீ வந்தபோதே தெரியாதா எனக்கு? அதுவும் பழைய குப்பையைக் கிளறும்போதே தெரிந்துகொண்டுவிட்டேன். ராணி! என்ன ஆகவேண்டும்? சொல்லு. கட்டளையைச் சீக்கிரமே தெரிவி."

"சகோதரி! நீ கொஞ்சம் சாந்தமடை. பார். அரசர் இறந்துவிட்டார். ஜயதேவன் இன்னும் குழந்தை. ஸோலங்கிகளின் ராஜ்யம் போய்விடும்போல் இருக்கிறது. அதை நீதான் காப்பாற்ற முடியும்."

"நான் எப்படிக் காப்பாற்றமுடியும்?

"உன் சகோதரர் கோபித்துக்கொண்டு மதுபுரி சென்றிருக்கிருர். உன் கணவர்... தேவப்ரஸாதும் ..."

ஹம்ஸா பதற்றம் காட்டினுள். உதடுகள் மடிந்தன. சாவின் வெள்ளைக் கன்னங்களின் மெலிந்த தோலில் ஒரு சிவப்பு வரி தோன்றிற்று. அவள் இன்னும் கொஞ்சம் நடுங்கினுள்.

மீனல் கவலே காட்டும் குரலில் சொன்னுள்: "தேவப்ரஸாத் மேரளத்துச் சேனையை இட்டுக்கொண்டு பட்டணைப் பாழடிக்க வரப்போகிருர். நாளைக் காலையே வந்துவிடுவார். பிறகு ... குஜராத் ராஜ்யம் என்ன ஆகும்...?"

ஹம்ஸா கடுமை காட்டிச் சொன்னுள்: "வருகிருரா? வரட்டும். நல்ல தாய்ப்போயிற்று. மீனல், உன் வாழ்வும் குறுகிவிட்டது!"

PRIDE OF PERFORMANCE...



உழைப்பின் சிறப்பு...

பிரிட்டிஷ்காரர்கள் தாம் உற்பத்தி செய்யும் நவீன ட்ரெயின்களின் மின்னல் வேகம், கவர்ச்சிகரமான தோற்றம் இவைபற்றி பெருமைப் படுவதுபோல், நாம் தயாரிக்கும் வாட்ச்களின் வேலைத்திறன், கவர்ச்சிகரமான அமைப்புபற்றிப் பெருமைப்படுகிறோம். நீங்கள் எவ்விலை கொடுத்து வாங்கினாலும் பரவாயில்லை. நீண்ட கால அனுபவமும், உயரிய வேலைப்பாடும் பொருந்திய **வெஸ்ட் எண்ட் வாட்ச்கள்** உங்களது அரிய பொக்கிஷமாகும்! ஒவ்வொரு **வெஸ்ட் எண்ட் வாட்சும்** கண்ணைக் கவரக்கூடியன.

கடந்த முக்கால் நூற்றாண்டிற்கு மேல் இந்தியாவில் நாங்கள் வாட்ச்கள் விற்றுவருகிறோம். போதிய ஸ்டாக்குகள் வராத்து இல்லாமையால், விளம்பரப்படுத்தப்படும் எல்லா வாட்ச்களும் அனுப்பமுடியாவிடினும், இயன்றவரை தேவைகளைப் பூர்த்தி செய்கிறோம்.



ஸெகண்டஸ் ரௌண்ட்
12'' தட்டை கண்ணாடி வடிவம்
நிக்கல் ஸில்வர் கேஸ்,
ஸ்டீல் பாக் உடன் கூடியது Rs. 51-8-0

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.,
பம்பாய் :: கல்கத்தா

WEST END WATCH CO.

BOMBAY CALCUTTA

"நீயுமா அப்படிச் சொல்கிறாய்? இந்த ராஜ்யத்தின் நகர் சேட்டின் தங்கை நீ. இதன் குடை நிழலில் பல தலைமுறைகள் வாழ்ந்திருக்கிறாய். அந்த ராஜ்யம் நாசமாகவேண்டும் என்று நீயே சொல்கிறாயே!"

"எந்த ராஜ்யம்? மண்டலேசுவரனை வாட்டி வதைத்த ராஜ்யமல்லவா இது! அவர் மனைவியைக் கைதிசெய்த அந்த ராஜ்யத்தையா? இது அவர்கள்

குழந்தையைத் துடிக்கவைத்த ராஜ்யம், அந்த ராஜ்யத்துக்கு இதைவிட என்ன நடக்கும்? மாமியாருக்கு நூறு நாள் என்றால் ஒரு நாள் மருமகளுக்கும் வராதா?"

மீனல் வேறு ஒரு பாணம் எடுத்து விடுத்தாள்:—

"ஹம்ஸா சகோதரி! உன்னை இதுவரை மறந்து, உன்னைத்தேட முனையாமல் அநேக பெண்களுடன் சுகமாகக் காலம் கழிக்கும் அவர்பேரிலுமா இவ்வளவு காதல்?"

ஹம்ஸா நிமிர்ந்து நின்றாள். "ராணி! ஸதிக்கு ஒரே புருஷன்தான் உண்டு ஒரு ஜன்மத்திற்கு மட்டுமல்ல, 'எண்பத்து நான்கு லட்சம்' ஜன்மங்களுக்கும் சரியே! உனக்கு எப்படித்தெரியும் அவர் என்னை இங்கே தவிக்கவிட்டு என்னை மறந்தார் என்று. உனக்கு யார் சொன்னது அவர் என்னைத் தேடவே முயலவில்லை என்று? அது உண்மையானாலும்தான் என்ன? அவர் என் கணவர். நான் அவர் பாததூளி!"

"அதுசரி, அவர் சேனையுடன் வருகிறார்" தோல்வி அடைந்த ராணி பேச்சை மாற்றினாள்.

ஹம்ஸா அலக்ஷியம் காட்டினாள்: "ஏன் வரட்டுமே எனக்கென்ன?"

"நீ செல்; அவரை இங்கே வராமல் தடு."

புருவத்தைப் பயங்கரமாக நெளித்துக்கொண்டு ஹம்ஸா கேட்டாள்: "ஏன் தடுக்க வேண்டும்? எனக்கு என்ன வந்து கிடக்கிறது. யாருக்குமுடையோ அவள் கவலைப்படட்டுமே!"

"எனக்கென்ன என்று கேட்கிறாய்? நீயே அப்படிக் கேட்டால் பிறகு என்ன செய்வது? ராஜ்யத்துக்கு இந்த ஸேவைகூடச் செய்ய மாட்டாயா?"

"இதோ பார், இன்னும் என்ன சொல்லச் சொல்லுகிறாய்? ராஜ்யம் எனக்காக என்ன செய்தது? கணவனை விட்டுப் பிரித்த இந்தப் பேருபகாரத்துக்காக நான் என்ன பதில் செய்யவேண்டும்? காரணமின்றி, கைது செய்து கருகவைக்கும் இந்தப் புண்ணிய காரியத்துக்குப் பதில் அந்த ராஜ்யத்துக்கு நான் என்ன ஸேவை புரியவேண்டும்? உன் ராஜ்யத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லையே!"

"ஒவ்வொருவரும் இப்படியே சொன்னால் ராஜ்யம் என்ன ஆகும்!"

"ராஜ்யம் என்பது சிலர் சுகபோகப் பொருளாகி விட்டால், பிறகு யாருக்குத்தான் என்ன சொல்ல இருக்கிறது?"

"நகர் சேட் தனபாலன் புத்திரி இப்படிப் பேசுவது அழகாயில்லை!"

"மீனல்! வளைக்காதே. என்ன எண்ணங்கொண்டு என்னைத் தேடிக்கொண்டு கிளம்புகிறாயோ, தெரியவில்லை. இதுமட்டும் உனக்கு அழகாயிருக்கிறதா? போ, போ. உன்னைச் சுற்றித் திரிகிறவர்களிடம் செல். உண்ணக் குடிக்கக் கொடுத்து முதுகைத் தடவிக்கொடுத்தவர்களிடம் போ. நான் மண்டலேசுவரன் மனைவி. அவர் வார்த்தை எனக்குக் கடவுளின் சொல். தெரியுமா?"

"ஹம்ஸா, நீ இந்தச் சிறிய உபகாரம்கூடச் செய்யக்கூடாதா?" மீனல் வெளியே கெஞ்சினாள். உள்ளே எரிந்தாள். அவள் பிர்மாஸ்திரம் உபயோகமற்றதாகிவிடும்போல் இருந்தது. "பார் நீ இந்த உபகாரம் செய்தால் ஜனங்கள் எவ்வளவு ஆசீர்வாதம் செய்வார்கள் தெரியுமா? பட்டண்வாசிகள் உன்னைத் தேவி எனத் தொழுவார்கள். உன் புகழ் அழியாமல் நிலைத்து நிற்கும். நீ குஜராத்தின் தாய் என்று வேண்டப்படுவாய்!"

ஹம்ஸா ஒரு கனைப்புடன் சிரித்தாள். "ஆஹா, ராணி! ஹம்ஸா தனித்திருந்து இருந்து சிந்தனையைப் பெருக்கிக்கொண்டு விட்டாள். இப்பொழுது அவளை ஏமாற்றுவதென்பது உன்னால் முடிந்தகாரியமல்ல. என் மண்டலேசுவரர் இங்கே வந்தால் ஜனங்களுக்கு என்ன கெடுதல்? உனக்குப் பதில் அவர்களுக்கு உகந்த ஒரு வீரன் கிடைப்பது அவர்களுக்கு வேண்டாப் பொருளா? பட்டண் வாசிகள் மாலைபோட்டு ஆரத்தி எடுத்து அவரை வரவேற்பார்கள்! ஆம், உன் பெருமை, உன் ஆனந்தக்கேளிக்கைக்கு முற்றுப் புள்ளி ஏற்பட்டுவிடும். அதுதான் உண்மை."

ராணி விழித்தாள். "நான் குஜராத்துக்காகத்தானே என் பிறந்த நாட்டைவிட்டு மகாராஜாவை மணந்தேன். இது உனக்குத் தெரியாதா?"

"அடேடே! நன்றாய்ப் பேசுகிறாயே! ஒரு சிறிய சிற்றரசருடன் மணந்து சந்திரபுரியில் வளர்வதைவிட கூர்ஜரதேசத்துக்கு ராணியாகித் தனியரசு செலுத்துவது கசந்ததோ!"

"ஹம்ஸா. நீ மிகவும் அதிகம் பேசுகிறாய்?" ராணியின் முகத்தில் கோபக் குறிகள் தோன்றின. ஹம்ஸாவின் காலைப் பிடிப்பது அவளுக்கு அவ்வளவு இன்பமான காரியமில்லை.

"ஏன்? ராணி கோபம் கொள்கிறாள் போலிருக்கிறதே! எனக்கு யாரைப்பற்றி இலட்

19850.

சியம் செய்யவேண்டும்? உன்னால் முடிந்த வரைதான் செய்துவிட்டாயே! பிறகு நான் ஏன் பயப்படவேண்டும்? என்முன்னோர்களின் உழைப்பால் இந்த ராஜ்யம் நிலைத்து நிற்கிறது. என்கணவரின் புயவலியால் உன் பெருமை பொடியாகாமல் இருக்கிறது. என் சகோதரன் புத்தியால் உன் அதிகாரம் வளர்ந்து நிற்கிறது. நான் ஏன் பேசக்கூடாது? பிறர் உழைப்பின் பலனை அனுபவித்து ஆளும் நீயா என்னிடம் இப்படிப் பேசுகிறாய்!"

மீனல் கண்கள் இருண்டன. அவளெதிரே சொல்ல மற்றவர் பயப்படும் அநேக விஷயங்களை இன்று அவள் காதால் கேட்கிறாள். அதுவும் ஹம்ஸா பயங்கரமான வார்த்தைகளில் சொல்கிறாள். அவள் சுயநலம் அவள் எதிரே நின்றது. இந்தக் குடும்பத்துக்கு உபகாரத்துக்குப்பதில் எவ்வளவு அபகாரம் செய்திருக்கிறாள்? ஹம்ஸா சொன்னதைக் கேட்பாளா? வேறு வழி என்ன? அங்கே மண்டலேசுவரன் மேளத்தை நெருங்கிக்கொண்டிருப்பானே! இந்தக் கவலைகளைக் கஷ்டப்பட்டு வெளியேற்றி மேலே வழியைப்பற்றி யோசனைசெய்ய முயன்றாள் மீனல்தேவி.

"ஹம்ஸா! மறுபடி மண்டலேசுவரருடன் வசிக்கும் ஆசைகூட உனக்கு இல்லையா?" அவள் பேராசை காட்டினாள்.

"ஏன் இல்லை? இந்த உலகில் இல்லை என்றாலும் மற்றொரு உலகத்திலாவது சேரவேண்டும்! ஆனால் இந்தச் சமயம் ராணிக்கு இந்தத் தயவு ஏன் வந்தது என்றல்லவா எனக்குப் புரியவில்லை! அது புரியும் வரை நான் எப்படி அந்த ஆசைக்கு இடம் கொடுப்பேன்? உன் நல்லெண்ணங்களின் பலனை நன்றாய்ச்சுவைத்துப் பழக்கப்பட்டிருக்கிறேனே மீனல்தேவி!"

ஹம்ஸாவின் மூச்சு வேகமாய் வர ஆரம்பித்தது. களைத்த கண்கள் பார்க்க மறுத்தன. காதுகளின் அடியில் கையைத்தாங்கி அவள் உட்கார இடம் தேடினாள்.

இதே சமயத்தில் அரண்மனையின் பின் வெளிமுற்றத்தில் ஒரே ஆரவாரம் கேட்டது. மீனல்தேவிக்கு இது புதுமையாகப்பட்டது. அவள் நின்றிருந்த அறையின் ஜன்னல்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. அந்த முற்றத்தின் பக்கம் இரு மர வலைகள் மட்டும் இருந்தன. மீனல் ஒரு மரவலைப்பக்கம் சென்றாள். கீழே முற்றத்தில் மேடையின்மேல் ஜயதேவ் விரிந்த தலையுடன் நின்றுகொண்டிருந்தான். அவன் கையிலிருந்து ரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. ஜயதேவனின் கையில் ஓர் அம்பு பட்டு அந்தக்குருதி பாய்ந்துகொண்டிருந்தது. அவன் சிறிய வாள் காலடியில் கிடந்தது. எதிரே முற்றத்தில் தானவீரன் கர்ணனின் அழகிய சௌந்தரியத்தையும் வீரத்தையும் காட்டிக்கொண்டு உருவிய வாளுடன் ஓர் வீரச் சிறுவன் நின்று கொண்டிருந்தான். அவன் கண்களில் வெறி களியாட்டம்காட்டிக் கொண்டிருந்தது. அவன் அகன்றமார்பில் வீரலக்ஷ்மிவிலாசம் கொண்டிருந்தான். பத்துப் பன்னிரண்டு வீரர்கள் அவனை நெருங்க முயன்று கொண்டிருந்தனர். அந்த அபிமன்யு தன் கைகளினால் அவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்தான். ராணி அவனைக் கண்டுகொண்டாள். ஹம்ஸாவின் ஓர் அடையாளம் அவன் முகத்தில் பிரதி பலித்துக் கொண்டிருந்தது. அவன் த்ரிபுவன் பாலன்.

த்ரிபுவனைப் பார்த்ததும் ராணியின் முகம் சிந்தனை கொண்டது. உடனே ஒரு எண்ணம் மின்னி எழ, கவலையுற்ற இதயத்தில் இன்பத்தின் முளை வெடித்துக் கிளம்பிற்று. சுயநலம் கொண்ட அவள் உள்ளம் தற்பொழுது ஏற்பட்ட கேவிநிலையிலிருந்து தப்பி வெற்றி ஆரம்பூண ஓர் வழி தேடித்தந்தது. இயற்கையான அனுதாப எண்ணங்களைப் புதைத்து வைத்தது. அரக்கியின் இதய சக்தி அதற்கு உதவிபுரிய வந்தது. அவள் ஹம்ஸா பக்கம் திரும்பினாள்.

நீ யார்?

இப்பொழுது ராணி பார்த்த காட்சி எவ்வாறு நேர்ந்தது என்று பார்க்கலாம். திரிபுவன்பால் மாண்டேரி வாயில் வழியில் தன் ஆட்களுடன் தன் தந்தையை எதிர் பார்த்து நின்றான். முஞ்ஜால் என்ன சொன்னார்? ஏன் தந்தை மறுபடியும் அரண்மனைக்குப் போனார்? என்ற கேள்விகளின் நிச்சயமானபதிலை அறிய அவன் ஆவல் அதிகரித்துக் கொண்டிருந்தது. ஆனால் சிறு வயதிலிருந்தே கட்டளையை நிறைவேற்றும் பழக்கம் ஏற்பட்டிருந்தது. ஆதலால் கதவுகள் சாத்தும்வரை அவன் அங்கேயே நின்றான். பிறகு மெதுவாக அரசன் இல்லத்தின் பக்கம் சென்றான்.

சந்தைத் திடலில் ஓட்டமும் பிடியுமாயிருந்தது. கடைக்காரர்கள் கூடிக்கூடிக் கடைகளை மூடிவிடுவதா இல்லையா என்று யோசித்துக்கொண்டிருந்தனர். அநேகர் மிகவும் இரைந்த குரலில் ராஜ்யத்தின் நிலையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். திரிபுவன் பாலனுக்குச் சில சிநேகிதர்களிடமிருந்து மண்டலேசுவரன் குதிரையுடன் கரையைத் தாண்டித் தாவிப் பாய்ந்து சென்ற விஷயம் தெரியவந்தது. குதிரையைவிரட்டிக்கொண்டு அந்த இடத்துக்கு வந்துசேர்ந்தான். அங்கே

இரண்டு மூன்று நூறு மனிதர்கள் கூடி, தேவப்ரஸாத் செய்த வீரத்தனத்தை ஒருவருக்கொருவர் காட்டி மகிழ்ந்துவிம்மிக்கொண்டிருந்தனர். திரிபுவன்பாலனைப் பார்த்ததும் அவர்கள் தாங்கள் பேசுவதை நிறுத்தி கண்களாலும் கைகளாலும் அவனைப்பற்றி அடையாளம் தெரிவித்துக்கொண்டனர். திரிபுவன் சாம்பானேரி வாயிலை அடைந்து கதவைத் திறக்கச்சொல்லி உத்தரவிட்டான். வாயிற் காப்போன் மறுக்கவே திரிபுவன் ஏமாற்றமடைந்து கரையின் உயரத்தைப் பார்த்தான். ஒரு பெருமூச்சு விட்டான். பட்டணின் அகழியின் கரைகளை மண்டலேசுவரன் ஒருவன்தான் தாண்ட முடியும். அங்கிருந்து வேகமாக அரசன் மாளிகையை அடைந்து திறந்திருந்த பின்கதவின் வழியாக உள்ளே புகுந்தான். பாராக்காரர்கள் தடுத்து நிறுத்தினர்கள்.

"நான் ராணியைப் பார்க்க விரும்புகிறேன். என்னைத் தெரியவில்லையா? நான் மண்டலேசுவரனின் மைந்தன் திரிபுவன்பாலன். போ, ஒருவன். நான் நிற்கிறேன். சொல்லிவிட்டு வா."

ஒரு பாராக்காரன் ராணியிடம் சொல்வதற்காக உள்ளே சென்றுன். திரிபுவன் குதிரையினின்றும் இறங்கிக் கீழே நின்றுகொண்டான். எப்படியாவது தன் தந்தையுடன் சேரவேண்டும் என்ற எண்ணம் அவனைத் தூண்டிக்கொண்டே இருந்தது. பலத்திஞல் செய்யமுடியாத அந்த வேலையை அமைதியான முறையில் செய்ய வழிதேடினுன்.

ஆனந்தசூரி இறங்கி வந்தார். "மகாராணி இப்பொழுது பார்க்கமாட்டார்கள். உனக்கு என்னவேண்டும்?"

"நீர் கேட்டு என்ன செய்யப்போகிறீர்? ராணி ஏன் பேசமாட்டார்களாம். காரியம் அவசரமான காரியம். காத்திருக்க நேரமில்லை" திரிபுவன் படபடத்துச்சொன்னுன். "ராணியைப் பார்க்கவேண்டும் என்ருல் காத்து நிற்க வேண்டும் குழந்தாய்!" யதி சொல்லிவிட்டுப் போய்விட்டார்!

பதற்றத்துடன் அடித்துக் கொள்ளும் உள்ளத்துடன் திரிபுவன் அங்கே நின்றுன். மேலே செல்லப் பறந்தான். ஒவ்வொரு நிமிஷமும் மிகவும் விலையுயர்ந்த நிமிஷம் வீணில் பாய்ந்து கொண்டிருந்தது.

அதே சமயம் எதிரே உள்ள தாழ்வாரத்தில் குமாரன் ஜயதேவன் செல்வதைப் பார்த்தான்.

"சித்தப்பா. குமாரர் ஜயதேவ் மகாராஜ்!" குஜராத்தின் குழந்தை அரசன் பெருமையுடன் போய்க் கொண்டிருந்தான். நின்றுன். புருவத்தைச் சற்றே நெற்றியில் ஏற்றி அவன் திரிபுவனைப் பார்த்தான்.

"சித்தப்பா, எனக்குக் கொஞ்சம் வெளியே போக வேண்டும். அனுமதி கொடுங்கள். இளவரசே! ராணியம்மாள் வேலையாக இருக்கின்ருர்கள்; ஒருவரையும் பார்க்கிருர்களில்லை."

திரிபுவன் இவ்வளவு நாளும் வெளியேயேயிருந்தவன். ஜயதேவனுக்கு அவனுடன் அதிகப்பழக்கம் ஏற்பட்டதில்லை. முந்தாளுள் மட்டும் அவன் இந்தப் பையன் மீனல் தேவிக்கு என்ன உரிமை என்று கேட்டதை மட்டும் கேட்டிருந்தான். அது தவிர அவனுக்கு இவன்யார்? இளவரசனைச் சித்தப்பா என்று கூப்பிட இவனுக்கு எப்படித் தைரியம் வந்தது? என்றெல்லாம் அவன் அறியமாட்டான்.

"நீ யார்?" இளவரசனின் குரலில் அதிகாரம் அதட்டி நின்றது.

"என்னைத்தெரியாதா? இதுவும் விதியின் வேடிக்கைதான்! நான் மண்டலேசுவரன் மகன் திரிபுவன்பாலன். ஜயதேவ்! எனக்கு என் தந்தையுடன் போக வேண்டும் உத்தரவிடு"

ஜயதேவ் தாயிடம் பாடம் கற்றவன். ஆனுல் தாய் எவ்வளவு தைரியசாலியோ அவ்வளவு உன்ளூரப் பயங்கொள்ளி ஜயதேவன். அவனுக்குத் திரிபுவன் அழகும் சூரத்தனமும் மிளிரும் அந்த ஒளியும் கொஞ்சம் பொருமையை ஏற்படுத்தின. தேவப்ரஸாதிடம் அவன் தாய் கொண்டிருந்த விரோதத்தின் ஒருபகுதி அவள் மகன் இரத்தத்திலும் இறங்கி வந்திருந்தது. ஸாமல் பாரஹட் வீட்டில் திரிபுவன் சொல்லிய வார்த்தைகள் ஞாபகம் வந்தன. தாய் கொடுத்த செல்லம் அவனை வீண் பெருமை கொள்ளச் செய்திருந்தது. கூடியிருந்தவர்களின் வீண் புகழ்ச்சி அவனை அதிகார ஆடம்பரத்தில் ஆசை யூட்டியிருந்தது.

குரலில் அலக்ஷியம் தலைகாட்ட ஜயதேவன் கேட்டான்:

"நீதானே முந்தாளுள் மீனல்தேவிக்கு என்ன உரிமை என்று கேட்டுக்கொண்டிருந்தாய்? அதன் பலனை அனுபவிக்கவேண்டாமா?"

"ஜயதேவ் இது உனக்கு நன்ருய் இருக்கிறதா? நானும் பீமதேவனின் வழி வந்தவன் தான். பிச்சை கேட்கிறேன்." திரிபுவன் மரியாதையாகக் கேட்டான்.

"ஓஹோ! தன்னைப் பெரிய சூரன் என்று பெருமை அடித்துக் கொள்ளும் உன் தந்தையின் மகனான நீயா பிச்சை கேட்கப் புகுந்தாய்?"

திரிபுவன் மகவும் கஷ்டப்பட்டுப் பொங்கி வரும் கோபத்துக்கு அணையிட்டான். அவன் கண்கள் கொஞ்சம் சிவந்தன.

"மகாராஜ், பெரியவர்கள் பேச்சு நமக்கெதற்கு? எனக்கு அனுமதி கொடுங்கள் வெளியே போக."

முன்பின் அறியாத இளவரசன் "ஏன் பஹார்வடி (ராஜாங்க விரோதி) ஆக வேண்டுமா?"

"மகாராஜ், ஸோலங்கி வம்சத்தவர்கள் பஹார்வடி ஆவதற்குக் காலம் இன்னும் வரவில்லை. நான் இப்படிக் கெஞ்சுவதற்குக் காரணம், நீங்கள் அரசர் நான் சிற்றரசன். அதனால் நீர் சொல்வதை எல்லாம் கேட்டுச் சகித்துக் கொள்வேன் என்று எண்ண வேண்டாம்."

"ஓஹோ! இதுதான் பிரார்த்தனையோ? சரி நில். அம்மா சொல்வதைப் பிறகு பார்த்துக் கொள்கிறேன். கல்யாணமல்லரே, பிடியும் அவனை."

திரிபுவன் கண்கள் மின்னி நின்றன. அதன் ஒளி கிரணம் வீச ஆரம்பித்தது. அவன் கர்ஜித்தான்: பார்க்கலாம் என்னை உயிருடன் பிடிக்க எந்த வீரன் முயலுகிறான் என்று?" வாளின் பிடியில் கைவைத்து வருபவர்களை வரவேற்க நின்றான். அவன் அரசனுக்கெதிரே தான் முதலில் வாள் எடுக்க விரும்பவில்லை.

கலியாணமல்லன் மரியாதை காட்டி நின்றான். அவன் வீரர்களும் அவ்வாறே நின்றனர். பீமதேவனின் பேரனைப் பிடிக்க அவர்கள் முயல விரும்பவில்லை.

"ஓகோ! இவ்வளவு பெருமையா! நில். நானே பிடிக்கிறேன்" என்று சொல்லி ஜயதேவன் வாளை உருவினான். அவன் அகங்காரம் கொண்டவன். சுற்றியிருந்த சிற்றரசர்கள் பொய்யுரையைக் கேட்டுக் கேட்டு தன்னையும் சிறந்த வீரன் என்று எண்ணிக் கொண்டிருந்தான். தங்கள் குடும்பத்தின் பெரிய விரோதியின் மகனைத் தன் கையாலேயே பிடிப்பதைப் பெரிய கௌரவமாக எண்ணிய அவன் ஒரு அடி முன்னேறி வாளை வீசி நின்றான்.

"கலியாணமல்லரே!" வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரு முன்னமேயே எங்கிருந்தோ ஒரு அம்பு வந்து அவன் வலது கையில் தைத்து நின்றது. அது எங்கிருந்து வந்ததென்றே ஒருவருக்கும் நன்றாய்த் தெரியாது. எல்லோரும் பின்னால் திரும்பிப் பார்த்தார்கள். திரிபுவனும் திரும்பிப் பார்த்தான். ஜயதேவன் கையிலிருந்து வாள் கீழே விழுந்தது! அரசனின் கோபம் அதிகரித்தது! அங்கு இங்கு பார்க்காமலேயே அவன் அலறினான்: "இந்தத் துரோகியைப் பிடிக்கப் போகிறீர்களா இல்லையா? பிடியுங்கள். கொல்லுங்கள்" என்று கத்தினான்.

வீரர்கள் நின்று நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மீனல் தேவியிடம் பயம் தோன்ற ஆரம்பித்தது. இளவரசனைக் காயம்பட விட்டதற்காக ராணி என்ன சொல்லுவாளோ? அவர்கள் முன்னேறினார்கள். திரிபுவன் காய்கள் கவிழ்ந்ததைப் பார்த்தான், அவனும் வாளை உருவினான். சூழப்பட்ட சிங்கம் போலச் சுற்றித் தெளித்தான் பார்வையை! ஒரு வீரன் ஜயதேவன் கையில் துணியைக் கட்டிக் கொண்டிருந்தான்.

கலியாணமல்லன் சொன்னான்: "அப்பா இந்தச் சமயம் தணிந்து போய்விடு. பிறகு ராணியிடம் சொல்லிக் கொள்ளலாம்."

"அகப்பட்டுக்கொள்ளவா? சபாஷ் கலியாணமல்லரே! ஸோலங்கி வீரர்கள் பிடிபடுவது கிடையாது! பிறரைத் தூக்கி எறிவார்கள். பார்க்கிறேன் என்னை யார் பிடிக்க முயலுகிறதென்று!" வீரர்கள் வேறு வழியின்றி அவனை நெருங்கத் தொடங்கினர்.

இந்தச் சமயத்தில்தான் மீனல்தேவி மேலிருந்து இந்தக்காட்சியைக் கண்டாள்; உள்ளத்தில் அந்த அரக்க எண்ணத்தைக்கொண்டாள்.

"ஹம்ஸா! இங்கே வா. உனக்கு ஒன்று காட்டுகிறேன்."

ராணியின் குரலில் வெற்றி அசைவு காட்டிற்று.

ஹம்ஸா மரக் கிராதி யருகில் வந்தாள். "என்ன காட்டப் போகிறாய்?"

"ஹம்ஸா! பார் பார். அந்தப் பையனை அடையாளம் புரிகிறதா? இதல்ல, அந்தப் பையன். அதோ கையில் வாளேந்தி நிற்கிறானே அவன். அதோ வீரர்கள் சூழ்கிறார்களே அந்தப் பையன்."

ஹம்ஸா சற்று நேரம் பார்த்தாள். கனவில் ஏற்படும் விழிப்புடன் "அது யார்? எதற்காகப் பார்க்கச் சொல்லுகிறாய்?" என்றாள்.

அவள் குரலில் ஏற்பட்டிருந்த அலக்ஷியம் இன்னும் முற்றிலும் போகவில்லை.

"என்ன, என்ன? இன்னும் தெரியவில்லையா? தெரியவேயில்லையா?"

"தெரியவில்லையே! அது யார்?" ஹம்ஸாவின் கண்கள் ஆசைகொண்டு விழித்தன. குரல் ஆவல் காட்டிக் கிளம்பிற்று.

"யார் என்ன? உன் மகன் தான்."

'ஊம்' விழித்த கண்களுடன் பைத்தியம் கொண்டவள்போல ஹம்ஸா சொன்னாள்: "என் திரிபுவனு? அவன் குழந்தையிலேயே இறந்துவிட்டான் என்று சொல்லிக்கொண்டிருந்தாயே" அவள் கலவரமடைந்தாள். அவள் புத்தி ஸ்திரப்பட மறுத்தது.

"அவன் சாகவில்லை. உயிருடனே தான் இருக்கிறான். உன் கணவனுடன் இருந்தான். பார் அவன் வீரர்களுடன் சண்டையிடுகிறான். ஹம்ஸா! உனக்குப் புத்திரன் உயிருடன் வேண்டுமா? இதோ வீரர்கள் அவனை யமனுலகுக்கு அனுப்பிவிடுவார்கள். அதோ பார் ஒன்றிரண்டு காயங்களும் பட்டுவிட்டன. இதோ இறந்துவிடுவான். காப்பாற்ற விரும்புகிறாயா? சொல். பிரமாணம் செய்துகொடு. மண்டலேசுவரனிடம் சென்று அவரை இங்கே வராமல் தடுப்பேன் என்று சத்தியம் செய்து கொடு. இரண்டே நாட்களுக்குத் தடுத்துவை. போதும். என்ன? என்ன சொல்கிறாய்?"

ஹம்ஸா கண்கள் நீரைக் கக்கின. அவள் சுழலில் சிக்கினாள். "என் குழந்தை. தேவதுல்யன் திரிபுவன்! பதினைந்து வருஷம் கழிந்து பார்க்கிறேன். சாவுடன் போராடும் போது... மீனல்தேவி! காப்பாற்று அவனை. இங்கிருந்தே கத்து... கொடு உத்தரவை..."

ராணி பேய்க்குரலில் சொன்னாள்: "எதற்காக? முதலில் சத்தியம் செய்துகொடு. நேரம் அதிகமில்லை. வீழ்ந்து உருண்டுவிடுவான் இதோ!"

மார்பில் கைபுதைத்து ஹம்ஸா அலறினாள். "ஆகா! எப்படி சிங்கம்போலச் சண்டையிடுகிறான்? ஓ! திரிபுவனு! என் கண்ணே!"

(தொடரும்.)

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

LTS. 195-23 TM.

☆ சினிமா நட்சத்திரங்களின் அழகுதரும் சோப் ☆

ஆயிரம் ஆண்டிற்கு ஒரு பூ

வாரன்

பாலர் வகுப்புக் குழந்தைகளை வாத்தியார் ஏதாவது ஒரு காயையோ பழத்தையோ சித்திரம் வரைந்து கொண்டு வரச்சொன்னர். கிட்டு அவசரமாகத் தன் சிலேட்டில் சித்திரம் வரைந்து அதன் அடியில் மாங்காய் என்று எழுதி வாத்தியாரிடம் முதலில் கொடுத்தான். அதைப் பார்த்ததும் வாத்தியாரால் சிரிப்பை அடக்க முடியாமல் கிட்டுவின் சித்திரத்தை வகுப்பு மாணவர்களிடம் காட்டி இது என்ன காய்? என்று கேள்வி கேட்டார். எல்லோரும் 'பூசுணிக்காய்' என்றனர். 'கிட்டு வீட்டு மாமரத்தில் இப்படித்தான் மாங்காய் காய்க்கிறது. நீங்கள் எல்லோரும் போய்ப்பாருங்கள்' என்று வாத்தியார் பரிகசித்தார். இதேமாதிரியான சம்பவம் தமிழ் இலக்கியத்தில் கவிச்சித்திரத்தைப் பொறுத்தமட்டில் அடிக்கடி நடந்திருக்கிறது.

குழந்தைப் பருவத்தைப் பத்தாகப் பிரித்து ஒவ்வொன்றையும் பற்றிப் பத்துப் பாடல்கள் வீதம் எழுதிய செய்யுள் நூல்கள் தமிழில் ஏராளமாயிருக்கின்றன. அந் நூல்களுக்குப் பிள்ளைத்தமிழ் என்று பெயர். தமிழ்க்கவிகள் கடவுளைக் குழந்தையாகப் பாவித்துப் பல பிள்ளைத் தமிழ் நூல்கள் பாடியிருக்கின்றனர். தம்மை ஆதரித்த வள்ளல்களையும் தமது ஞானசாரியர்களையும் குழந்தையாகப் பாவித்துப் பல பிள்ளைத் தமிழ் செய்திருக்கின்றனர். கடந்த நானூறு வருஷங்களில் செய்யப்பட்டு அச்சுவாகனம் ஏறியதும் ஏருததுமான பிள்ளைத் தமிழ் நூல்கள் தமிழில் சுமார் ஆயிரத்திற்கு மேல் இருக்கின்றன.

பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தம் ஒவ்வொன்றிலும் நூறு பாடல்களுக்குக் குறையாமல் இருப்பதோடு ஒவ்வொரு பாட்டின் ஒவ்வொரு அடியும் அச்சுப் புத்தகத்தில் நாலு வரிகளாக மடக்கி எழுதும்படி மிக நீண்டதாய் இருக்கிறது. இது இலக்கண பாஷையில் 16 சீர்களும் 32 சீர்களும்பெற்று வரும் கழிநெடிலடி என்று சொல்லப்படுகிறது. ஒரு பாடலை அச்சிட, தற்காலப் புத்தக அளவில் சுமார் ஒரு பக்கத்துக்குக் குறையாமல் ஆகும்.

இத்தகைய பிள்ளைத் தமிழ் நூல்கள் மிகப் பலவாய்த் தமிழில் இருப்பதைப் பிற பாஷைப் புலவர்கள் கேள்விப்பட்டால் பெரிதும் வியப்படைவர். குழந்தைப் பருவத்தைப்பற்றித் தனியாக எடுத்துப் பேசும் செய்யுள் நூல்கள் இவ்வளவாகப் பிறபாஷைகளில் இல்லை. திறமான புலமையும் கற்பனு சக்தியும் இருந்தால் அன்றிப் பிள்ளைப் பருவத்தைக் குறித்து 100 பாடல்கள் எழுத முடியாதல்லவா?

ஆனுல் பிள்ளைத் தமிழ் நூல்களில் பலவற்றைத் தலைப்பைக் கொண்டுதான் கவிதாசிரியன் குழந்தைப் பருவத்தைப் பற்றிப்பேச முயற்சி செய்திருக்கின்ருன் என்று ஊகிக்க வேண்டும். எழுத்தால் பூனே என்று எழுதி சித்திரத்தில் யானையை வரைவது போலும், மாங்காய் என்று எழுதிப் பூசுணிக்காய் வரைவது போலும் பல தமிழ்க்கவிகள் பிள்ளைத் தமிழ் செய்வதாகச் சொல்லிக் கொண்டு அப்பருவத்திற்குச் சம்பந்த மில்லாத பலவற்றையே பேசி இருக்கிருர்கள்.

திருமாலைப் பற்றிய பிள்ளைத்தமிழில், ராவணனேடு போர் செய்த போது, ராமன் காட்டிய வீரமும், விபீடணனுக்கு அபயம் அளித்த கருணையும்,

மகாபலியை வென்ற வாமனனின் சூழ்ச்சித் திறமும் போன்ற இதிகாச புராண வரலாறுகள் கம்பீரமான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. முருகனைப் பற்றிய பிள்ளைத் தமிழில் சூரனேடு போர் செய்ததும் வேலும் மயிலும் புண்ணிய க்ஷேத்திரங்களில் முருகன் கோயில் கொண்டு பக்தர்களைப் பரவசப் படுத்துவதும் விசித்திரமாக வருணிக்கப் பட்டிருக்கின்றன. இவ்வாறே பல பழம் புலவர்கள், உற்றோரும் பெற்றோரும் உள்ளம் களிக்க மழலை மொழிந்து விளையாடும் பிள்ளையையும் பிள்ளையால் மகிழ்வெய்தும் பெற்றோரையும் மறந்து பிள்ளைப்பருவத்திற்குச் சம்பந்தமில்லாத கருத்துக்களை வைத்துப்பாடினர். ஆனால் பிள்ளைத்தமிழில் கவி தான் பத்துப் பருவங்களாகத் தலைப்புக் கொடுத்துப் பிரித்துக் கொண்டபடி, பிள்ளையைப் பார்த்துப் பெற்றோர் பேசுவதுபோலவே 'முத்தம் தருகவே, அம்புலீ ஆடவாவே' என்று பாட்டை முடிப்பதில் மறந்தும் தவறுவதில்லை. கவிமரபின்படி பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களின் தன்மையைத் தெரிந்து கொண்டிராத ஒருவர் இப்பாடல்களைப் படித்துப் பொருளை அறிந்து கொண்டாலும் இவை பிள்ளைப் பருவத்தைப் பற்றியது என்றாவது பிள்ளையாகக் கடவுளைப் பாவித்து எழுதியது என்றாவது ஆசிரியன் கொடுத்த தலைப்பில்லாமல் அறியவே முடியாது.

வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் இடையே கடக்க முடியாத குழியைப் பறித்த புலவர்களில் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் தலைசிறந்தவர் ஆவர். உண்மைக் கலப்பு ஒரு சிறிதும் இல்லாமல் இலக்கியம் செய்தல் இயலும் என்பதை வெற்றிகரமாக நிரூபித்துக் காட்டிய புலவர்கள் உளரேல் அவர்களைப் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் என்றே சொல்லலாம்! வாழ்க்கைத் தொடர்பில்லாத பிள்ளைப்பிரபந்தங்கள் பாராட்டிப் படிக்கப்படவில்லையா? எனக் கேட்கலாம். மதத்தையும் தெய்வ பக்தியையும் ஊன்றுகோலாகக் கொண்டு நிற்கும் எந்த நூல்தான் ஒரு சில வகுப்பினரால் ஆதரிக்கப்படவில்லை?

பிள்ளைத்தமிழ் நூல்களைப் பலர் பாராட்டுவது கவிச்சுவை காரணமாக வல்ல. சமயச் சமூக வாழ்வின் பயனுகத் தம் மனதில் ஏற்பட்ட ஒருவகைப் பற்று அல்லது பக்தியே பிள்ளைத்தமிழ் நூலில் ஈடுபடச் செய்கிறது. இந்துக்களுக்குப் பக்தியையுண்டாக்கும் புராணச் சம்பவங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பெறும் தமிழ் இலக்கியப் பகுதி எதுவும் தமிழ் பேசும் பிற மதத்தவர்களான கவிதா ரஸிகர்களை ஈடுபடுத்த முடியாது. இப்பகுதியை உண்மைக் கவிதை செறிந்த இலக்கியத்தோடு சேர்த்து ஒன்றாக மதிப்போர் கவிதையின் பண்பை அறியாதவர் ஆவர்.

உண்மைக் கவிதை நிறைந்த பாடல் கவிதா ரஸிகர்கள் அனைவரையும் தன் வயப்படுத்தும். கவிதை சாதி சமய விலங்கிற்குக் கட்டுப்படாத எங்கும் பரந்த சுதந்திரப் பொருள். அதைச் சங்கீதத்திலும் உயர்ந்ததாகக் கொள்ளலாம். சீனர்கள் பாராட்டும் சங்கீதம் நமக்கு ஏற்பதில்லை. அவ்வாறே நம்மை ஈடுபடுத்தும் ராகங்களும் கீர்த்தனங்களும் கருவிகள் வாயிலாக வெளிவரினும் பிறதேசத்தார் உள்ளத்தில் ஒருவித உணர்ச்சியையும் உண்டாக்குவதில்லை. ஆனால் கவிதையின் தன்மை அவ்வாறில்லை. மதம், நாகரிகம், ஜாதி, ஒழுக்கம், பேசும் பாஷை இவற்றால் நம்மில் வேறுபட்டு வட துருவத்தில் வாழும் ஒருவனும் நாம் தெரிந்து கொண்டிருக்கும் பொதுப்பாஷையில் இருக்கும் சிறந்த கவியின் பண்பை நம்மைப் போலவே ஒரே மாதிரியாக அநுபவித்து இன்பம் பெறலாம். தமிழைக்கற்ற ஐரோப்பியர் தமிழ்க் கவிதைகளைப் பாராட்டியதும் நாம் ஆங்கிலம் தெரிந்துகொண்டதனால் ஷேக்ஸ்பியர் மில்டன் வெளியிட்ட கவிதைகளைப் பாராட்டுவதும் இதற்கு ஏற்ற உதாரணங்களாகும். ஓவியத்தின் தன்மையும் இதைப்போன்றதேதான்.

தாகவிடாய்கொண்டவன் நீரைத்தேடி அலையும்போது அடிக்கடி கானலைக் கண்டு நீரென்று மயங்கி அந்த இடத்தைக் கிட்டியதும் ஏமாற்றமடைகிறான். கவிதாரஸிகர்களுக்கும் தமிழ் இலக்கியத்தைப் புரட்டிப் பார்த்தால், பிள்ளைத் தமிழைப் பொறுத்தவரை இதே நிலை தான் உண்டாகும். தலைப்பைப் பார்த்

தால் பிள்ளைத்தமிழ், உள்ளே புகுந்து பார்த்தால் அப்பருவத்திற்குச் சம்பந்தமில்லாத விவரங்கள்; வாழ்க்கைக்குச் சம்பந்தமில்லாத கருத்துக்கள்; ஹ்ருதயத்தைத் தொடாத, உணர்ச்சியை ஒரு சிறிதும் உண்டாக்கமாட்டாத சொல்லடுக்குகள். இவற்றையே சுமார் சென்ற ஆயிரம் ஆண்டுகளில் இயற்றிய பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் காணநேரும்.

சரித்திரக்காரர் கணக்குப்படி, சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பெரியாழ்வார் வாயிலாக வெளிவந்த கண்ணன் பிள்ளைத்தமிழ்க் கவிதையில் ஈடுபட்டு அநுபவித்த கவிதா ரஸிகர்களின் மனம் பிற நூல்களைக் கண்டு புண்படவே செய்தது. வளமும் வனப்பும் வாய்ந்த மருத நிலம்போய் வறண்ட பாலைவனம் வந்த போது ஒருவன் அடையும் வேதனையையே கவிதாரஸிகர்களின் மனமும் அடைந்தது. ஆயிரம் ஆண்டுகளுக்கு இவ்வாறுக இருந்துவந்த பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் நிலை தேசீய கவி பாரதியாரால் அடியோடு மாறிவிட்டது. கவிதாரஸிகர்களின் ஐம்புலன்களும் ஒன்றுகி மனதுடன் லயித்துத் திளைக்கலாகும் இன் கவி விருந்து பாரதியார் பிள்ளைத்தமிழ் வெளிவந்தபொழுதுதான் கிடைத்தது கிடைத்த விருந்தை நாமும் சற்று அநுபவித்துப் பார்க்கலாம்.

கண்ணம்மா என் குழந்தை

உள்ளத்து உணர்ச்சியைக் கூடுதல் குறைவில்லாமல் உள்ளவாறே வெளிப்படுத்தும் கவிதா சக்தியைக் கலைமகள் அருளால் பெற்றிருந்தால் அன்றி எந்தப் புலவனும் பாரதியார் போல் கவிதா ரஸிகர் விரும்பும் உயர்ந்த இன்ப அனுபவத்தைப், பத்துப் பிள்ளைத் தமிழ்ப் பாடல்களில் எய்துவிக்க இயலாது. தம் முன்னே ஆடி ஆடி நடந்தும் தவழ்ந்தும், பேசியும் வரும் குழந்தையை, அள்ளி எடுத்து அணைக்கக் காத்திருக்கும் பெற்றோர் குழந்தையை ஜாடை காட்டியும் பேசியும் அழைப்பர். குழந்தையை அழைக்கும் வார்த்தைகளில் பெற்றோரின் மனோபாவம் உள்ளபடியே பிரதிபலிக்கவேண்டுமானல் பாரதியார் கையாளும்,

பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும் பொற்சித்திரமே!.........
....
ஆடிவரும் தேனே!

இவ் வார்த்தைகளைவிட்டுத் தமிழ் மொழியில் வேறு பொறுக்கமுடியுமோ? என்ற எண்ணமே உண்டாகிறது. கவி மரபுப்படி 'வருகவே' என முடியும்வாரானைப் பருவப் பாடல்களையும், 'ஆடுகவே, ஆடியருளே' என முடியும் செங்கீரைப் பருவப் பாடல்களையும் பல பிள்ளைத் தமிழ் நூல்களில் படித்தும் கேட்டும் சலித்த மனத்திற்கும் செவிக்கும், ஆத்மானுபவத்திற்கு நிகராகச் சொல்லப்படுகிற இன்கவி இன்பம்,

> பிள்ளைக்கனி அமுதே—கண்ணம்மா
> பேசும் பொற் சித்திரமே!
> அள்ளி அணைத்திடவே-என் முன்னே
> ஆடிவரும் தேனே!

என்ற ஒரு பாடலைப் படிக்கும் போதே உண்டாகும்.

தன் மகனைச் சான்றோன் எனப் பிறர் சொல்லக் கேட்கும் பொழுது தாய் 'ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கும்' என்று திருவள்ளுவர் ஒப்புக்காட்டி அளவிட்ட உவகையின் தன்மையைப் பாரதியார்,

> ''மெச்சி உனை ஊரார்—புகழ்ந்தால்
> மேனிசிலிர்க்குதடி''

என்ற அடிகளில் அழகாக உணர்த்துகிறார். இதே போலக் குழந்தையின் மழலைச் சொல்லாலும், முல்லைப் பூப் போன்ற தம் பல் வரிசை தோன்றச் செய்யும் சிரிப்பாலும் பெற்றோர் பெறும் பயன்களைக் கூறும் கவியின் சொற்களைப் படித்தே அநுபவிக்க வேண்டும்.

குழந்தையிடம் முத்தம் தருமாறு பெற்றோர் வேண்டுவதாகக் கூறும் பகுதி பிள்ளைத் தமிழ் நூலில் முத்தப் பருவம் என்று சொல்லப்படுகிறது. பழம் புலவர்கள் இப்பகுதியிலும் வழக்கம்போல் புராணச்செய்திகளை நிரப்பிவிட்டு முத்தம் என்ற சொல்லைச் சிலேடையாக உபயோகிக்கும் சொல்விளையாட்டில் இறங்கி இருக்கின்றனர். பல புலவர்கள் வருணித்த முத்தத்தைப் பாரதியார் மிக நயமாக இரண்டு அடிகளில் எடுத்துக்

கூறுகிறார். குழந்தையிடம் முத்தம்பெற்ற பெற்றோரின் மனோநிலையைக் கலைமகளே பாரதியார் நாவில் நின்று வெளியிட்டிருக்கிறாள் எனக்கூறினும் அமையும். இல்லாவிட்டால்,

கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி

என்று சாமானியமாய் எவருக்கும் தோன்ற முடியாத பொருத்தமான உவமையால் அழகிய சொற்களில் உள்ளத்து உணர்ச்சியை ஒலி உருவாக்க முடியாது. தமிழ்ப்பாடல்கள் எல்லாம் ஒரு காலத்தில் மறைந்தாலும் தமிழ் அன்னை மார்பில் அணிவதற்கேற்ற வைரமணிகள்போன்ற இவ்விரு அடிகளும் கவிதாரஸிகர் நெஞ்சினின்றும் எந்நாளும் நீங்காது என்றே சொல்லலாம்.

பூஞ்சோலையில் வாசனையில்லாத போலிப் பூக்களும் இருப்பதுபோல் கவிதைப் பூஞ்சோலையிலும் பொருளற்ற கவிகளும் பூக்கும். வாஸனைப் பூவாயிருந்தாலும் காலையில் பூத்து மாலையில் வாடுவதுபோல் கவிதைகளிலும் ஒரு காலத்தில் ஒரு சமூகம் மட்டும் ரஸித்துப் பின் ரஸிப்போரின்றி வாடிப்போகும். இலக்கியப் பூஞ்சோலையில் பார்ப்பதற்கு ரமணீயமாய் என்றும் விடாமல் வாசனையோடு இருக்கும் மலர் போன்ற கவிதை ஆயிரம் ஆண்டிற்கு ஒரு முறை தோன்றும் என்று சொல்வதுண்டு. பிள்ளைத் தமிழைப் பொறுத்தவரை பெரியாழ்வார் தோன்றி ஆயிரம் ஆண்டிற்குப்பின் பாரதிவாயிலாக, 'கண்ணம்மா—என் குழந்தை' என்ற அழியாத கவிதைப் பூத் தோன்றியது என்றால் மிகையாகுமா?

(MADRAS), LTD.
Retail Branches
285, China Bazar :: 71, Pondy Bazar T. Nagar,
MADRAS.

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர்களை

உபயோகப்படுத்தி உணவைப் பெருக்குங்கள் !!!



Use Fordson MAJOR TRACTORS

நேரம் போக்கைச் சமாளிக்க உழைத்து வரும் இந்நெருக்கடியான வருடத்தில், வேலையைத் துரிதப்படுத்தவும் போதிய வேலையாட்ககளில்லாமையைச் சமாளிக்கவும் போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் விவசாயிகளுக்கு மிகவும் உதவியுள்ளது. சுலபமாகக் கையாளக்கூடிய இந்த மேஜர் சிக்கன முறையில் பெரிய அல்லது சிறிய நிலப்பரப்பை உழுவதற்கு உதவுவதோடு போரடிக்கும் கருவியை இழுக்கவும் போதிய சக்தி பெற்றிருக்கிறது. ஹைடிராலிக் முதலிய பிரத்தியேக சாதனங்களோடு கூடிய இந்த மேஜர் உழவுத்தொழிலுக்குத் தேவையாயுள்ள ஒவ்வொரு வேலைக்கும் விசையளிக்க வல்லது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202 - 203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)**

டெப்போ:— **கோயம்புத்தூர்.**

வெற்றி யாருக்கு?



ஆர். எஸ்

பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. அந்த மலைப் பிரதேசம் முழுதும் காரிருள் மெல்லக் கவியத்தொடங்கியது. நாள் முழுதும் தொடர்ந்த யுத்தத்தினால் ஏற்பட்ட களைப்பு எல்லோருக்கும் இருந்தது பெரிய பீரங்கிகளை வைத்து இழுத்த அலுப்பினால் எருதுகள் நடக்கவும் முடியாமல் இருந்தன. மூன்று பேருக்குமேல் ஏறக்கூடிய பெரிய தேர்களை இழுத்துப் புரவிகள் ஓய்ந்து போயிருந்தன.

பனி பெய்யத் தொடங்கியது. பரந்த அந்த வான விதானம் உதிர்த்த கண்ணீர் புல்லையும் நிலத்தையும் பெரிய அந்தக் கற்பாறைகளையும் நனைத்தது. நிலா வெளிக் கிளம்பத் தொடங்கியது. ஆனால் அக்பருடைய மனத்தில் தான் நிம்மதி இல்லை. ஆரம்பத்திலேயே இது எவ்வளவு கடினம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். எப்படியும் வெற்றியடைவது என்ற உறுதி தான் அவருக்குக் கொஞ்சம் நம்பிக்கை அளித்தது. ஆனால் இப்போது அவர் உறுதி பெரிதும் தளர்ந்து விட்டது. வளைந்து வளைந்து நிற்கும் மலைகள் இயற்கையாக அமைத்த அரண்களுக்குநடுவில் சித்தூர்க் கோட்டை இருந்தது. கற்றுக் கொள்ள முடியாத மொழியைப்போல் அதன் அருகில் போகும் வழியைக் காண்பதே முடியாததாக இருந்தது

ஒரு பெரிய சப்தம் கேட்டது. பூமியே அதிர்ந்தது. பகலில் எங்கேயோ வெடிமருந்து சிந்திய இடத்தில் குளிர் காய நெருப்பு மூட்டியதால் அந்த நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். ஆயிரக் கணக்கான உயிர்கள் இருக்கும் அந்த இடத்தில் அவ்வளவு அஜாக்

கிரதையாக நடந்துகொண்டவன் யார்என்று அறிந்துகொள்ள அக்பர் அங்கே விரைந்து சென்றார்.

அது அவர் எதிர்பார்த்ததைவிடப் பெரிய வெடிப்பு. பூமி அந்த இடத்தில் சரிந்திருந்தது. அக்பர் அந்த இடத்தையே வெறித்துப் பார்த்தார். பார்க்கப் பார்க்க அவர் முகம் மாறியது. ஏதோ காணாததைக் கண்டவர் போல முகம் வேறுபட்டது.

கொஞ்ச நேரத்தில் கடப்பாரையினால் அந்த வெடிப்பைப் பிளந்தார்கள். அக்பர் எதிர்பார்த்ததைப்போலப் பூமி அந்த இடத்தில் தன் வயிற்றினுள் ஒரு பெரிய சுரங்கப் பாதையை அடக்கிக்கொண்டிருந்தது. தம் பின்னால் யாரும் வர வேண்டாம் என்று சைகை செய்துவிட்டு அக்பர் அந்த அகாதமான பள்ளத்தினுள் இறங்கத் தொடங்கினார்.

2

அவருடைய துணிச்சல் அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. கையில் இருந்த துப்பாக்கியையும், விளக்கையும் தவிர அவருக்கு அங்கே வேறு துணையில்லை. இருண்டு கிடந்த அந்தச் சுரங்கப் பாதை முடிவற்றது போலத் தோன்றியது. தலைக்கு மேலிருந்து ஆங்காங்கே கற்கள் பொடியாகி விழுந்தன. அடியெடுத்து வைக்கும் போதெல்லாம் பெரிய எதிரொலி எழுந்தது. சிறைப்பட்டுக் கிடந்த காற்று சகிக்க முடியாத நாற்றத்தைக் கிளப்பியது.

திடீரென்று மேலே போவது போன்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது. அதலபாதாளத்தில் இருந்து தரையை நோக்கி வருவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. திடீரென்று சில்லென்றகாற்று அவர்மேல் பட்டது. அவருடம்பு புல்லரித்தது. நெஞ்சு திடுக்கிட்டது. இந்தக்காற்று எங்கே இருந்து வருகிறது. கழுத்தளவில் ஒரு இடத்தில் இரண்டு பாறைகளின் நடுவில் ஒரு பிளவு இருந்தது. அந்த இடத்திலிருந்து சித்தூரின் மற்ற இடங்கள் நன்றாகத் தெரிந்தன.

அந்த இடம் சித்தூர்க் கோட்டையின் மதிலுக்குள் இருந்தது. அங்கே இருந்து சுமார் நான்கு கஜ ஆழத்தில் எதிரிகள் தங்கியிருந்த இடம் தெரிந்தது. அந்த இடம் அப்போது அமைதியாக இருந்தது. எல்லோரும் ஒரு மேஜையின் அருகில் கூடியிருந்தார்கள். மேஜையின் அருகில் நின்றுகொண்டு ஒருவன் பேசிக் கொண்டிருந்தான். நல்ல நிலா வெளிச்சத்தில் அவைகள் அனைத்தும் ஒரு கனவுக் காட்சியைப் போலத்

தோற்றமளித்தன. அந்த மனிதனை அக்பருக்கு நன்றாகத் தெரியும்.

கடந்த ஒருமாத காலமாகக் கனவில்கூடத் தொடர்ந்து அவருக்குக் கவலை அளித்து வருபவன் அவன்தான். அவன்தான் ராஜபுத்திரத் தலைவன் ஜயமல். ராணா உதயசிங் ஓடிமறைந்தபின் பதவியை ஏற்றுக் கொண்டவன்.

அக்பர் மனதைத் திடப்படுத்திக் கொண்டார். அவனை நோக்கிக் குறிவைத்துச் சுட்டார். வெளியிலிருந்து பெரிய அரவம் எழுந்தது. தலைக்குமேல் இருந்த நிலம் அகழ்ந்து விழுந்துவிடும்போல இருந்தது. அக்பர் உடல் சிலிர்த்தது. வந்த பாதை வழியே வேகமாகத் திரும்பினார். தட்டுத் தடுமாறி சுரங்கவாயில் அடைந்தார்.

3

ஜயமல்லின் வீழ்ச்சி ராஜபுத்திரர்களின் வீழ்ச்சிக்கு அறிகுறியாகிவிட்டது. மறுநாள் கடும்போர் நடந்தது. ஆயிரக்கணக்கான ராஜபுத்திர வீரர்கள் வாளுக்கு வாழ்வைப் பலியிட்டார்கள். தியாகம் அங்கே தங்கிச் சுடர்விட்டது. பதினாறுவயது இளவரசனும் அவன் தாயும் போர்க்களத்தில் உயிர்விட்டனர். கடைசியில் அந்தப் புனிதமான சித்தூர்க்கோட்டை அக்பர் கையில் சிக்கியது.

அதன் உள்ளே மனிதர் இல்லை. ஆனால் அமரத்துவம் எய்திய உயிர்கள் அதைத் தூய்மைப் படுத்தின. அந்த விசாலமான கோட்டையை ஆள ஒரு ராஜபுத்திர உயிர் கூட இல்லை. ஆனால் எதிரிகளின் மனத்தில் கூட மாறாத இடம் பெறக்கூடிய வீரர்கள் வாழ்ந்த இடம் என்பதே அந்தக் கோட்டைக்குப் பெருமையாக இருந்தது. மாலையில் கதிர்கள் சுருங்கி, கங்குல் நெருங்கும் போது கீழ்வானம் சிவந்து விளங்கியது. ஆனால் அதைவிடச் சித்தூர்க் கோட்டையைச் சுற்றியிருந்த நிலப் பரப்பில் சிவப்பு நிறம் அதிகமாகப் படிந்திருந்தது.

அந்த இளவரசனும் அவன் தாயும் அக்பர் மனதைக் கவர்ந்துவிட்டார்கள். அவர்கள் வீரத்தையும் துணிவையும் பாராட்டி அவர் உருகினார். டில்லி திரும்பினதும் அரண்மனை முன் வாயிலில் அவர்கள் இருவருக்கும் சிலைகள் நாட்டினார்.

4

ஸிக்ரி என்ற ஊரைப்பற்றி யாரும் கேள்விப்பட்டிருக்க நியாயம் இல்லை. ஆனால் அக்பர் வழிபட்ட ஸலீம் என்ற பக்கிரி அங்கே பிறந்ததினால் அந்த ஊரின் மதிப்பு பெரிதும் உயர்ந்தது. 1569ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அவருடைய மனைவி, ஜெய்பூர் இளவரசி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக்பர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார்.

அந்தப் பக்கிரியின் பெயரையே குழந்தைக்கும் வைத்தார். அவர் பிறந்த ஊரான ஸிக்ரியைப் பெருமைப் படுத்தவும் எண்ணினார். சித்தூரில் கண்ட வெற்றி அவருடைய இந்த எண்ணத்தைப் பலப்படுத்தியது. வெற்றியின் ஞாபகார்த்தமாக, ஸிக்ரியில் ஒரு பெரிய நகரம் நிர்மாணிக்க அவர் எண்ணினார். அவருடைய மனத்தில் எவ்வளவோ எண்ணங்கள் தோன்றின, கணக்கற்ற இரவுகள் துயிலைமறந்து அந்தப் புதிய நகரத்துக்கான திட்டங்களை வகுத்தார்.

அந்தத் திட்டங்களை அவர் எண்ணியபடி செய்து முடித்து நல்ல பெயர் வாங்குவோம் என்ற நம்பிக்கை எந்தக்கலைஞனுக்கும் கிடையாது, ஒருவருக்காவது அந்தத் துணிச்சல் ஏற்படவில்லை, நாட்கள் கழிந்தன. தம்முடைய திட்டங்களைத் தக்க ஒருவனிடம் ஒப்படைக்க இயலாமல் அக்பர் நாட்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார். அவ்வளவு பெரிய மொகலாய சாம்ராஜ்யத்தில் அவர் விருப்பத்தைக் குறையில்லாமல் நிறைவேற்றக் கூடிய கலைஞன் ஒருவன் கூட இல்லை. தம் எண்ணம் எல்லாம் வெறும் கனவாக முடிந்து விடுமோ என்று அவர் கவலையுறத் தொடங்கினார்.

அன்று சபையிலிருந்து திரும்பும் போது அவருக்கு அந்த நல்ல செய்தி கிடைத்தது. அவருடைய திட்டங்களைப் பார்வையிட்ட ஒரு கைதேர்ந்த சிற்பி அவைகளை நிறைவேற்றி வைக்கத் தன்னால் முடியும் என்று ஒப்புக் கொண்டதாகச் செய்தி கொணர்ந்தவன் சொன்னான்,

அக்பருடைய மனதில் அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. மந்திரிக்குச் சொல்லி அனுப்பினார். மறுநாள் அவசியம் அந்தச் சிற்பியைத் தம்மிடம் அழைத்து வரும்படி அவரிடம் சொன்னார்.

* * *

அக்பர் ஆவலுடன் அவன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தார், ஆனால் மந்திரிமட்டும் தனியாகத்தான் வந்தார்.

"மன்னிக்கவேண்டும் சாஹேப்! அவன் தங்களைப் பார்க்கமுடியாது."

அக்பருக்கு அளவில்லாத ஏமாற்றம் உண்டாயிற்று. மந்திரி தொடர்ந்து கூறினார்.

"அவன் சொன்னது இதுதான். 'நான் சக்கரவர்த்தியை நேரில் சந்திக்க விரும்ப வில்லை. வெறும் செல்வத்துக்கோ, பெருமைக்கோ, அல்லது செல்வாக்கு அடையவோ எல்லோரும் செய்யும் காரியம் அது. நான் வாழ்க்கையில் வெற்றியை நழுவவிட்டவன். ஏமாற்றம் அடைந்து என் மனம் உணர்ச்சியற்றுப் போய்விட்டது. என் வாழ்க்கையிலேயே எனக்குக் கொஞ்சம் இன்பம் அளிக்கக்கூடியது என் கலைத்திறமை தான். அதற்கு யார் எனக்குச் சந்தர்ப்பம் அளித்தாலும் நான் அதை மட்டற்ற மகிழ்ச்சியோடு ஏற்பேன். இவ்வளவு பெரிய நகரத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்வேன் என்பதை நினைக்கும்போது என் மனம் பூரித்துப்போகிறது. உண்மையாக உள்ளத்தின் உணர்வதைக் கூறுகிறேன். எனக்குச் சன்மானம் வேண்டாம். நகரம் முழுமையும் நிர்மாணித்த பிறகு அதன் நடுவில் நான் ஒரு மாளிகை எழுப்புவேன். அதன் நடுவில் ஒரு பளிங்கு விஹாரம் அமைப்பேன். அங்கே என்னுடைய உருவம் ஒன்றை நான் அமைப்பேன். நகரத்தில் வேலை முடிந்ததும் நான் போய்விடுவேன். அப்புறம்தான் சக்கரவர்த்தி அந்த மாளிகையைப் போய்ப் பார்க்கலாம். இதுதான் நான் வேண்டுவது. இதற்குச் சக்கரவர்த்தி சம்மதிப்பாரானால் அவருடைய எந்தக் கட்டளையையும் நான் நிறைவேற்றி வைப்பேன்.

"நான் ஒரு அங்கஹீனன். ஒரு கால் இல்லாதவன். நான் எப்படி இந்த வேலைகளைச் செய்வேன் என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். ஆனல் ஒரு கால்இல்லாத என்னைச் சக்கரவர்த்தி பார்க்கக் கூடாது. நீங்கள் அதற்கு ஒப்பமாட்டீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக நான் அதற்குச் சம்மதிக்க மாட்டேன். இந்தச் செய்தியை அவரிடம் தயவு செய்து சொல்லி விடுங்கள்."

இதைச் சொல்லும்போது மந்திரியின் நெஞ்சிலேயே உணர்ச்சி பெருகியது. உணர்ச்சி மிகுதியினல் நெஞ்சு விம்மியது. பேசுவதுகூடக் கடினமாக இருந்தது.

அக்பர் அசையாமல் உட்கார்ந்திருந்தார். அவருடைய மனம் அந்தச் சிற்பியிடம் லயித்திருந்தது. அவருடைய உள்ளம் அவன் உருவத்தைக் கற்பனை செய்ய முயன்றது. அவனுடைய பெருந்தன்மையை அவரால் அளவிட முடியவில்லை. தன்னுடைய மரியாதை, கௌரவம்-இவைகளை அவன் எவ்வளவு தூயமுறையில் பாதுகாக்கிருன் என்பதை நினைக்கும் போது அவரால் அவனை வியந்து பாராட்டாமல் இருக்க முடியவில்லை. எண்ணற்ற அரசர்களை வெற்றி கொண்ட அவரையும் உண்மையில் அவன் ஜயித்துவிட்டான். அவன் தம்முடைய குடி மக்களில் ஒருவன் என்பதை நினைக்கும்போது அவருடைய பெருமை வரை கடந்தது. அங்கே நிலவிய நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு சக்கரவர்த்தி முதலில் பேசினர்.

"இத்தகைய ஒரு கலைஞன் நம் நாட்டுக்குப் பெருமை தரக்கூடியவன். என் கனவுக்கு உருவம் தரமுடியும் என்று கூறும் இவனுடைய வேண்டுகோளை நான் அவமதிக்க மாட்டேன். அவன் வேண்டியதை நான் அளிக்க வாக்குறுதி கொடுத்ததாகச் சொல்லுங்கள்."

அவர் எழுந்து சென்ருர். தம்முடைய நினைவு மறுபடி அக்பருக்கு வருவதற்கு வெகு நேரம் ஆயிற்று.

5

ஸிக்ரியில் எழுந்த அந்த நகரத்துக்குப் பாதபூர்சிக்ரி (வெற்றி நகரம்) என்று பெயரிட்டார்கள். வேலை தொடங்கியது. அக்பரே நேரில் சென்று அடிக்கடி வேலைகளைப் பார்வையிட்டார். ஒருமுறைகூட அவனை அவரால் சந்திக்க முடியவில்லை. ஆனல் அங்கே எழுந்த எழில்நகரம் அவர் கற்பனையைவிடப் பன்மடங்கு உயர்ந்ததாக இருந்தது.

சுமார் நூறுஅடி உயரமுள்ள மசூதிகளும் மாளிகைகளும் கட்டப்பட்டன. ஒவ்வொன்றிலும் முக்கியமான விஹாரங்களில் காந்தஹாரிலிருந்தும் சாமர்க்கண்டிலிருந்தும் வரவழைக்கப்பட்ட வெள்ளைச் சலவைக்கற்களும் இளநீலக் கற்களும் உபயோகிக்கப்பட்டன. உயர்ந்த மெழுகினல் தேய்த்து மிருதுவாக்கப்பட்ட அந்தத் தரைகளை காஷ்மீரத்துக் கம்பளங்கள் அலங்கரித்தன. உயர்ந்த வகைக் கண்ணுடிக் கொத்துக்களைச் செய்வதற்காக ஊருக்கு அருகிலேயே ஒரு கண்ணுடித் தொழிற்சாலை நிறுவப்பட்டது.

சுமார் மூன்றுமைல் சுற்றளவு உள்ள அந்த நகரத்தைச் சுற்றிச் சிவப்பு மணற்பாறைகளைக் கொண்ட மதிள் சுவர் எழுப்பினர்கள். பள்ளிக்கூடம் ஒன்றும், சக்கரவர்த்திக்குப் பிடித்தமான போலோ விளையாடும் மைதானம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டன. சுமார் ஆறு மைல் நீளமுடைய பெரிய ஏரி ஒன்றிலிருந்து ஊரின் ஒவ்வொரு பாகத்துக்கும் தண்ணீர் கொண்டுவர வழி ஏற்படுத்தி அதைச் சுத்தம் செய்யப் பெரிய தொட்டிகள் கட்டினர்கள்.

மக்கள் பொழுதுபோக்க நிறைய வசதிகள் இருந்தன. வறண்டு கேள்வியில்லாமல் கிடந்த அந்த மலைப் பாறைகளில் இப்போது நந்தவனங்கள் எழுந்தன. சுமார் அரைமைல் சுற்றளவுள்ள பெரிய நந்தவனம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. அதன் பல பாகங்களைப் புற்படர்ந்த பாதைகள் இணைத்தன. நடுவில் தண்ணீர் விழும் இடத்தில் ஆக்ராவிலிருந்து வந்த ஒரு சிற்பி பச்சைநிறக் கல்லில் ஒரு சிலை செய்துவைத்தான். மயில்கள் அங்கு வளர்க்கப்பட்டன. நிழல் தரும் மரங்கள் அடர்ந்த அந்த இடத்தில் படர்ந்தகொடிகளை அழகாக இணைத்துவிட்டிருந்தார்கள். காஷ்மீரத்திலிருந்து கொண்டுவந்த மலர்ச்செடிகள் பாதையின் இருமருங்கிலும் வளர்க்கப்பட்டன. நந்தவனத்தின் வலது கோடியில் அமைந்த தடாகத்தில் வினோதமான வர்ணங்களில் பல விதமான மீன்கள் வளர்க்கப்பட்டன.

அரசருடைய மாளிகைக்கு அருகில் பெரிய நூல்நிலையம் ஒன்று கட்டப்பட்டது. அதனுடைய மேல் தளத்தில் சுமார் இருநூறுபேர் கூடக்கூடிய ஒரு பெரிய விஹாரம் தூய சலவைக்கல்லினால் அமைத்தார்கள். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கலைஞர்கள் அங்கு வந்து கூடி அரசரை மகிழ்விக்க அதை ஏற்படுத்தினார்கள்.

இத்தகைய ஒரு கனவு போன்ற நகரத்தை நிர்மாணித்த பின்பு தனியாக அந்தச் சிற்பியினுடைய மேற்பார்வையில் அந்த மாளிகை கட்டப்பட்டது. அதனுள்ளே யாரும் நுழைவதற்கு அநுமதிக்கப்படவில்லை. கடைசியாக அதன் நடுவில் ஒரு பளிங்கு விஹாரம் அமைக்கப்பட்டது. ஒரு இரவு தனியாக அந்தச் சிற்பி மட்டும் அமர்ந்து தன் சிலையைச் செதுக்கினான்.

மறுநாள் அந்த விஹாரத்திற்குச் சக்கரவர்த்தி விஜயம் செய்வார். அழகிய கலைத் திறமைகொண்ட அந்தச் சிற்பியின் சிலையைத் திறந்துவைப்பார். அக்பருடைய மனம் நிலைகொள்ளவில்லை. தண்ணீர் நிறைந்து வழியும் தடாகத்தைப்போல அவர் மனதில் மகிழ்ச்சி ததும்பிவழிந்தது. இரவு அவர் தூங்கவில்லை. நந்தவனத்தில் போய் அமர்ந்துகொண்டிருந்தார்.

அவருக்கு அந்தச் செய்தி கிடைத்தது. அது அந்தச் சிற்பியின் லிகிதம். "உங்களுடைய ஆசை குறையின்றி நிறைவேறியிருக்கும் என்று நினைக்கிறேன். உண்மையிலே உங்களுக்கு ஒரு குறை இருந்திருக்குமானால் அது நீங்கள் என்னைப் பார்க்கமுடியவில்லை என்பதுதான். ஆனால் அதுவும் ஒரு நன்மைக்குத்தான். நீங்கள் மட்டும் என்னைப் பார்த்துவிட்டிருந்தால் இன்று இந்த நகரம் இங்கே இருக்கமுடியாது. வெகு நாட்களாக நான் கண்ட கனவு நிறைவேறிவிட்டது. உங்களுடைய கையில் இந்த லிகிதம் கிடைக்கும்போது நான் கண்காணாத இடத்தில் இருப்பேன். உங்களுக்கு வேண்டுமானால் நான் என் வாழ்நாளில் கண்டறிந்த ஒரு உண்மையைச் சொல்லுகிறேன். நேர்மைக்கு என்றைக்கும் நல்ல பலன் கிடைக்கின்றது. ஆனால் வினை விதைப்பவன் அதன் விளைவை அனுபவிக்கத் தவறுவதில்லை,"

அந்தக் கடிதத்தின் கடைசி வாக்கியங்கள் அவர் சிந்தனையைப் பெரிதும் தூண்டிவிட்டன. இரவு முழுதும் அவரால் தூங்கமுடியவில்லை.

6

மறுநாள் அந்த நகரமே மகிழ்ச்சியில் ஆழ்ந்துகிடந்தது. அந்த நகரத்தின் அழகுச் சிகரமாக, எழில் உருவமாக அந்த மாளிகை அமைந்திருந்தது. தங்கமுலாம் பெற்ற வளைந்த வாயில்களின் நடுவே கருநீலச் சலவைக் கற்கள் பதிக்கப்பெற்ற அந்தப் பளிங்கு விஹாரம் வெகு அழகாகத் தோற்றம் அளித்தது.

கடைசியில் சக்கரவர்த்தி வந்து சேர்ந்தார். மாளிகையைச் சுற்றிப் பார்த்தபின் பளிங்கு விஹாரத்துக்குள் நுழைந்தார். இரு புறங்களிலும் மகாகவி ஒருவரின் பொன் மொழிகள் பொறிக்கப்பட்டிருந்தன.

"வாழ்க்கை மதுத் துளித்துளியாய் வடிந்து
கழிவதுகாண்
வாழ்க்கை இலை ஒவ்வொன்றாய் விழ்ந்து
மடிவதுகாண்"

அக்பருடைய நெற்றி சுருங்கியது. வெற்றிக் கோலாகல நாளில் வேதாந்தமா? வாழ்க்கையில் அடைந்த வெற்றி அற்பமென்று அறிவுறுத்துவதற்கு அதுதானா சமயம்? அவர் மேலும் நடந்து சென்றார்.

"எங்கிருந்தோம் ஏன் பிறந்தோம் என்றறியாது
இவ்வுலகில்
பொங்கியதோர் நீர்ப்பாய்ச்சல் புதுமையினில்
புகுந்தோம் நாம்
எங்கு செல்வோம் என்றறியாது ஏகவெளிச்
சூறையென
மங்கிடுவோம் இவ்வுலக வாயில்விட்டுப்
போவோமால்"

குதூகலமாக வாழ்க்கையைத் தொடங்கும் நாளில் வாழ்வின் இறுதியைப் பற்றிய பேச்சா? வெற்றிச் சின்னமாகக் கட்டப்பட்ட கட்டிடத்தில், வாழ்வின் இன்பம் காரணமாகப் பிறந்த குழந்தைக்காகக் கட்டப்பட்ட

நகரத்தின் முக்கியமான இடத்தில் வாழ்வின் குறைவைப்பற்றிய எழுத்துக்கள் மட்டுமா பொறிக்கப்பட்டன?

அக்பர் மகிழ்ச்சி பெரிதும் குன்றிவிட்டது. வெற்றியை இழந்த வீரனைப்போல் மெதுவாக மேலே நடந்து சென்றார்.

“காணும் கனவெல்லாம் கரியாகப் போகுமன்றிப்
பேணிப் பெருமைதரும் பெருங்கனவும் எல்லாமும்
பாலைவனந்தரத்துப் பனி ஒளிபோல் சின்னேரம்
கோலம்விளக்கிப்பின் குமைவதுகாண்-கானுமே”

இது என்ன? உண்மையில் அவர் எதிர்காலத்தைப்பற்றிய வார்த்தையா இது? அவர் கட்டிய இந்த நகரத்தின் வாழ்வும் பெருமையும் அற்ப நாட்களுக்குத்தானா? பிற்காலத்தில் சக்கரவர்த்தியாகப் போகும் தம் மகன் ஸலீமைப்பற்றித் தாம் நினைப்பதெல்லாம் கனவாகவே கரிந்து போய்விடுமா?

அவர் உடல் தளர்ந்தது. அவரால் வேறு எதையும் படிக்க முடியவில்லை. உற்சாகம் இழந்த முகத்துடன் அவர் சிலையின் அருகில் சென்றார். சிலையின் மேல்துணியை விலக்கினார். தூய வெள்ளைச் சலவைக்கல்லால் ஆன அந்தச் சிலையைப் பார்த்ததும் அவர் உடல் படபடத்தது. உள்ளம் துடித்தது. உணர்ச்சி பெருகியது. அந்தச் சிலை, தலைவன் ஜயமல்ரத்தாரினுடைய உருவம்!

அக்பர் உணர்வு ஒடுங்கியது.

அந்த உருவத்தின் முகத்தில்தான் எவ்வளவு வேதனை?

அந்தச் சிலையின் காலடியில் ஒரு துணிச் சுருள் இருந்தது. அவர் அதை எடுத்துக் கொண்டார். அங்கேயே அதைப் படிக்க அவருக்குத் துணிவு இல்லை. கண்கள் இருண்டன. கருத்துச் சோர்ந்தது. முந்தைய இரவு அவர் படித்த கடிதத்தில் ஒரு வாக்கியம் அவர் நினைவுக்கு வந்தது. “உண்மையிலே உங்களுக்கு ஒரு குறை இருந்திருக்குமானால் அது நீங்கள் என்னைப் பார்க்க முடியவில்லை என்பதுதான். ஆனால் நீங்கள் மட்டும் என்னைப் பார்த்திருந்தால் இன்று இந்த நகரம் இங்கே இருக்கமுடியாது”

அவர் மாளிகைக்குத் திரும்பிவிட்டார். அவர் மனம் பெரிதும் சோர்ந்திருந்தது.

7

கடல் தாலாட்டும் கப்பலைப்போல அவர் உள்ளம் அலைக்கலுற்றது. எண்ணங்கள், ஏமாற்றம், நம்பிக்கை, வீண் ஆசை, எல்லாம் அதனுள் சுழியிட்டன. பயங்கரமான கனவைக் கண்டு விழித்தபின் அடிக்கடி அதை மறக்க முயலுவதுபோல் சற்று முன் நடந்த சம்பவத்தைத் தம் நினைவிலிருந்து அகற்றிவிட அவர் முயன்றார்.

அரண்மனைக்குள் நுழைந்ததும் நேராகத் தம் அறைக்குச் சென்றார். வெறுப்பான காரியத்தைத் தொடங்குவதுபோன்ற மனநிலையுடன் நடுங்கும் கைகளுடன் லிகிதத்தைப் பிரித்தார்.

“அக்பர் சாஹேப்,

சக்கரவர்த்தி என்று தங்களை அழைக்காததற்கு என்னை மன்னிக்கவும். இதுவரையில் தங்களை நான் அப்படி அழைத்ததில்லை. இனியும் அழைக்கும்படியான நிலையில் இருக்கக் கூடாது என்பதுதான் என் விருப்பம்.

துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் ஏமாற்றத்தைத் தாங்குவது மிகவும் கடினம். சொந்த அனுபவத்தால் நீங்கள் அதை இப்போது உணர்ந்துகொண்டிருப்பீர்கள். சுமார் இரண்டு வருஷங்களுக்குமுன் நிலா ஒளிபடர்ந்த ஒரு இரவில் என்னுடைய போர் வீரர்களுக்கு நான் ஆணையிட்டுக்கொண்டிருந்தேன். சித்தூர்க் கோட்டையின் வாசனையைக்கூட நீங்கள் உணர முடியாதபடி உங்களை ஒரு மாதம் நிறுத்தி வைத்திருந்தேன். போரின் சுவராஸ்யம் உச்சநிலையை அடைந்திருந்தது. அத்தகைய நிலையில் உங்களை வளைத்துத் தாக்கி விரட்டும்படியான சாதுரியமான முறையை நான் வகுத்துக் கொண்டிருந்தேன். போர் முறையில் என் முழுச் சாமர்த்தியத்தையும் காட்ட நான் தீர்மானித்திருந்தேன். தேச பக்தியினால் உள்ளம் நிமிர்ந்திருந்த அந்தக் கணத்தில், என்னுதன எண்ணி நான் விம்மித மடைந்திருந்த அந்தக் கணத்தில் ஒரு வெடிகுண்டு சப்தம் கேட்டது. என் கால் ஒன்றில் அடிபட்டது. நான் நினைவிழந்தேன். என்னை மறைவான இடத்தில் வைத்துச் சிகிச்சை செய்தார்கள். அதன் பலனாக வலதுகால் இன்றி நான் உயிர் பிழைத்து எழுந்தேன். ஆனால் என்ன பயன்? நான் உயிர்பெற்ற போது சித்தூர் பிணக்காடாக இருந்தது. என்னுடைய சாதுரியமான போர் முறைகள் எண்ணத்திலேயே அடங்கிவிட்டன. ஏமாற்றம் என் நெஞ்சை அமுக்கியது.

இந்த காரியம் செய்தது யார் என்று நான் அறிவேன். உங்கள் படைப்புலத்திலேயே என்னைக் கண்டு அடையாளம் கூறக்கூடியவர் நீங்கள் ஒருவர்தான். ஆனால் நீங்கள் இவ்வளவு இழிவான ஒரு காரியத்தைச் செய்வீர்கள் என்று என்னால் நம்பமுடிவில்லை. அரசன் ஆணைப்படி குண்டுவந்த திசையில்

இருந்த குகைப் பாதையை இடித்து உங்களைப் பின்தொடர்ந்த ஒற்றர்கள் துப்பாக்கியுடன் உங்களைத்தான் கண்டதாகக் கூறினார்கள்.

நல்லவேளையாகக் கடவுள் எனக்கு இரு கைகளைக் கொடுத்திருந்தார். அத்துடன் அற்புதமாகச் சிற்பம் சமைக்கும் திறமையையும் கொடுத்திருந்தார். அதை நம்பி உங்களுடைய துரோகச் செயலுக்கு நான் பழி வாங்கத் தீர்மானித்தேன். துரோகத்தை அடிப்படையாகக்கொண்டு எழுந்த வெற்றியைக்கொண்டாட நீங்கள் தீர்மானித்தீர்கள். என் உள்ளத்தில் ஏறிய ஏமாற்றச் சுமை உங்களுக்குத் தெரியாது. அதை நீங்கள் உணரவேண்டும் என்று எண்ணினேன். நீங்கள் இழைத்த துரோகம் உங்களுக்கே வினையாக முடிந்தது. அங்கஹீனன் என்ற பட்டமே என்னை உங்கள் கண்களினின்றும் மறைத்தது.

இன்று நீங்களும் நான் அனுபவித்த துயரை அனுபவிக்கிறீர்கள். ஆயிரம் விதமாகப் போரிட விருப்பம் இருந்தும் படுத்த படுக்கையைவிட்டு எழ, வலுவில்லாமல் இருந்த என்னைப்போல் கோடிக் கணக்கில் செலவழித்தும் அதைக் கட்டுவதற்கு உங்கள் எதிரியை நம்பி ஏமாந்தீர்கள்: இவ்வளவு செலவழித்து வெற்றியைக் கொண்டாட எண்ணினீர்கள். ஆனால் உண்மையில் யாரைத் தோற்கடித்ததாகச் சொல்லி இந்த வெற்றியைக் கொண்டாடினீர்களோ அவனுடைய வெற்றியாகவே இது முடிந்தது. நீங்கள் தோற்கடித்த ஜயமல் உங்கள் வெற்றி நகரத்தைச் சிருஷ்டித்தவன். இதை விட அவமானம் வேறு என்ன இருக்கமுடியும்? இதைவிட வேறு தோல்வி என்ன வேண்டும்? உண்மையில் உங்கள் துரோகம் இத்துடன் உங்களை நிறுத்திவிடாது. ஆனால் இனிமேலாவது நீங்கள் யாரையும் என் கதிக்கு உள்ளாக்காமல் இருப்பீர்களா?''

ஜயமல்

கடிதம் முடிந்தது. அவருடைய கைகள் நடுங்கின. கருத்து ஓய்ந்தது.

8

இரத்தினமும் மாணிக்கமும் இழைத்த அந்த விஹாரங்கள் வெறிதாகின. பிரபுக்கள் உலவிய அந்தக் கடைவீதிகள் பாலைவனமாகின. ஊரில் ஒருவர் இல்லாமல் எல்லோரும் டில்லிக்குத் திரும்ப அக்பர் உத்தரவிட்டார். அந்த அழகான நகரம் நரிகளுக்கும், ஓநாய்களுக்கும் இடமாயிற்று.

* * *

இத்தகைய ஒரு ஏமாற்றம் மட்டும் இல்லாதிருந்தால் பாதபூர் சிக்ரி இன்று இவ்வளவு தூரம் பிராபல்யம் இல்லாமல் இருந்திருக்காது. அக்காலத்து ஆங்கில சரித்திராசிரியர்கள் அதை லண்டனைவிட உயர்ந்ததாக வருணித்திருக்கிறார்கள்.

ஆனால் ஜயமல் நம்பியது வீண் போகவில்லை. இன்னொரு முறை அக்பர் தம் துரோகத்தின் பலனாக ஏமாற்றத்தை அடைந்து துயருற நேர்ந்தது. சிக்ரியில் பிறந்த பக்கிரியின் பெயரை வைத்துக்கொண்ட ஸலீம் பாதபூர் சிக்ரியின் தோற்றத்திற்கு நாயகனான ஸலீம் பிற்காலத்தில் குடிக்கும் அடிமைப்பெண்ணின் காதலுக்கும் அடிமையானான். அதனால் அக்பரின் நண்பரான அபுல் பாஸலையே கொன்றான்.

பிற்காலத்தில் பெரிய வீரனாகத் தம் மகன் விளங்குவான் என்று எண்ணியிருந்த அக்பர் இதைக்கண்டு ஏமாற்றத்தால் துடி துடித்ததாகச் சரித்திரம் சாட்சி சொல்லுகிறது.

காவேரி சந்தா விகிதம்

சந்தாவிபரம்	உள் நாடு, ஸிலோன் & பர்மா.	மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு
ஒரு வருஷம்	6 0 0	7 8 0
அரை வருஷம்	3 0 0	3 12 0
தனிப் பிரதிஒன்றுக்கு	0 8 0	0 10 0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

கர்நாடக ஸங்கீதம்

ஸம்பிரதாய ஸங்கீதம்

கலாதாஸன்

ஸாதாரணமாக ஸங்கீதப் பழக்கமுள்ளவர்கள் ஒரு நல்ல பாட்டுக் கச்சேரியைப்பற்றிப் புகழ்ந்து பேசும்பொழுது, "நன்றாக இருந்தது. ஸம்பிரதாயமாகப் பாடினான், நல்லவழி" என்று சொல்வது வழக்கம். அதாவது ஒரு பாட்டு உயர்தரமாக இருப்பதற்கு முக்கியமான அம்சங்களிலொன்று அது ஸம்பிரதாயத்தை ஒட்டி இருக்க வேண்டுமென்பது. ஏன் அப்படி என்று கேட்கலாம். பல காரணங்கள் உண்டு. மதராஸ் மியூஸிக் அகாடமி கான்பரன்ஸை 1944ஆம் வருஷம் திறந்து வைக்கும்போது ஸ்ரீ. அழகப்ப செட்டியார் இந்த விஷயத்தைப்பற்றி விசதமாகக் கூறினார். அதேமாதிரி வருஷந்தோறும் கான்பரன்ஸுகளில் ஸம்பிரதாயத்தின் முக்கியத்தைப்பற்றிக் கூறி வருகிறார்கள். அந்தக் கான்பரன்ஸில் பங்கு கொள்ளுகிறார்கள். அதற்குத் தக்க காரணங்களுண்டு. இவ் வுலகிலுள்ள பற்பல நாடுகளும் நாகரிகங்களும் பரிஷ்காரங்களும் தங்களுக்குப் பிரத்தியேகமாக ஏற்பட்டிருக்கும் குணத்தை உலகிற்கு அளிக்கவேண்டுமென்பது இறைவனது உத்தேசம். ஒரு ஜீவனோ ஒரு ராஜ்யமோ தனியாக உலகில் சிருஷ்டிக்கப்பட்டால் அதனால் உலகிற்கு ஆக வேண்டிய ஒரு காரியமுண்டு. நிஷ்காரணமாக, நிரர்த்தகமாக ஒன்றையும் ஸர்வேச்வரன் சிருஷ்டிக்கமாட்டார். ஏதோ உத்தேசம் வைத்துக்கொண்டுதான் அவைகளைத் தோற்றுவிக்கிறார். ஒரு மனிதனுக்குத் தனி ஜீவன் இருப்பதுபோல் ஒரு நாட்டிற்கும் ஒருவித ஸமஷ்டி ஜீவன் உண்டு. அதற்குச் சில தனி நோக்கங்களும் திறமைகளுமுண்டு. அந்த நாட்டின் ஜீவனுடைய நோக்கங்கள் பெரும்பாலும் அந்நாட்டுக் கலைகள்மூலம் வெளிப்படுகின்றன. அந்த நாட்டு ஜீவனின் பக்வம், ஸம்ஸ்காரம் முதலியவை அக் கலைகளில் வியக்தமாகும். அதுவும் பிரத்யேகமாக அந்நாட்டு ஸங்கீதத்தில் அந்தராஜ்ய தேவதையின் தனிப்பெருமையும் தனிச் சோபையும் நன்கு விளங்கும். அந்த நாட்டில் தோன்றியிருக்கும் பெரியோர்கள் இதை நன்றாக அறிந்து அதற்குத் தக்கபடியான ஸங்கீத முறைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாட்டின் நலத்தைக் கருதும் மக்கள் அந்த முறைகளைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

நமது நாட்டின் ஸங்கீதத்தின் நோக்கத்திற்கும் மேனாட்டு ஸங்கீதத்தின் நோக்கத்திற்கும் வித்யாஸமுண்டு. அங்கே நடைபெறும் வழக்கங்களையும் ஜனங்களனுஸரிக்கும் நோக்கங்களையும் கவனித்தால் இந்த வேற்றுமை நன்றாக விளங்கும். ஒன்று பெரிது, மற்றது தாழ்ந்ததென்று அர்த்தமல்ல. இரண்டும் நல்லதுதான். அந்தந்த நாட்டின் ஜீவனுடைய தன்மையைச் சார்ந்திருக்கும் அததனுடைய நோக்கங்களும் பழக்கங்களும். இது ஸம்பந்தமாக ஸ்ரீ. அழகப்ப செட்டியார் மேற்கூறிய கான்பரன்ஸில் சொன்னது மிகவும் கவனிக்கத் தக்கது.

அதனால்தான் இந்த நாட்டில் ஸங்கீதம் ஒரு வித யோகமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. பெரிய ரிஷிகள், முனிவர்கள், தேவர்கள் இவர்கள் எல்லோரும் ஸங்கீதத்தில் தேர்ச்சி அடைந்திருந்திருக்கிறார்கள். ஸங்கீதம் ஸாகித்யம் இவைகளில் ருசியில்லாதவனை ஸாக்ஷாத் மிருகமாகவே கருதவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

நமது ஸங்கீதத்தின் நோக்கம் செவிக்கு இன்பமளிப்பது மட்டுமல்ல, இதை நாம்

மறக்கவே கூடாது. செவிக்கு இன்பம் வேண்டும், அது அவசியந்தான். ஆனால் அதோடு நிற்கக்கூடாது. அது ஸ்தூலமான ஒரு உத்தேசம்தான். உண்மையான ஸங்கீதம் நம்முடைய இந்திரியங்களைக் கடந்து, நமது உள்ளத்தில் புகுந்து, ஆந்தரீய உணர்ச்சிகளை எழுப்ப வேண்டும். இதைச் செய்யாத பாட்டு, செவிக்கு இனிப்பாகத் தோன்றும் வீண் சப்நஜாலமே அல்லாது ஸங்கீதமாகாது. வெளித்தோற்றத்தை ஆதாரமாகக் கொண்டு படமெழுதுவது ஓவிக் கலையாகாது. உலகில் நடந்ததை நடந்தபடியே கதையாக எழுதுவது கவிதையாகாது. வெளி உலகில் உள்ள ஒலிகளைக்கொண்டு ஒரு பாட்டை உண்டாக்குவது ஸங்கீதமாகாது. ஜோட் (C. E. M. Joad) என்னும் அறிஞர் இதைப்பற்றிக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

ஆந்தரீய உணர்ச்சி முக்கியமானதால்தான் நமது ஸங்கீதம் ஸ்தூல உபகரணங்களை அதிகமாகச் சார்ந்து நிற்பதில்லை. 100, 200 வாத்யங்கள் கிடையாது. பெயருக்கு ஒரு தாள வாத்யமும் ஒரு தந்தி வாத்யமுமிருந்தால் போதும் உயர்தர ஸங்கீதம் பொழிவதற்கு. சகல ஸங்கீத கவனங்களும் ஜீவனுள்ள ஒரு மனிதனுடைய சாரீரத்தை ஆதாரமாகக் கொண்டவை. சுமார் 2, 2½ ஸ்தாயிகளுக்குள் தான் நமது பாட்டுகள் அமைந்திருக்கின்றன. வாத்யங்களை ஆதாரமாகக்கொண்டு 4, 5 ஸ்தாயிகளில் அமைக்கப்பட்ட ஸங்கீத கவனங்களே நமக்குக் கிடையாது, ஸ்தூல உபகரணங்களைக் கவனிக்காததால் சில சமயங்களில் பாட்டிற்கு முக்கியமாக வேண்டிய சாரீர வசதியைக்கூட அவ்வளவு கவனிப்பதில்லை. கேட்போர்களும் சில சமயங்களில் பாடகனுடைய சாரீர அசௌகரியத்தைக் கவனிக்காமல், அவனுடைய அபிப்ராயங்களிலீடுபட்டு, மெய் மறந்து விடுகிறார்கள்.

மேற்கூறியதிலிருந்து நமது ஸங்கீதத்தின் உண்மையான நோக்கத்தை நன்கறிந்து அதைப் பின்பற்றியே ஸங்கீதத்தைக் கையாளவேண்டுமென்பது வெளிப்படுகிறது. இதை நன்றாக உணர்ந்த பெரியார்கள் அந்தந்தக் காலங்களில் சரியான முறைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். அவைகளை மாற்றுவது நல்லதல்ல. அந்த முறைகள் குருபரம்பரைகள் மூலம் தொடர்ந்து வந்திருக்கின்றன. அவைகளைப்பின்பற்றுவதுதான் நலம். சில நுட்பங்கள், ஸூக்ஷ்மமான விஷயங்கள், இந்த பரம்பரை ஸம்பிரதாயங்களிலிருந்து வெளியாகின்றவை. இவைகளைக் கவனியாது ஸங்கீதத்தைப் பெரும் விளையாட்டாகக் கருதுவது மதியீனம். ஸம்பிரதாய ஸங்கீதத்தை தனக்குத் தோன்றினபடி மாற்றிச் சுலபமான வழியில் அதைக் கையாளுவது தவறேயாகும். இந்தத் தவறைப் பற்றி, ஸ்ரீ சங்கீதசாஸ்திர ஆராய்ச்சியில் நிபுணரான ஸ்ரீ Alain Daniclou இவ்விதம் கூறுகிறார்.

அப்படியானால் நமது ஸங்கீதம் ஒருகாலும் மாற்ற முடியாததா! எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் பாடக்கூடியதா, பிறகு மனோதர்மத்துக்கு எங்கே இடம் என்று எல்லாம் சந்தேகங்கள் ஏற்படலாம். ஆனால் உண்மையில் மனோதர்மத்துக்கு இடங்கொடுப்பதில் நமது ஸங்கீதத்தை மீறின ஸங்கீதமில்லையென்றே கூறலாம். ஆதார தத்வங்கள் சாச்வத மானவை. ஆனலதற்குமேல் அலங்காரம் செய்து, ஜோடிப்பது நமது மனோதர்மத்தை ஒட்டினது.

மேலும் அந்த ஆதாரங்களிலேயே சில மாற்றங்கள் எப்போதாவது ஏற்படலாம்; ஆனாலத்தகைய மாற்றங்களை நமது நாட்டின் ஜீவ விகாசத்திற்கு ஒருவித கெடுதியும் நேராமல் ஏற்படுத்தக் கூடிய மகான்கள் தான் செய்யலாம். எல்லாருமதை நிர்வகிக்க முடியாது. அதேமாதிரி புதிய வழிகளையும் புதிய ராகங்களையும் நிர்மாணம் செய்யக்கூடிய பெரியார்கள் அதைச் செய்யலாம், ஸ்ரீ தியாகப்ரம்மத்தைப் போன்றவர்களால் இது ஸாதிக்கப்படலாம். பொதுமக்களால் ஒருகாலும் முடியாது.

ப்ளேடோ கூறின மாதிரி ஒரு ஸங்கீத பத்ததியில் மாற்றம் ஏற்படுத்துவது மிகவும் ஆலோசனை செய்து பிறகு தொடங்கவேண்டிய காரியம். ஆகையால் ஸங்கீத ஸம்பிரதாயத்தின் முறையைப் பாதுகாக்கவேண்டும். இதற்கு நல்ல பரம்பரையில் சிக்ஷைப்பட்டிருக்கிற வித்வான்களின் முறையை அனுசரிக்கவேண்

டும். வித்வான்கள் பொதுஜனங்களின் அபிப்ராயத்திற்கிணங்கி, தங்களது வழியைக் கைவிடலாகாது.

இந்தக் காலத்தில் அநேக ஸங்கீத ஸபைகள் ஏற்பட்டு, பாடகர்களை ஆதரிக்கவேண்டிய பொறுப்பு பொது மக்களுக்கேற்பட்டுவிட்டது. நுனிப்புல் மேய்வது சுலபமல்லவா? காதுக்குத் தற்கால இன்பம் கொடுப்பதுபோல் தோன்றும் சில மெட்டுகளைக் கேட்டுக் கேட்டு, கெட்டுப்போன காதுகளுக்கு நல்ல வழியைக் கேட்பதானால் சாபமாகத் தோன்றலாம். ஒரு இசையின் உண்மையான தன்மையை அறியவேண்டுமானால் கேட்போர்களும் கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொண்டு காதைப் பழக்கிவைக்க வேண்டும். ஸங்கீத சாஸ்திர ஸம்பந்தமான ஒரு கேள்வி ஏற்பட்டால் அதைப்பற்றிப் பொதுஜனங்கள் என்ன அபிப்ராயம் சொல்லமுடியும்? வோட்டு (Vote) எடுத்துத் தீர்மானிக்கப்பட்ட விஷயமா இது? அல்லது பத்திரிகைகள் தீர்மானிக்கவேண்டிய காரியமா? ஸங்கீதத்தில் உழைத்து ஸம்பிரதாயத்தைக் சார்ந்து வரும் வித்வான்கள்தான் அதைத் தீர்மானம் பண்ணலாம். அவர்களுக்கே அந்த உரிமை உண்டு. இந்த முக்கியமான விஷயத்தில் வித்வான்களும் பொது ஜனங்களும் சேர்ந்து ஒற்றுமையுடன் நமது ஸங்கீதமாகிய பெருஞ் செல்வத்தைப் போஷிக்கவேண்டும். Sir Henry Wood எனும் அறிஞர், "Music is no place for Democracy. Let us have a few dictators." என்று சொன்னது மிகவும் போற்றத்தக்கது. சீன தேசத்துக் கவி ஒருவர் சொன்னதாவது, When the spirit of opposition manifests itself, indecent music comes into being," பொதுஜன ஆதிபத்யம் போற்றத் தக்கதே, ஆனால் சில காரியங்களில் அறிந்தவர்களுடைய புத்திமதிதான் அனுசரிக்கத்தக்கது. மின்சார சாஸ்திர நிபுணர்களான சிலர் ஒரு மின்சார யந்திர அமைப்பைப்பற்றி ஒரு அபிப்ராயம் சொன்னால், அதைப் பொது ஜனங்கள், கோடிக் கணக்காயிருந்தாலும், எதிர்த்துச் சொல்வது என்ன மூடத்தனம்; ஆயிரக் கணக்கான அறிவில்லாதவர்கள் என்ன அபிப்ராயப்பட்டாலும், அறிந்த ஒருவன் சொல்லும் அபிப்ராயமே அங்கீகரிக்கத் தக்கது. ஒரு ராகத்தில் ஒருவித ஸ்வர ஸஞ்சாரம் வரலாமா என்றோ, அல்லது ஒரு ஸ்வரத்தை அசைத்துப்பிடிக்கவேண்டுமா, சுத்தமாய்ப்பிடிக்கவேண்டுமா என்றோ, வாதம் ஏற்பட்டால், இதில் பாமர ஜனங்களின் அபிப்ராயத்திற்கு என்ன விலை. அவர்களுடைய அபிப்ராயத்திற்கு இடம் கொடுப்பதா யிருந்தால் இந்த உயிர்க் கலையின் கதி என்ன ஆகும் என்று ஆலோசித்துப் பாருங்கள். பொதுவாக நாம் நம்முடைய அறிவின் அளவை உணர்ந்து நமக்குத் தெரியாத விஷயத்தில் தெரிந்தவர்களின் அபிப்ராயத்திற்குத் தக்க விலைகொடுத்து வந்தால் நமக்கும் நல்லது; ஸங்கீத கலைக்கும் க்ஷேமம்

லக்ஷியக் கனவு

கே. சுந்தரம்மாள்

"சந்தியாகாலே வனாந்தரே" என்ற சுலோகம் கானடா ராகத்தில், இனிய குரலில் காற்றில் மிதந்து அவ்வனமெங்கும் ரீங்காரம் செய்தது. ஓய்வு ஒழிவின்றி, பகலெல்லாம் பவனி வந்து நியாய அநியாயங்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து நீதி பரிபாலனம் செய்துவிட்டு அலுப்புடன் அந்தப்புரம் வரும் மைந்தன் பாஸ்கரனும், காதலர் களிப்பிலும் மலர்களின் அழகிய தோற்றங்களிலும் கவனத்தைச் செலுத்தி, உலகெங்கும் இன்ப வொளியை வீசி, சல்லாபமாடி, களித்து, குதித்துவர, உல்லாஸ பவனிக்குப் புறப்படும், தாரையின் காதலனும், நேருக்குநேர் சந்தித்தால் என்னவாகுமோ வென்ற கவலையினால் அந்தப்புர வாசலில் நின்று வரும் மகனை ஆசீர்வதித்து உள்ளே அனுப்பிவிட்டு, பிறகு புறப்படும் மகனுக்கு விடை கொடுத்து ஆசீர்வதிப்பவள் போல் சந்தியா தேவியானவள் உலகெங்கும் தனது மங்கிய ஒளியைப் பரப்பலானாள்.

கிரீச்சென்ற சப்தம் அவ்வனமெங்கும் வியாபிக்க, பக்ஷி ஜாலங்கள் தங்கள் தங்கள் கூட்டிற்குச் சென்றுகொண்டிருந்தன. நாரைகள் கூட்டமாகப்பறந்துசென்ற வேகமானது, அந்திச் செவ்வானமும் மேக மண்டலமும் சேர்ந்து, ஆகாய வெளியில் குன்று குன்றான மலையைச் சுற்றி ஆறு ஓடுவதுபோல் காட்சியளிக்கும் மாயத் தோற்றத்தை நம்பி, ஜலமருந்தச் செல்வன போன்றிருந்தது. தென்றல் கீதமும், மங்கையின் குரலும், மந்தமாருதமும் ஒன்றாக இழைந்தன.

இயற்கையின் ஸௌந்தர்ய மிகுந்த அவ்வனத்தின் மத்திய பாகத்தில் ஒரு சிறிய கோவில். கர்ப்பக் கிருஹம் இரண்டு. முன்னால் மண்டபம். இவ்வளவே அதன் அமைப்பு. வலது பக்கத்தில் ஒரு கிணறு, சுற்றி வாழை மரம். இடது பக்கத்தில் ஒரு சிறிய குளம். ஒரு கர்ப்ப கிருஹத்தில் கிருஷ்ண விக்ரஹமும், மற்றொரு கர்ப்ப கிருஹத்தில் பால முருகன் விக்ரஹமும் காட்சி யளித்தன.

ஊரைவிட்டுச் சற்றுத் தள்ளியிருந்தாலும், அம் மூர்த்தங்கள் "வரப்பிரஸாதி" என்ற நம்பிக்கையினால், அச்சிறு கோவிலுக்குத் தினந்தோறும் தெரிசிக்க மக்கள் வந்து போவார்கள். சுக்ரவாரத்தன்று நல்ல கூட்டமென்றே சொல்லலாம்.

அன்று மங்கள வாரம். அதிக ஜனக்கூட்டமில்லை. நாலைந்து பெண்மணிகளே இருந்தார்கள். சன்னிதியில் ஓர் பெண் உட்கார்ந்துதான் கானடா ராகத்தில் பாடிக்கொண்டிருந்தாள். கறுப்பு நிறம். "கறுப்பிலும் குறுப்பு" என்பார்களே அவ்வளவுகூடச் சொல்ல முடியாத சாதாரண அழகுதான். இரட்டைநாடி சரீரம். ஆனால் சாரீரமோ கணீரென்று இழைந்து நாதத்தை எழுப்பியது. தன்னை மறந்து தலைவனில் கலந்தேதான் பாடுகிறாளோ என்றிருந்தது அவள் தோற்றம். கோவிலுக்குச் சற்றுத் தள்ளி, பத்துப் புருஷர்கள் உட்கார்ந்து சங்கீதத்தை அனுபவித்தார்கள்.

இவர்களுடன் சேராமல் கோவிலுக்குப் பின்புறத்திலுள்ள மாமரத்தினடியில் உட்கார்ந்துகொண்டிருந்த இருவர்களில்,

"லக்ஷ்மணா! என்ன இனிய சாரீரம்! சுத்தமான உச்சரிப்பு, உள்ள முருகி வரும் பாவம்! சிக்ஷை ஏதாகிலும் உண்டோ?" என்றார் கிட்டா.

"சிக்ஷையா? பகவான் அவர்கள் குடும்பத்தையே சிக்ஷை பண்ணி வைத்திருக்கிறாரே அது போதாதா?" என்றார் லக்ஷ்மணன்.

"அப்பொழுது பூர்வ ஜன்ம வாஸனையின் பயனாக இருக்கவேண்டும்; இல்லையேல் இவ்விதம் கற்பனா சக்தி ஏற்படமுடியாது"

"சமயங்களில், சம்ஸ்க்ருத சுலோகத்திலுள்ள பதங்களை அவளே அர்த்தப்படுத்தி, தமிழில் பாடி விடுகிறாள். பூர்வ ஜன்ம சுகிர்தமில்லாவிடில் அது சுலப சாத்யமா?"

"உம், எது இருந்து என்ன பயன்? தலையின் லிபி அது நன்றாக இல்லையே. எல்லாம் பாலை வனத்தின் நிலவுபோல் தானே இருக்கிறது."

"லிபி, அதை மாற்றமுடியாது என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால்கூடியமட்டும் சீர்திருத்தம் செய்து பார்க்கலாமல்லவா?"



"சீர்திருத்தம்? பத்தாம் பசலியுமல்லாமல், ஐம்பதாம் நாகரிக ஆண்டுமல்லாத மத்திம இப் பதினெட்டாம் நூற்றாண்டில் என்ன செய்வதற்கு இடமளிக்கும் உலகம்?"

"உலகம் சம்மதத்தை அனுமதிக்காது, நமது செய்கையினால் அதை அனுமதிக்கச் செய்யவேண்டும்"

"அப்படி என்ன திட்டம் வகுத்திருக்கிறாய்? முதலில் அந்த மடையன் என்ன முடிவு சொன்னான்? எனக்கென்ன தெரியும் மூன்றாம் மனிதர்களைப்பற்றி என்று கேட்டு விடாதே. நீயும் அவர்களும் ஒரே வீட்டில் பக்கம் பக்கமாகக் குடியிருக்கிறீர்களே அதனால் தெரிந்திருக்கலாம் என்ற அனுமானமே. மற்றும் உங்களுடன் மூன்றாமவராகக் குடியிருக்கும் வாசுதேவன் சொன்னதிலிருந்து நீதான் அவனிடம் பேசிவிட்டு வந்தாயென்பதை அறிந்தேன்"

"அவள் விஹாரமாக இருக்கிறாளாம்; மனமொத்து வாழ அவன் மனம் இடமளிக்காதாம்"

"கல்யாணத்தின் பொழுது கண் பின்புறத்திலிருந்ததோ? ப்ளெடி ராஸ்கல்"

"இவ்விடத்தில் திட்டினால் அவன் காதில் விழப்போகிறதா? அவன் அப்பா காமாக்ஷியின் அப்பாவுக்கு வாக்குக் கொடுத்திருப்பதாகச் சொன்னாராம். அதற்காகத்தான் தாலியைக் கட்டினானாம். இப்பொழுது இருவரும் இறந்து விட்டார்கள். என்னிஷ்டப்படிதான் நடப்பேன். கட்டின தண்டத்திற்கு ஜீவனாம்சம் கொடுத்து விடுகிறேன்" என்றான் பாபி.

"ஜீவனாம்சம்! என்ன பணத்திமிர்? பெண்களுக்கும் பாகம் உண்டு என்ற சட்டமிருந்தால் இப்படிப் பேசுவானா?"

"அதுதான் இல்லையே; அதைப்பற்றிப் பேசிப்பயன்?"

"இவர்கள் அதற்கு ஒத்துக் கொள்ளுகிறார்களா?"

"வேறுவழியில்லை. முடியாது என்பவனிடம் வாதாடிப் பலன்? பணமாவது தரட்டும்" என்கிறாள் தாயார். காமாக்ஷி, என்னை அவருக்குப் பிடிக்கவில்லையென்றால் அவரது பணம் எனக்குப் பிடிக்க வில்லை. பிச்சையெடுத்தாலும் பரவாயில்லை" என்கிறாள்.

"அந்த மனுஷன் திடீரென்று செத்துக் கெடுத்தான். சாப்பாட்டிற்காவது கஷ்டமில்லாமல் வருவாயிருக்கிறதா? மொத்தம் அவர்கள் எத்தனை பெயர்கள்?"

"அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய்? மொத்தம் அந்த வீட்டில் இரண்டு பெண்கள், இரண்டு பிள்ளைகள், தாயார்—இந்த ஐந்து ஜீவன்களின் காலம் கழிவதற்கு, வருஷச் சாப்பாட்டிற்கு எட்டுமோ எட்டாதோ வென்று நெல் விளைகிறது. இரண்டாவது பையன் ராமசுப்பு சம்பாத்தியம் 45 ரூபாய், அதுவும், மூத்தவள் மீனாக்ஷியை எட்டு வயதில் கல்யாணம் செய்து கொடுத்தார்களாம், அவன் அவளது பத்துவயதில் அவளுக்கு நிரந்தர விடுதலையும் மாதம் ஏழுரூபாயும் ஏற்பாடு செய்துவிட்டு இவ்வுலகத்தினின்றும் நிரந்தர விடுதலை பெற்று விட்டானாம். அந்த ஏழுரூபாயும் சேர்த்து, கடைசிப்பையன் ராமலிங்கத்தின் படிப்பும் குடும்பமும் நடந்து வருகிறது. எப்படியிருக்கும் அவர்கள் வாழ்க்கை, சிந்தனை செய்துபார். இன்னும் நான்கு நாளில் ராமசுப்புவின் மனைவி குடும்பம் நடத்த வந்து விடுவாள், அவர்கள் குடும்பமே வாய்த்துடுக்கில் பேர் போனது. இனி ஒற்றுமையின் சின்னம் என்பதுகூட அக்குடும்பத்தில் காண்பது அரிதாகிவிடும்.

"இப்படிப்பட்ட நிலைமையில் தாயார் ஜீவனாம்சத்தை வரவேற்பது ஆச்சரியமல்ல, காமாக்ஷி பெண் உரிமையை நிலை நாட்ட விரும்புவதினால் அதை வரவேற்கப் பிரியப்படவில்லை. பாவம் அவ்வளவு சிறியவயதிலேயேவா இந்த அலங்கோலம் பண்ணினார்கள், என்ன சமூகம்! இரக்கமற்றது. மனச்சாக்ஷியற்றது. மூட நம்பிக்கை. சரி இருக்கும் சீரைப்பார்த்தால் காமாக்ஷியைவிட மீனாக்ஷியைத்தான் முன்னதாகக் கவனிக்க வேண்டும் போலிருக்கிறது?"

"நீ சொல்வது உண்மை. ஆனாலும் மீனாக்ஷி சாதாரண அறிவு படைத்தவள்; சொல்வதைக் கிரஹித்து நடக்கும் சக்தி பெற்றவள் தான்; கொஞ்சம்கல்வி ஞானமும்இருக்கிறது. தூண்டுகோலால் பிரகாசிக்கும் தீபம் அவள். தூண்டாவிளக்கு காமாக்ஷி. அவளுக்கு வசதியளித்தால் பாரதியார் பாடிக்கொண்டிருக்கிறாரே அந்த லக்ஷ்யப் பெண்ணாவாள் காமாக்ஷி."

"சரிதான் போ. அந்தப் பைத்தியக்கார மனுஷன் கனவுகண்டு பாடுவதெல்லாம் நனவில் நடக்கப் போகிறதென்று கனவு காண்கிறாய்? ஆள் சாப்பாட்டிற்கே வழியின்றித் தவிப்பதாகக் கேள்வி. அவர் வறுமையை நீக்கச் சக்தியற்ற அவர் கொள்கையின் பயன் என்ன உபயோகம்?"

"நீதான் அறியாமைக் கனவிலிருக்கிறாய். உத்தமர்களுக்குச் சோதனை என்பது அநாதி காலந்தொட்டு ஏற்பட்ட ஒரு பழமையான உண்மை. வறுமையில் வாடுகிறார் என்று நீ

நீணக்கிருய், வறுமையில் உலகத்தின் உண்மை சொரூபத்தையும் வரும் கால பல ஸேயும் கண்கூடாகக் கண்டு களிக்கிருர்.''

''அவர் கனவெல்லாம் நனவாக நடக்கப் போவது நிச்சயம். நீயும் நானுமே அதைப் பார்க்கப் போகிறேம். சுதந்திர இந்தியாவை நிச்சயம் பாப்போம். என்னுடைய முயற்சி வெற்றி பெறுமானுல் பாரதியாரின் லக்ஷ்யப் பெண்ணுகவும், என்னுடைய ஆதர்சவீர நாரீமணியாயும் விளங்குவாள் காமாக்ஷி.''

''அப்பொழுது உன் மனதில் ஏதோ சரி யான திட்டம் உருவாகியிருக்கிறது என்பது நிச்சயம். அதை நான் அறியலாமா?''

''என்ன கிட்டா! அப்படிச் சொல்லி விட்டாய். உன்னே மறைத்துவிட்டு ஏதாவது இரகசியம் உண்டா? அதற்காகவேதானே தனியிடத்திற்கு அழைத்து வந்தேன்.''

''சும்மா சொன்னேன் லக்ஷ்மணு! விஷயத் தைச் சொல்லு'' என்று அருகில் நெருங்கி உட்கார்ந்தார்.

''இந்த ஊரிலேயே இருந்துகொண்டு, பாட்டாவது, படிப்பாவது கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்வோமென்ருல் அது எவ்வளவு தூரம் நிறைவேறும் என்பதை நான் சொல்லி நீ தெரிந்து கொள்ள வேண்டாம்.''

''அதனுல் ஊரைவிட்டு ஓடும் யோசனேயா? உன் பிழைப்பு, உன் உத்யோகம் என்ன வது?''

''என்னுவது, மண்ணுவது. ஒரு லக்ஷ் யத்தை நிறைவேற்ற வேண்டுமென்ருல் பூரண தியாக மனப்பான்மை வேண்டும்.''

''தியாகம் அவசியந்தான். ஆனுல் வயிற் றைத் தியாகம் செய்வது என்பது அவ்வளவு சுலபமான விஷயமல்லவே! பிதிரார்ஜிதம் என்பது தம்பிடி கூடக் கிடையாது. உன் தமையன் ஆயிரக்கணக்கில் சம்பாத்யம் செய் கிருர் என்பதும் நியாயமான முறையில் உனக்கு உதவி செய்வார் என்பதும் உண்மை யிலும் உண்மைதான். ஆனுல் நீ இவ்விதம் செல்வதற்கு அவர் உதவியை எதிர்பார்க்க முடியாதல்லவா?''

''முடியாதுதான். 'ஈச்வரோ ரக்ஷது' என்று கிளம்பவேண்டியதுதான். விதிப்படி யாவும் நடக்கும்.''

''ஈச்வரன் நேரில் வந்து பணமாகக் கொடுப்பதாக இருந்தால் உலகம் இப்படியா நடக்கும்? முயற்சி செய்தால்தான் ஈச்வர னும் உதவியளிப்பார்.''

''சென்ற பிறகு முயற்சி ஏற்படாமலிருக்க முடியுமா?''

''அது சரி. உன் தாயார், மனேவி, அருமைப் பாலகன் இவர்களேயும் தியாகம் செய்துவிடப் போகிருயா?''

''தாயாரைப்பற்றிக் கவலேயில்லே. அண்ணு வினிடம் சென்றுவிடுவாள். என் லக்ஷ்மி என் கொள்கையைப் பின்பற்றி நடக்கத் தவற மாட்டாள். என்னுடன் வந்து கஷ்ட சுகங் களே ஏற்கவும் தயங்கமாட்டாள். ஆனுல் குழந்தையைப் பற்றித்தான் சிந்தனே செய்ய வேண்டியிருக்கிறது.''

''சிந்தனே எதற்கு? தாயுடன் பிள்ளேயிருக் கும் பொழுது கவலேப்பட அவசியமில்லே.''

''அப்படியல்ல; போகுமிடங்களில் எப்படி யெல்லாமிருக்கவேண்டி யிருக்குமோ? குழந் தை ஏன் அக்கஷ்டங்களே ஏற்கவேண்டும்? மேலும் படிக்கிற பருவம் வந்துவிட்டது. அதற்கு வசதியில்லாமல் செய்தால் தகப்பன் செய்யும் கடமை தவறி, அனுகூல சத்துருவு மாகிவிடுவேன் என்பதே.''

''அதனுல் லக்ஷ்மியும் குழந்தையும் இவ்விடமே இருக்கட்டுமென்றும், அவர்களு டைய சுக துக்கங்களே என் பொறுப்பில் விட்டுப் போகலா மென்ற நினேப்புடன்தான் என்னிடம் விஷயத்தைப் பிரஸ்தாபிக்க அழைத்து வந்தாய் போலும். நம்முடைய நட்பின் சின்னமாக அவர்களேப் பராமரிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளக் கட மைப்பட்டவனே. ஆனுலும், நன்மை தீமை இரண்டின் விளேவுகளேச் சிந்தனே செய்து பார்த்தே காரியத்தில் இறங்கவேண்டும். லக்ஷ்மியும் குழந்தையும் என் ஆதரவில் இருப்பதை உன் தமையனே, அவளது பெற் ருேரோ ஒப்புவார்களா? உன் தமையன் சம் சாரத்துடன், நீ கைவிட்டுச் சென்ற நிலேமை யில் சுகமாகக் காலங்கழிக்க முடியுமா? அவ ளது பெற்ருேருக்குப் பாரமாகப் போயிருப்ப தும் சரியாகுமா? ஓ! லக்ஷ்மணு! என்று தலே யில் துணியைப் போட்டுக்கொண்டு இரண்டு பெண்களுடன் கிளம்பும் நீ எவ்விதம் பணம் அனுப்பமுடியும்? மேலும் நீ எவ்வளவு வை ராக்ய சித்தனுக இருந்தாலும் இருவருடைய பருவ நிலேயானது நீ வைராக்யத்தை நிலே நிறுத்தச்செய்வது என்பதை லகுவில் அனும திக்காது. வைராக்யம் திடப்பட லக்ஷ்மி மிக வும் தேவை. உன் சொல்லில் உறுதிகொண்டு உற்ருரைக் கவனியாமல் லக்ஷ்மி என்னுடன் தங்குவாளானுல் உலகம் அவளேயும் நிம்மதி யாக இருக்கவிடுமா? லக்ஷ்யம் என்ருலும் நாலு கோணத்திலிருந்தும் அதைக் கூர்ந்து பார்த்து ஆராய்ந்து இறங்கவேண்டுமே யல்

லாது 'கொக்கிற்கு ஒன்றே மதி' என்பது போல் லக்ஷ்யம் என்று கண்ணை மூடிக் கொண்டு இறங்கக் கூடாது. சிந்தனை செய்து பார். நான் சொல்வது குற்றம் என்று தோன்றினால் மன்னித்துவிடு. எனது பிரேரணையை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்.''

''நன்றாக ஆராயவேண்டு மென்பதற்காகத் தானே உன்னிடம் யோசனைக்கு வந்தேன். லக்ஷ்மியைக் கூட அழைத்துச் செல்லவேண்டு மென்பதுதான் எனது அந்தரங்க அபிலாஷை. லக்ஷ்மியும் என்னுடன் எவ்விதக் கஷ்டத்தையும் ஏற்கத் தயார். அவசியம் கூடவே வருவேன் என்று சொல்லுகிறாள். காமாக்ஷியும் மன்னி உடன் வருவதே மிகவும் நல்லது என்று சொல்லுகிறாள். ஆனாலும் குழந்தை முரளீதரன்! அவனை நினைக்கும்பொழுது என்னுடைய சிந்தனையெல்லாம் ஸ்தம்பித்து நின்றுவிடுகின்றன. ஆனால் லக்ஷ்மி அதற்கும் ஒரு யோசனை சொல்லுகிறாள். ஆனால்.........''

''என்ன சொல்லுகிறாள்? ஏன் இழுக்கிறாய்?''

''குழந்தையைத் தந்திரமாக அவள் பெற்றோர்களிடம் விட்டு விட்டுச் சென்றுவிட்டால், கொஞ்சநாள் பொறுத்து, பிள்ளைப் பேறில்லாத என் தமையன் அழைத்துச் சென்று வளர்ப்பார் என்பது நிச்சயத்திலும் நிச்சயம். விதி நல்ல வழிகாட்டுமானால் குழந்தையை மீண்டும் பார்த்துக்கொள்ளலாம் என்பதே''

''அப்பா! என்மெய் சிலிர்க்கிறது! நீயா, தியாகம் செய்கிறாய். உண்மையில் தியாகி லக்ஷ்மி! தவங்கிடந்து பெற்ற பாலன் ஐந்து வயது பூர்த்தியாகவில்லை. அவனைத் தியாகம் செய்துவிட்டு, தனக்குச் சம்பந்தமில்லாத ஒரு பெண்ணின் முன்னேற்றத்திற்காக உன்னுடன் புறப்படத் துணிந்துவிட்டாள். உன் லக்ஷ்யத்தையும், உன்னையும், உன் பெயரையும் காப்பாற்ற. நீ கொடுத்து வைத்தவன். இப்படிப்பட்ட உத்தமியை மனைவியாகப் பெற ஜன்மாந்தரத்தில் என்ன தவம் செய்தாயோ.''

''உண்மைதான் கிட்டா! நான் பாக்யசாலியே. படிப்பு அதிகமில்லாவிட்டாலும், பொறுமையும், சஹிப்புத் தன்மையும் ஆழ்ந்த அறிவும், பதட்டமில்லாத குணமும் பெற்றவள் லக்ஷ்மி. அதனாலேயே எந்த ஒரு விஷயமும் அவளிடம் சொல்லாமல் நான் செய்வதில்லை. செய்ய என் மனம் இடமளிப்பதில்லை. அது அவளின் அன்பு விசேஷம்தான்''

''சரி, காமாக்ஷியும் சொன்னாளென்பதைப் பார்த்தால் நீங்கள் கூடிப்பேசித் தீர்மானம் செய்தாய்விட்டது போலும். அந்த வீட்டில் தனிமையில் கூடி யோஜனை செய்யமுடியுமா?''

''காமாக்ஷியின் தாயாருக்குப் பத்து நாட்களாக உடம்பு சரியில்லை. டாக்டர் வீட்டிற்கு மருந்து வாங்க, நான் ஆபீஸ் போகும் பொழுது என்னுடன் வருவாள் காமாக்ஷி. மெதுவாக ஒருநாள் என் யோஜனையைக் கூறினேன்''

''எப்படிப் பேச்சைத் தைரியமாகத் துவக்கினாய்? அவள் மனமறியாத நிலைமையில் தப்பாக எண்ணவில்லையோ அவள்''

''அவசரப்படாதே, சாவதானமாகக் கேள். கேள்வியை அடுக்கிக் கொண்டுபோனால் எப்படிப் பேசுவது?''

''இல்லை புராணிகரே. கதை முடியும் வரை அடியேன் மௌனமாகவே கேட்டு வருகிறேன்''

''அவள் புருஷனிடம் சென்று வந்து பத்து நாள்தான் ஆகியிருக்கும், அதனால் சுலபமாக மார்க்கம் கிடைத்தது.

''காமாக்ஷி ஒரு விஷயம்பற்றிப் பேசலா மென்று நினைக்கிறேன். அது உன் மனதிற்குத் தப்பாகத் தோன்றினால் அதற்காக வருத்தப்படாமல், என்னை மன்னித்துவிடு'' என்றேன், ஆஸ்பத்ரி காம்பவுண்டிலுள்ள ஒரு மரத்தடியில் செல்லும் சமயம், நான் அந்த வழியாக ஆபீஸிற்குப் போவது வழக்கமானபடியினால் ஒருவரும் சந்தேகிக்க மாட்டார்கள் என்று தைரியத்துடன்.''

''என்ன அண்ணா விஷயம்? பீடிகை பலமாகப் போடுகிறீர்களே. இந்த ஜன்மத்தில் ஒரு விஷயத்தைத் தப்பு என்று சொல்லுவதற்குக்கூட எனக்கு உரிமையிருக்கிறதா?'' என்றாள் நீண்ட மூச்சுடன்.

''அந்த உரிமைபற்றித்தான் சொல்லவந்தேன்''

''உரிமை இருந்தால்தானே அதைப்பற்றிப் பேச்சு. என் விஷயத்தில் அந்த உரிமை பறிபோய்விட்டது. இனி எனது வாழ்நாள் முழுமையும், சிரித்தார் முகம் பார்த்து, சிந்திப்பார் வாய்பார்த்து, குளிர்ந்தார் முகம் பார்த்து, கோபிப்பார் வாய்பார்த்துத் தானே செல்லப்போகிறது''

''அப்படித்தான் கழிக்க வேண்டுமென்பது சாஸ்திரமா? சட்டமா?''

''உலகமும், சமூகமும் அனுமதிப்பது அது தானே''

உங்கள் விருந்தாளிகள் டால்டாவில் செய்த தம் ஆலுவை விரும்புவார்கள்!

உருளைக்கிழங்கின் தோலைப்போக்கி இரண்டாக துண்டித்து உட்பாகத்தை குடைந்தெடுக்கவும். நசுக்கிய பட்டாணிக்கடலை, அரிந்த வெங்காயம், மிளகாய், எலுமிச்சஞ்சாறு, ருசிக்குத் தேவையான உப்பு இவைகளை கலக்கவும். குடைந்த உருளைக்கிழங்கு பாதிகளில் கலவையை திணிக்கவும். இருபாதிகளையும் ஈர்க்குச்சிகளில் தொடுத்து ஒன்றாகப்பொருத்தவும். சூடான டால்டாவில் உருளைக்கிழங்கை பொரித்து தனியாக வைத்துக்கொள்ளவும். வெங்காயம், தக்காளிப்பழம், மசாலா இவைகளை சமையல் பாத்திரத்தில் போட்டு வதக்கவும். பிறகு பொரித்த உருளைக்கிழங்கைப்போடவும். நீராவிபோகாமலிருக்க கோதுமைமாவினால் மூடியை பாத்திரத்துடன் ஒட்டவைத்து $\frac{1}{2}$ மணிநேரம் நல்ல சூட்டில் பக்குவம் செய்யவும். பிறகு $\frac{1}{2}$ மணிநேரம் சிறு சூட்டில் வைத்திருக்கவும். சூடாக பரிமாறவும்.

உங்கள் தினசரி சாப்பாட்டை டால்டா எப்படி
அதிக சத்துடையதாகச் செய்கிறது ?
இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று
வேண்டுமானாலும்—எழுதுங்கள் !

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 97-23 TM

"உலகம் பல சொல்லும். அதன்படி யெல்லாம் நாம் நடப்பது என்றால் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் போய்ச் சேருவோம். நான் சொல்வதைச் சற்றுக் கவனி. அவனுக்கு மறு கல்யாணம் செய்துகொள்ள உரிமையுண்டு. தாலி கட்டின தோஷமே தவிர, அவன் முகத்தைக்கூட நீ பார்த்ததில்லையென்றாலும், உனக்கு அந்த உரிமை கிடையாது என்பது ஹிந்து சமூகத்தின் பழமையான உண்மை. பாரதப் புதல்விகளின் ரத்தத்தில் அந்த உணர்ச்சி ஊறிவிட்டபடியினால், அதை ஏற்காது உறுதியும் தீவிரமும் உள்ள பெண்களின் மனம் அதிலும் உன்னைப் போன்று அபூர்வ சக்தி பெற்றிருக்கும் பெண் கேவலம் குடும்ப சுகத்தில் ஏன் பங்கு பெற வேண்டும், உனக்கு ஏற்பட்டிருக்கும் அபூர்வ சக்தியைத் தேச நலனுக்கும், ஈச்வரப் பிரீதிக்கும் பாத்திரமாகும் விஷயங்களில் உபயோகிக்கக் கூடாது? பெண் சமூகத்தின் குறைகளை முன் நின்று நிவர்த்தி செய்யலாமே, வருங்காலத்தில் பாரதியார் பாடும் வீரப் பெண்மணியாக ஏன் விளங்க முடியாது? முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார். கற்பனா சக்தி எவருக்கும் கிடைக்காது" என்றேன்.

"நீங்கள் சொல்லுவதெல்லாம் உண்மை தான். ஆனால் எந்த விதத்தில் முன்னேற வசதியிருக்கிறது? அற்பச் சம்பளத்தில் ஆறு பேர் காலங்கழிக்கும் நிலைமையில் நான் என்ன முயற்சி செய்ய முடியும்?"

"இவ்விடமிருந்தபடி ஒன்றும் செய்ய முடியாதுதான். நம்மவர் என்பவர் இல்லாத இடமாகச் சென்று முன்னேற வழி தேடலாம்."

"அதற்கும் பண உதவி, மனித உதவி இல்லாமல் முடியுமா? எனக்கோ அவ்விரண்டும் பூஜ்யம்"

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்" என்னை அண்ணா வென்று அழைக்கிறாயல்லவா? சகோதர உரிமைகொண்டு அவ்வுதவியைச் செய்ய நான் முன்வருகிறேன்."

"என்ன?" என்று ஆச்சரியத்துடன் அகல விழித்தவாறு அவள் கேட்டது இன்னமும் என் கண் முன்பாகவே தோன்றுகிறது. அப்படிப் பதறினாள்"

"ஏன் நான்செய்யமுடியாதா?" என்றேன்.

"முடியாது என்று சொல்ல நான்யார்? அப்படி நாம் சென்றால் உலகம் என்ன நினைக்கும்? நம் மனச்சாக்ஷி, ஈச்வர சாக்ஷியாகத் தூய்மையுடன் நடந்துகொண்டாலும் அதை நம்புவார்களா? மேலும் உங்கள் உத்தியோகம் என்னாவது? பிறருக்கு நன்மை செய்வதாக உங்கள் குடும்பத்தைச் சங்கடத்தில் விட்டால் அது ஒரு லக்ஷ்யமாகுமா?"

"அவைகளையெல்லாம் சிந்தனை செய்யாமலா சொல்லுவேன்? லக்ஷ்மியின் குணம் நீ அறியாததல்ல. என் செய்கைகளை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டு அதற்கனுகுணமாக நடந்து வருவாள். அவளையும் உன்னுடன் அழைத்துச் சென்றுவிடலாம். ஆனால் குழந்தையின் நலனை உத்தேசித்து அவளை இவ்விடம் தங்கியிருக்கும்படி செய்யலாமென்று நினைக்கிறேன்."

"அப்படியல்ல; குழந்தையை ஏப்படியாவது காப்பாற்றி விடலாம். நாலுபேர் போகுமிடத்துக் குழந்தையா பாரம். அவசியம் மன்னி வருவதானால்தான் உங்கள் யோஜனைப்படி செய்யலாம். ஆனால் எங்கே எப்படி"

"வடக்கே.........கோபாலம்" என்ற ஒரு ஊரிருக்கிறது. அழகான கிருஷ்ணன் கோவில் ஒன்று உண்டு, அதிலுள்ள கிருஷ்ண விக்ரஹமோ, அதன் அழகு சொல்லில் அடங்காதது. அந்தக் கோவிலின் நிர்வாகப் பொறுப்பை எனது பால்ய நண்பனொருவன் ஏற்று நடத்தி வருகிறான். வீணை வாசிப்பதில் அவனுக்கு இணை அவனேதான். அழகான மனைவி, திடீரென இறந்துவிடவே, வாழ்க்கையில் வெறுப்புற்று ஊர் ஊராகச் சுற்றினான். கடைசியில் அந்த ஊரில் அந்த விக்ரஹத்தைப் பார்த்ததும் அவன் மனம் சற்றுச் சாந்தமடையவே அவ்வூரிலேயே தங்கினான். சதாகோவிலிலேயே இருந்து வந்ததினால் அதன் நிர்வாகஸ்தர் இவனுக்கு மிகவும் பழக்கமாகி விட்டார். இவன் கைப் பணமெல்லாம் கரைந்த சமயமும் அப்பெரியார் நிர்வாகத்தை விட்டு விலகும் சமயமும் ஒன்றாக நிகழவே, அவர் தமக்குப் பதில் இவனை ஏற்படுத்தி விட்டுச் சென்றார். ஏதோ அவன்மட்டில் கஷ்டமில்லாமல் ஜீவனம் செய்யப் போதுமான வரும்படி கிடைக்கிறது. ஆனந்தமாக வீணைவாசித்துக்கொண்டு காலம் கழித்து வருகிறான். உன் புருஷனிடம் முடிவான தகவல் கேட்டு வந்ததும், அவனுக்கு உன்னைப்பற்றிக் கேட்டு எழுதினேன். வந்தால் தன்னாலான உதவி செய்வதாகப் பதில் எழுதியிருக்கிறான், நியாயமான முறையில் புறப்படுவதற்கு ஒருவரும் அனுமதி தர மாட்டார்களென்பது நிச்சயம். அதனால் நல்லவனுக்கடையாளம் சொல்லாமல் செல்வதுதான் நடக்கும் விஷயம்" என்றேன்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பது பொய்யாகுமா? அண்ணா! கிருஷ்ணனையும், முருகனையும், எட்டு நாட்களாக

வேண்டி வேண்டிக் கதறினேன், ஒன்று அவர் என்னை ஏற்கும்படி செய்யவேண்டும். அல்லது எனது ஜீவனைப்பகவான் ஏற்கும்படி செய்யவேண்டுமென்று. 'நாமொன்று நினைத்தால் தெய்வமொன்று நினைக்கும்' என்பதற்கேற்ப, ஈச்வரன் உங்கள் ரூபமாக இந்த வழி காட்டினார் போலும். ஆனால் சொல்லுவது எளிது, செய்வது கடினம். நாம் இப்படிச் செல்லுவதினால் எவ்வளவு கஷ்டங்களை ஏற்கவேண்டிவரும், எவ்வளவு நிந்தனைகளைக் கேட்க வேண்டியிருக்கும். வேண்டாமென்ற கணவன்பக்கம் ஜயபேரிகை கொட்ட உலகம் கங்கணம் கட்டிக்கொள்ளும். இவ்வளவிற்கு மேல் உங்கள் உத்தியோகத்தை விட்டு விட்டு மன்னியுடன் ஏன் எனக்காகக் கஷ்டங்களை ஏற்கவேண்டும். என்விதி அனுபவித்துத் தானேயாக வேண்டும். நீங்கள் ஏன் வீண் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டும்?'' என்றாள்.

"தன்னையும் தன் குடும்பத்தையும், சுகமாகப் பாதுகாக்கப் பாடுபடுவது சர்வசாதாரணவிஷயம். திக்கற்ற உன்போன்ற அற்புத அறிவு படைத்த பெண்ணின் சக்தியைக் குடத்திலிட்ட தீபம் போலாகாமல் மலையிலிட்ட தீபம்போல் செய்வதுதான் மனிதனாகப் பிறந்ததின் பயன். விதி யென்று சொன்னாயே, அதன் விசித்ரச் செயல்தான் இவ்விதமெல்லாம் நடக்கும்படி செய்கிறது போலும். நீங்களும் நானும் ஒரேவீட்டில் குடியிருக்க நேர்ந்தது; அப்படியிருந்தாலும் நீ யாரோ நான் யாரோ என்றில்லாமல் இரு குடும்பங்களும் ஒரே குடும்பமாகப் பழகிவரச்செய்தது; அதிலும் சிறுவயது முதல் உனது அற்புதமான பாட்டுக்களையும், அறிவு விசாலத்தையும் கண்டு என் மனம் ஆச்சர்யத்திலாழ்ந்துவிடும். உனது பிற்கால வாழ்வு உன்னதமான லக்ஷ்யத்தில் செல்லும் என்று கனவு கண்டுகொண்டிருந்தது. கடைசியில் குணத்தில் கடையனான ஒருவனிடம் உன் வாழ்க்கைப் பத்திரத்தை ஒப்படைக்கச்செய்து, உன் வாழ்க்கை வனத்தில் வாழ்வின் ஜோதியைச் சிறிதும் காணவிடாமல், சோக இருளே கவ்விவிடும் என்ற நிலைமையை ஏற்படுத்திய அந்த விதியானது இடது பக்கமாக உருண்ட வாழ்க்கையின் சக்கரம் வலது புறமாகத் திரும்பி ஓடச் செய்ய என்னை ஏற்படுத்தியது போலும். இல்லாவிடில் உன் புருஷனின் முரட்டுப் பிடிவாதத்தை நேரில் பார்த்துவிட்டு வந்த க்ஷணமே அவன் கண்முன்பாகவே 'கேவலம் அழகு அழிந்துவிடும்; குணமும் ஆற்றலுமே சிறந்து நிற்கும்; அழியாத வஸ்து அதை இழந்தோமே' என்று அவன் பச்சாத்தாபமடையும் உன்னத நிலைமைக்கு உன்னைக் கொண்டுவந்துவிட வேண்டும் என்ற தீவிர புத்தி எனக்கு ஏற்படுவானேன்? எல்லாம் விதியின் செயல். அது காட்டும் பாதையில் நடந்து செல்லுவோம். உயரிய இருப்பிடத்தைக் கண்டு களிப்பது நிச்சயம். காமாக்ஷி! தயங்காதே, என்னை நம்பு. நான் உனது அன்புமிக்க சகோதரன் என்பதை என் மனம் ஒருநாளும் மறக்காது. உலகம் எது வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டிருக்கட்டும். தீமைக்குத் தலைவணங்கக்கூடாது. தைரியமாக எதிர்த்துநிற்க வேண்டும். எனது ஆதர்சப் பெண் நீதான்."

"அண்ணா! இவ்வுதவிக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும்? ஆனால் ஒரு விஷயம். உலக வழக்கை முழுவதும் உதறித் தள்ளி நடக்க முடியுமா என்பதே எனது பிரச்னை."

"முழுவதும் தள்ளி நடக்கவேண்டுமென்று நான் சொல்ல வில்லையே. ஒத்துழைப்பதற்காகவே தான் மறைவு வேண்டுமென்கிறேன். இல்லையானால் பஹிரங்கமாகக் கல்லெறி வாங்குவது நிச்சயமல்லவா? மெஜாரிட்டி மைனாரிட்டியாகச் சம்மதம் பெற்று இவ்விஷயங்களில் நடக்கமுடியுமா? ஒருவனுடைய சொல் சக்தியினாலும், தீவிர முயற்சியினாலும் உலகமும், சமூகமும் ஏற்கச்செய்யும் ஒரே விஷயத்தை, பலபேர்கள் கூடி பலவிதமான அபிப்பராய பேதங்களுடன் விவாதித்து முடிவிற்கு வந்தாலும் சுலபமாக உலகம் ஏற்க முடியாமல் செய்தாலும் செய்துவிடும். அதனால் உலகப்போக்கை ஒட்டியும் ஒட்டாமலும் விஷயத்திற்குத் தகுந்தாற்போல் நமது சொந்த மூளையையும் மனச்சாக்ஷியையும் உபயோகித்துச் சீர்தூக்கிப்பார்த்து நடக்க வேண்டு மென்பதே எனது துணிபு'' என்றேன்.

"உண்மைதான். நீங்கள் சொல்வது முக்காலும் உண்மைதான். உங்களையே ஞான குருவாகக்கொண்டு உங்கள் சொற்படியே நடக்கிறேன். பகவான் நல்ல மார்க்கத்தைக் காட்டட்டும். இவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்லத்தான் எனக்கு எந்த மனிதர்கள் இருக்கிறார்கள்? ஆனால் என்னுடன் மீனாக்ஷியும் இருக்க வேண்டுமென்பது என் அபிலாஷை. பாவம் அவள் கதிமட்டும் என்ன உயர்வானது? அதற்கு நீங்கள்........."

"அவசியம் மீனாக்ஷி உன்னுடன் இருக்க வேண்டியதுதான். அவளுக்கும் ஏதாவது ஏற்பாடு செய்துவிடலாம். மற்றவை உனக்குச் சம்மதம்தானே?''

"கரும்பு தின்னக் கூலியா வேண்டும்? மன்னி நம்முடன் அவசியம் இருக்கவேண்டும். மீனாக்ஷியுடன் யோசனைசெய்து நாளை இதே இடத்தில் பதில் சொல்லுகிறேன்."

நானும் லக்ஷ்மியினிடம் பேசி ஒரு முடிவிற்கு வந்து நாளை தெரிவிக்கிறேன். நாழிகையாகிறது, நான் வரட்டுமா?'' என்றேன்.

''சரி. நமஸ்காரம்'' என்று கைகுவித்தாள்.

மறுநாளும் அதே மரத்தடியில் நின்று பேச்சைத் தொடங்கினோம்.

''மீனாக்ஷி என்ன சொன்னாள்?'' என்றேன்.

''முதலில் உலகம் தூற்றுமே என்றும், அம்மாவை விட்டுவிட்டு எப்படிப் போவதென்றும் தயங்கினாள். அப்படியானால் நீ அம்மாவினிடமே இரு. நான்மட்டும் போகவாவது அனுமதி கொடு. தூற்றுகிறவர்களெல்லாம் ஒருவேளை சாப்பாடு போடுவார்களா? அம்மாவிற்குப் பிள்ளையிருக்கிறான். பார்த்துக் கொள்ளுகிறான். அம்மாவின் காலமானது கடைசிப் படிக்குச் சென்றுவிட்டது. நமது காலமோ முதல் படியைத்தான் தாண்டியிருக்கிறது. பிள்ளையினுதவியால் எப்படியும் சுலபமாகத் தாண்டிவிடுவாள். நாம்தான் வழுக்கிவிழாமல் ஏறவேண்டும். ஊன்றுகோலாக ஒருவர் முன்வரும் பொழுது அதை நிராகரித்துவிட்டுத் தடுமாறுவானேன்? என்று பலவிதமாக எடுத்துச் சொன்னேன். கடைசியில் ஒத்துக்கொண்டாள். ஆனால்...''

''ஆனால் என்ன?''

''அவளைப்போன்ற பார்வதி, அவளின் அத்யந்த சிநேகிதி, அவளையும் அழைத்துச்செல்ல வேண்டுமென்றும், மன்னி அவசியம் நம்முடன் வருவதானால்தான் புறப்படலாமென்றும் சொன்னாள்'' என்றாள்.

''என்னப்பா, ஒன்று இரண்டு மூன்று நான்கு, எவ்விதம் சமாளிப்பாய்? ஏதேது ஒன்றும் சரியாகப் படவில்லை'' என்றார் கிட்டா.

''பொறு அப்பா! அவசரப் படாதே. எவ்வளவுபேர் வந்தாலென்ன? மரம் வைத்தவன் ஜலம் விடுவான். சரி குறையும் கேள். சரி அப்படியே செய்வோம்'' என்றேன்.

''மன்னி என்ன சொன்னாள்?'' என்றாள்.

''மன்னி வருவதற்குத் தயார். முரளியை, அவள் அம்மாவினிடம் தந்திரமாக விட்டுவிட்டு வருவதென்று முடிவு''

''ஐயோ! குழந்தையைப் பிரிந்து எப்படி இருப்பாள்? வேண்டாம் அண்ணா! அவனும், நம்முடன் இருக்கட்டும்''

''இல்லையம்மா, அவனுடைய நன்மைக்காகவே இந்தத் தியாகம். போகிற இடத்தில் எவ்வளவு கஷ்டங்களை எதிர்த்து நிற்க வேண்டுமோ? அவனையும் ஏன் அதில் பங்கு பெறச் செய்ய வேண்டும். முதலில் அங்கு

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ,, 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ,, 53,00,000
ரிஸர்வ் நிதி ,, 62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன.

N. கோபால அய்யர்
ஸெக்ரெடரி

தி இந்தியன் பாங்க் லிட.

விட்டால் பிறகு அண்ணா பார்த்துக்கொள்ளு-
வான். ஒரு லக்ஷியத்தை நிறைவேற்ற

வேண்டுமானால் இவ்விதத் தியாகமெல்லாம்
ஒரு லக்ஷியமாக நினைக்கலாமா?

"என்னமோ எனக்கு ஒரே பயங்கரமாக இருக்கிறது. எல்லாம் நன்மையாக முடிய வேண்டும். இருக்கும் நிர்ப்பந்த நிலைமையைச் சமாளிக்க வகையில்லாததினால் உங்கள் ஏற்பாட்டிற்குத் தலை வணங்குகிறேன்"

"கவலைப்படாதே "காளமோஹினி காதம்பரி" யின் புகழ் இந்தியா முழுவதும் பரவும் நாள் நிச்சயம் வரப்போகிறது"

"அடடா, அதற்குள் பட்டம் பெயர் எல்லாம் கொடுத்துவிட்டீர்களே. 'சரி. புறப்படுவது எப்படி என்று தீர்மானம் செய்தாய் விட்டதா?"

"இன்றைக்குத் தேதி மூன்று. பத்தாம் தேதி உனது மதனி வீட்டிற்கு வந்துவிடுவாள் பொறுப்பேற்க. அடுத்த முதல்தேதி சம்பளம் கையில் வந்துவிடும். அதற்குள் கொஞ்சம் ரொக்கமும் தயார் செய்துவிடுவேன். மூன்றும் தேதி திருச்செந்தூரில் விசாகம். விசாகத்திற்கு நானும் லக்ஷ்மியும் குழந்தையின் பிரார்த்தனை நிறைவேற்றப் போகப் போகிறோம். நீங்கள் மூவரும் எங்கள் கூடப்போய் வருவதாக உன் அம்மாவிடம் உத்தரவு வாங்குவீர்கள். இரவு ஏழு மணிக்கு இரண்டு பக்கமும் வண்டி புறப்படுகிறது. ஸ்டேஷனுக்குச் சென்றுவிட்டால் வடக்கே போனோமா தெற்கே போனோமா என்பதை யார் அறியமுடியும்? உன் அண்ணா அவ்வளவு சிரத்தையுடன் ஸ்டேஷனுக்கு வரமாட்டான் என்பது நிச்சயம். ஒரே பெட்டியில் உங்கள் மூவரின் துணிமணி சாமான்கள். எங்களுக்கு ஒரு பெட்டி. திருச்செந்தூரில் சமையல் செய்து சாப்பிடுவதற்காகக் கொஞ்சம் பாத்திரங்கள் சிறு சாக்கில். நீங்கள் மூவரும் நேரே மெட்ராஸிற்குச் சென்று, நான் எழுதிகொடுக்கும் கடிதத்தின் விலாஸப்படி ஒரு டாக்ஸி ஏற்பாடு செய்து அந்த ஹோட்டலில் சென்று மானேஜரிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தால் உங்களுக்கு வசதிசெய்து கொடுப்பார். மறுநாள் நாங்கள் வந்துவிடுவோம். பிறகு யாவரும் ஒன்றாகவே வடக்கே பிரயாணமாகலாம். அந்த மாதிரி செல்லுவதற்கு உனக்குத் தைரிய மிருக்கிறதல்லவா?" என்றேன்.

"தைரியம் தானே வந்துவிடுமே" என்று சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"ஒன்றுமில்லை. கணவனே கண்கண்ட தெய்வம்" என்று மன்னி சர்வத்தையும், ஏன் உயிரினுமினிய பாலனையும் தியாகம் செய்துவிட்டுப் புறப்படுகிறாள். நானோ, சமூகத்தின் சட்டப்படி கணவனுக்குத் துரோகச்செயலாக, கள்ளத்தனமாக மூன்றும் மனிதருடன் ஊரைவிட்டு ஓடுகிறேன். ஒரே விதமான நமது பிரயாணம் எவ்வித பாகுபாட்டைக் காண்பிக்கின்றது என நினைக்கும்பொழுது சிரிக்காமல் என்ன செய்வது?"

"இது எப்படித் துரோகமாகும்? கணவன் அவன் கடமையைச் செய்யத் தவறுகிறபொழுது, மனைவியைக்கடமையினின்றும் தவறச் செய்ய அவன்தானே காரணமாகிவிடுகிறான். 'மனைவி ஸ்தானத்தைக் கொடுக்காவிட்டாலும் உன் வீட்டில் வசிக்கும் உரிமையாவது கொடு' என்று மன்றாடிக்கேட்டேனே, அதற்குக் கூட அவன் இடமளிக்கவில்லையே. அப்படிப்பட்டவன் விஷயத்தில் இது துரோகமாகாது."

"எதுவாயினும் சரி. ஒருவர் கையை எதிர்நோக்காமல் என்னை நான் காத்துக்கொள்ள வசதி கிடைத்தால் போதுமானது. பெயருக்கும் புகழுக்கும் பேராசைப்படவில்லை. அண்ணா! உங்களுக்கு என் ஆயுள் முழுதும் கடமைப்பட்டவளாகவே இருப்பேன்" என்றாள்.

எனக்கு ஆபீஸுக்கு நேரமாகிவிட்டதினால் அத்துடன் பிரிந்து சென்றுவிட்டேன்.

"என்னப்பா! இவ்வளவு தூரம் விஷயங்களை ஒழுங்கு செய்துவிட்டு, லக்ஷ்மியை நீ பார்த்துக்கொள்ளுகிறாயா என்று அளப்பறிகிறாயே. இதுதான் உத்தமமான நண்பனுக்கு அடையாளமோ?" என்றார் கிட்டா.

"அப்படியல்லப்பா, இது அவளிடம் கூறின தீர்மானமே தவிர, கடைசி முடிவு இன்னும் உறுதிப்படமுடியாமல் என் முரளீ மனதை ஆட்டுவிக்கின்றான். நீ உன் ஆலோசனையில் அவள் இவ்விடமிருப்பதுதான் நன்மை என்ற முடிவு ஏற்பட்டால் புறப்படும் பொழுது யாவருமாகப் புறப்பட்டுவிட்டு, லக்ஷ்மியைப் பிறந்த வீட்டில் விட்டுவிட்டு நாங்கள் சென்றுவிட்டால் பின்னர் நடப்பதற்கு என் உதவி தேவையிருக்காதல்லவா?"

"அந்தப் பெண்ணிற்கு ஏதாவது ஒரு நல்ல மார்க்கம் காட்டவேண்டும். 'தனது உதவி இல்லாவிடில் பெண் முன்னேற முடியாது' என்று ஆணவத்தினால் இரக்கமின்றி நடந்து கொள்ளும் சில ஆண் சமூகத்திற்குப் புத்தி புகட்டும்படியான வழிதேட வேண்டும் என்பதில் எனக்கும் மிகமிக விருப்பம்தான். ஆனால் தாயார், சகோதரிமார், மனைவியாகியபத்துப் பேர்களுக்கு நான் ஒருவனே ஆதாரமாக இருக்கும் நிலைமையில் மனக்கோட்டையைத் தவிர நிஜக்கோட்டையைக் காண்பது குதிரைக் கொம்பு. உன் விஷயம் என்போலல்ல,

உனக்கு வசதியிருக்கிறது. இவ்விஷயத்தில் என்னாலான உதவியை நான் செய்வது பாக்கியமெனக் கருதுகிறேன். என் தலைபோவதானாலும் உன் இருப்பிடத்தை ஒருவருக்கும் சொல்லமாட்டேன். உனது, காமாக்ஷியின் ஏற்பாட்டின்படி லக்ஷ்மி உன்னுடனிருப்பதே நலம். குழந்தையை அவர்கள் சரியாகக் கவனிக்கவில்லையென்று தெரிந்தால் தைரியமாக நான் அழைத்து வைத்துக்கொள்ளுகிறேன். இது விஷயங்களில் என்னைப் பூரணமாக நீ நம்பலாம்."

"என்ன கிட்டா! இப்படிச் சொல்லிவிட்டாய். உன்னிடம் நம்பிக்கை இல்லாமலா இவ்வளவு விஷயங்களையும் சொன்னேன். பகவான் செயலால் அம்மாவை அனுப்பும்படி அண்ணா கடிதம் எழுதியிருக்கிறார். நாளைக்கே அவளைக் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்துவிடுகிறேன். நான் சென்றபின் வீட்டைக் காலி செய்து சாமான்களைத் தமையனாரிடம் ஒப்படைத்துவிடு. பிறகு விதிசெல்லுமிடத்து மதி தானே பின்தொடரவேண்டியது தானே?"

"சரி, அப்படியே செய்துவிடுகிறேன். உனது லக்ஷ்யம் நிறைவேறட்டும். மாதம் ஒரு முறையாவது கடிதம் எழுது. உன் பெயரை மாற்றி எழுது. சரி, பணம் எவ்விதம் தயார் செய்யப்போகிறாய்?"

"பாங்கில் நானூறு இருக்கிறது. சம்பளம் இருநூறு கிடைக்கும். அத்துடன் கிளம்பிவிடுவது."

"இவை எவ்வளவு நாளைக் கடத்த உதவும்?"

"போகப் போகப் பகவான் வழிவிடுவார். அதற்காக நான் கவலைப்படவில்லை."

"ரொம்ப கஷ்டமாக இருந்தால் யோசனை செய்யாதே; எழுது. எப்படியாகிலும் கையில் கிடைத்ததை அனுப்புகிறேன்" என்று சொல்லும்பொழுது கோவிலில் மணியடிக்கவே, "வா போகலாம் தீபாராதனைக்கு என்று எழுந்து நடந்தார் லக்ஷ்மணன். பின் தொடர்ந்தார் கிட்டா.

(தொடரும்)

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்

சாதாரண கேஸ்களுக்கு	...	...	ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	...	ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	...	ரூ 8

(V. P. Charges Extra)

தயாரிப்பவர்கள்:-

MRS. P. DEVEE, F.D.S. (C.M.)
Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

1. ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோடு, மதராஸ்.
2. ஜே. திராத் & கோ., மங்கல்தாஸ் மார்கெட், ஹனுமான்மந்திர் மேல்புரம், பிரின்ஸஸ் தெரு, பம்பாய்-2.
3. நாதம் & கம்பெனி, மட்டஞ்சேரி, கொச்சி.
4. எல். எம். முகர்ஜி & சன்ஸ் லிமிடெட், 167, தர்மதலா தெரு, கல்கத்தா.
5. ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா தெரு, பங்களூர் கண்டோன்மெண்ட்.
6. கே. வி. மாத்யூ & கோ., கோஸாஞ்சேரி, திருவாங்கூர்.
7. பயனீர் பார்மஸி, 183, மெயின் ரோடு, கொழும்பு (ஸிலோன்).



IN

Gawo

Sandal Soap

"காவோ சந்தன சோப் மிகவும் மேன்மையான முறையில் தயாரித்திருப்பதோடு எந்த உயரிய இங்கிலீஷ் டாய்லட் சோப்புடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும் சளைக்காது தலை தூக்கி நிற்கும். காவோ சோப்பின் பரிமள சந்தன கந்தம் நாம் கண்ட வகைகளில் நிகரற்றது என்று சொல்லலாம்.

"சோப், பர்பியூமரி & காஸ்மடிக் ரெவியூ",
லண்டன்.

rapturously alluring & MYSTIC
It will delight you

GANGA WORKS
ADYAR, INDIA.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1. ***SUNDARI ELIXIR***
   For all kinds of female irregularities in menses and a great uterine tonic.
2. ***PHOSPHORUS OIL***
   A great pain relieving oil ever prepared in annals of medicine.
3. ***MASTANA PILLS***
   Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.
4. ***DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA***
   A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

தமிழ்த் தெய்வ பத்தினி

ஈ. ஸ்ரீ. நரஸிம்மாசாரியார்

காசி-அரசன் அரண்மனை

வாயிற்காப்போன்: அரசே! தங்களைத் தேடி, தென் தேசத்திலிருந்து ஒருவர் வந்திருக்கிறார். பண்டிதர் மாதிரி காண்கிறது. கையில் ஓலை கொணர்ந்திருக்கிறார்.

அரசர்: மந்திரிகளே! இன்று சபை இதோடு

முடியட்டும். கூடுமானல் மாலை சாந்தி மண்டபத்தில் சந்திப்போம். இன்று எல்லாப் பண்டிதர்களுக்கும் சன்மானம் செய்யப் போகிறேன்.

மந்திரிகள்: தமிழ்ப்பண்டிதரை யழைத்து அவரது யோசனையைக் கேட்கவில்லையே. என்ன செய்யப் போகிறீர்கள்?

அரசர்: தமிழ்ப் பண்டிதரையும்தான் அழைத்து யோசனை கேட்க யோசித்தேன். குலோத்துங்க சோழருக்கும் கடிதம் எழுதினேன். பதில் ஒன்றையும் காணோம். கம்பரையல்லவா எதிர்பார்த்தேன்.

(மந்திரிகள் போகிறார்கள்)

அரசர்: உத்தமா! வந்திருக்கும் மனிதரை உள்ளே அழைத்துவா.

உத்தமன்: அப்படியே சுவாமி!

(அழைத்து வருகிறான்.)

அரசர்: சுவாமி! தங்களால் யான் புனிதனானேன். தங்கள் வரவு நல்வரவாகுக.

(ஓலைச் சுருளைப் பிரித்துப் படிக்கிறார்) சுவாமி! நமஸ்காரம். மதுரையம்பதியிலிருந்து வருகிறீர்களா? தமிழில் பெரும்புலமை பெற்றிருக்கிறீர்கள். மிகச் சந்தோஷம். தங்கள் போன்றவர்களை உபசரிக்கும் பாக்கியம் பெற்றேன்.

பண்டிதர்: அரசே! மங்களமுண்டாகுக. நான் மதுரையம்பதியிலிருந்துதான் வருகிறேன். எனக்குக் கங்கையில் ஒரு மண்டலம்

நீராடி விசுவநாதரைத் தரிசிக்க ஆவலுண்டாயிருக்கிது.

அரசர்: அப்படியே சுவாமி! என் தேசம் தங்களைச் சந்தோஷமாய் வரவேற்கும். எல்லோரும் படித்தவர்கள். ஆதலால் நான் பண்டிதர்களுக்குச் சன்மானம் செய்வதை அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுவார்கள். எனக்குப் பண்டிதர்களைக் கௌரவிக்க வேண்டுமென்ற ஆசை.

பண்டிதர்: தங்களுடைய நல்லெண்ணம் எக்காரியத்தையும் நிறைவேற்றும். இவ்வளவு பெருந்தன்மையுள்ள அரசரை நான் பார்த்ததே இல்லை. என் அதிர்ஷ்டந்தான்.

அரசர்: படித்தவர்கள் யாவரும் பரம தரித்திரர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் வறுமையை யகற்ற வேண்டுமென்பது என் எண்ணம். ஆனால் என் இராஜ்யம் சிறியது.

பண்டிதர்: பண்டிதர்களும் தனம் வைத்திருக்கிறார்கள். ஆனால் தற்காலத்தில் செலுபடியாகவில்லை.

அரசர்: ஆம்! சுவாமி! அவர்கள் படிப்பையே தனமாக வைத்திருக்கிறார்கள். அழியாச் செல்வமல்லவா அது? அறிந்து இன்புறத் தெரியவில்லை இந்த ஜனங்களுக்கு.

பண்டிதர்: கடவுள் பண்டிதர்களை இவ்வாறு கஷ்டத்தில் விடக்கூடாது. என்னுடைய ஒரு காலத்து வரலாற்றை நினைத்தால் கடவுள் ஏன் ஞானிகளைப் படைத்தார் என்று கூடத்தோன்றுகிறது.

அரசர்: அது என்ன? அப்படிச் சொல்லுகிறீர்களே. நீங்கள் பட்ட கஷ்டமா?

பண்டிதர்: ஆம்! அரசே! என் மனைவியும் படித்தவள். ஒருநாள் வீட்டில் சாப்பிட ஒன்றுமில்லை. பகற்பொழுதில் அவளிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்தேன். நானும் ஒன்றையெடுத்துக் கொண்டேன். பகலெல்லாம் படித்தே பசியைத் தீர்த்து விட்டோம்.

அரசர்: பகலில் போக்கிவிடலாம். இரவில் தான் அஞ்ஞானத்தின் ஆதிக்கம். எவ்வளவு தான் தபசியானாலும் இரவு பசியுடன் இருப்பது முடியாது. அப்பொழுது என்ன செய்தீர்கள்?

பண்டிதர்: அப்பொழுதுதான் தீர்க்கவழி தெரியாமல் கஷ்டப்பட்டேன். கடைசியில் என் நண்பன் வீடுசென்று காற்படி அரிசியும் ஒரு தேங்காயும் வாங்கி வந்தேன்.

அரசர்: என் மனம் மிகுந்த கஷ்டத்தையடைகிறது. கேட்ட எனக்கே இவ்வளவு துன்பமானால், அதையனுபவித்த தங்களுக்கு என்னவாயிருக்கும்?

பண்டிதர்: இரவில் சாந்தமான பொருட்காவியத்தைப்போல் மனையாள் இருக்கிறாள். அவளுடைய ரஸமான பேச்சில் காலத்தைக் கழிக்கலாம். ஆனால், வயிறு என்பது எல்லாவற்றையும்விட வலிவுள்ளது. அதைச் சமாதானம் செய்ய முடியாது என்றுதான் எல்லோரும் கண்டு கொண்டார்கள்.

அரசர்: பண்டிதர்களால்தான் உலக சரித்திரம் நிலைக்கவேண்டும். அவர்களைக் கொண்டுதான் அரசர்கள் புகழ் பெறுகிறார்கள்.

பண்டிதர்: ஆம்! அரசர்கள் இல்லையென்றால் பண்டிதர்களும் திண்டாடுவார்கள்.

அரசர்: அது இரண்டாந்தரம். காளிதாசன் ஓர் அருட்கவி. கவிகளை எந்தக் கேள்வியைக் கேட்டாலும் அவர்கள் தங்கள் உள்ளங்களில் ஆராய்ந்து பதிலையுரைக்கிறார்கள். காளிதாசனால்தான் போஜ அரசன் பெயர்பெற்றான். அதுதான் 'ஆச்சரியம். அவர்கள் உள்ளம் ஒரு கண்ணாடி, அதில் யாவும் பிரதிபலிக்கின்றன போலும்.

பண்டிதர்: பாருங்கள், போஜ மன்னன் காட்டிலே வேட்டையாடிக் களைப்புற்றான். தண்ணீர் கிடைக்கவில்லை. இடைச்சி மோர் விற்க அந்த வழியே சென்றாள். அவளிடம் மோரை வாங்கி அருந்தி அவள் இஷ்டப்படி அவளை மணந்தான். அரசருக்குப் பட்டாபிஷேகம் நடக்கவேண்டிய நாள் வந்தது. தங்கக் குடத்தில் தண்ணீர்மொண்டு மெத்தைமேல் நடந்தாள். அது தவறி மெத்தைப் படிக்கட்டில் உருண்டு ஓடியது. மறுநாள் போஜன் ஆஸ்தான மண்டபத்தில், "டடண்ட டண்டண், டடடண்ட, டண்டண்" என்றான். அதைவைத்துக் கொண்டு அந்த வரலாற்றை யப்படியே சுலோகம் செய்தான்.

அரசர்: என்ன! என்ன? ஆச்சரியமாயிருக்கிறது. ஆம். காளிதாசனால்தான் போஜன் பெயரெடுத்திருக்க வேண்டும். கவிகளுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. வால்மீகிக்கு இராமாயண கதைகள் முழுவதும் அப்படியே கண்முன்வந்து நின்றன. அவர் தந்த உவமைகள் என்ன அழகாயிருக்கின்றன?

பண்டிதர்: இராமாயணம் மிகவும் உயர்ந்த காவியம். அதைப் படிக்கப் படிக்கத் தெவிட்டாது.

அரசர்: நான் நாற்பது ஐம்பது தரம் படிக்கச் சொல்லி நன்றாய்க் கேட்டிருக்கிறேன். என் இராஜ்யம் இராம ராஜ்யமாயிருக்க

வேண்டும். தங்களால் எனக்கு ஒரு பெரிய காரியம் ஆகவேண்டும்

பண்டிதர்: காத்திருக்கிறேன்.

அரசர்: இராமாயணத்தை அப்படியே சித்திரமாய் எழுத ஏற்பாடுசெய்திருக்கிறேன். அதற்கு அநேக தேசத்துப் பண்டிதர்களை அழைத்து அவர்கள் ஆலோசனைகளை அந்தச் சிற்பிக்கு எடுத்துச் சொல்லச் செய்தேன். தென் தேசத்தில் கம்பர் என்ற மகான் இராமாயணம் செய்திருக்கிறாராம். அவரை யழைத்து அவர் ஆலோசனையையும் கேட்க வேண்டுமென்ற ஆசையால், குலோத்துங்க சோழருக்கு ஓலையனுப்பினேன். பதிலைக் காணோம்.

பண்டிதர்: அம்மண்டபம் எங்கிருக்கிறது? என்னால் ஆன உதவியைச் செய்கிறேன். நானும் கம்பராமாயணம் படித்திருக்கிறேன்.

அரசர்: அப்படியாயின் தங்களுடைய யோசனையைக் கலந்து சித்திரத்தை யெழுத முடிவுசெய்துவிடுகிறேன். சைத்ரிகரும் இப் பொழுது இங்கு வருவார். மற்றப் பண்டிதர் களுக்கு இன்று சன்மானம் வழங்கியனுப்பி விடப்போகிறேன். நீங்கள் மாத்திரம் இங் கிருந்து சைத்ரிகருக்கு ஆலோசனையைக் கூறுங்கள்.

பண்டிதர்: கம்பராமாயணத்தில் என்ன அவ்வளவு விசேஷ மதிப்பு வைத்திருக்கிறீர் கள்?

அரசர்: ஆம்; சுவாமி! அவர் இராமாய ணத்தை அரங்கேற்ற ஸ்ரீரங்கம் சென்ற பொழுது மேட்டு அழகிய சிங்கர் சிரக்கம்ப னம் செய்தார். பாம்பு கடித்திறந்த தில்லைத் தீக்ஷிதரின்பிள்ளை பிழைத்தது. இவைகளால் தெய்வாம்சம் பொருந்தியதல்லவா?

பண்டிதர்: நீங்கள் சொல்லுவது சரிதான். எங்கள் பக்கத்தில் உயர்ந்த காவியமாகக் கொண்டாடுகிறார்கள்.

(சைத்ரிகர் வருகிறார்)

சைத்ரிகர்: அரசே! வந்தனம். வருகிற வெள்ளியன்று தான் சித்திரம் எழுதத் தொடங்கவேண்டும். தமிழ்ப் பண்டிதர்க ளுக்கு ஓலையனுப்பினீர்களா? அவர்கள் இது வரை வரக்காணேனே, என் செய்வது?

அரசர்: ஆம். குலோத்துங்க சோழருக்குக் கடிதம் எழுதினேன். ஒருவரும் வரவில்லை. சைத்ரிகரே! அவருக்குப் பதிலாக இந்தத் தமிழ்ப் பண்டிதரை வைத்துக்கொள்ளுங் கள். ஸ்ரீராம நவமிக்கு முன்னால் காரியம் முடித்துவிடுவது நலம்.

சைத்ரிகர்: அப்படியே' தங்கள் சித்தம்: (தமிழ்ப் பண்டிதரைப் பார்த்து) நானே உங்களிடம்வந்து அப்பொழுது அப்பொழுது ஆலோசனையைக் கேட்டுக் கொள்ளுகிறேன். மண்டபம் இங்கிருந்து ஐந்துமைல் தூர மிருக்கும்.

பண்டிதர்: சைத்ரிகரே! நீர் வரவேண் டாம். நானே அப்பொழுது அப்பொழுது வந்து இராம கைங்கரியத்தில் ஈடுபடப்போகி றேன்.

அரசர்: நான் ஒன்று செய்கிறேன். நல்ல குதிரையொன்றைக் கொடுக்கிறேன். நீங் கள் அதன் மேல் ஏறிப்போவது உத்தமம்.

பண்டிதர்: எனக்குக் குதிரைச் சவாரி தெரியாது.

அரசர்: அப்படியாயின் குதிரை, வண்டி, ஒரு ஆள் இம்மூன்றையும் ஏற்பாடு செய் கிறேன்.

பண்டிதர்: அப்படியே; மிகுந்தசந்தோஷம்.

சைத்ரிகர்: எனக்கும் சந்தோஷம்.

அரசர்: நான் மற்றும் இராஜ்ய விவகாரங் களைக் கவனிக்க வேண்டும், பண்டிதரும் சைத்ரிகரும் சேர்ந்து என் காரியத்தை முடித்துத் தரவேண்டும்,

(அரசர் செல்லுகிறார்)

பண்டிதர்: சைத்ரிகரே! கம்பராமாயணம் வால்மீகி இராமாயணம் இரண்டும் ஒன்றே, ஏதோ சில சில இடங்களில் சீதையின் பிரபாவத்தை அதிகப்படுத்த எழுதியிருக்கி றார்.

சைத்ரிகர்: ஆம், நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன், மஹா உத்தமி சீதை. அவளுக்கு இழுக்கு உண்டாகக் கூடா தென்றுதான் எல்லோரும் சொல்லுகிறார் கள். இராமாயணமே சீதையின் சரித்திர மென்று சொல்லுகிறார்கள், இன்னொரு விஷயம்: நான் இராமாயணம் முழுவதும் வரைந்த பிறகுதான் தங்கள் போன்றவர் கள் பார்க்கவேண்டும். அது என் குருநாத ரின் கட்டளை.

பண்டிதர்: அது என்ன, அப்படிப்பட்ட கட்டளை?

சைத்ரிகர்: ஆம்: அதனால் வரும் கெடுதல் கள் அவருக்குத் தெரிந்துதான் கட்டளையிட் டார்.

பண்டிதர்: அப்படியென்ன கெடுதல் சம்பவித்தது?

சைத்ரிகர்: குருநாதர் தம் பெண்ணுக்குச் சித்திரக் கலையைப் போதித்தார். அவள் கர்ப்பமாக இருக்கும்பொழுது தனக்குப் பிறக்கும் குழந்தையின் சித்திரத்தை

மனக்கண்ணால் எழுதினாள். கண்களைத்திறக்கும் சமயம் தாய் வீட்டில் அழைத்துச் சென்று விட்டார்கள். அவள் பெற்ற குழந்தை கண் மேலிதழ் மூடிப்பிறந்தது. சித்திரப்படி அழகாய் இருந்தது. குருநாதர் எங்கெங்கோ வைத்தியம் செய்தார். அரைப் பார்வையுடன் அந்தக்குழந்தை இருக்கிறது.

பண்டிதர்: சைத்ரிகரே! வால்மீகி இராமாயணத்தில் இருப்பதுபோல் சித்திரத்தைத் திட்டும். இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும் இடம் வரும்போது மாத்திரம் என்னிடம் ஆலோசித்து எழுதலாம். பதிவிரதையின் இலக்ஷணங்கள் பூராவும் அதிலடங்கியிருக்க வேண்டும்.

சைத்ரிகர்: பதிவிரதையின் தருமோபதேசம் இங்கு ஒரு மாது எடுத்துரைக்கிறாள். அவளையும் கலந்து ஆலோசிக்கலாம். ஆனால், அவளை ஆண்கள் ஒருவரும் பார்க்கக்கூடாது. பெண்கள் தங்கள் தருமங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறார்கள். அவள் தருமபத்தினிக்கு உவமானம் சீதையைத்தான் சொல்லுகிறாள்.

பண்டிதர்: மிகவும் சந்தோஷம். அவள் எப்படிப்பட்ட நடவடிக்கை நடத்துகிறாள்.

சைத்ரிகர்: சுத்த நாஸ்திகத்தையே உபதேசம் செய்கிறாள். அது ஆச்சரியமாக இருக்கிறது, அரசர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் தெய்வம் கிடையாதாம்.

பண்டிதர்: பின் நிரீச்வரவாதிகள். நீர் சொன்ன நாஸ்திகர்கள் தாம்.

சைத்ரிகர்: தெய்வம் உண்டு என்கிறார்கள். அதனால் நிரீச்வரவாதிகளல்ல. அரசனுக்குப் பிரஜைகளும் மனைவிக்குக் கணவனுந்தான் தெய்வமாம்.

பண்டிதர்; அதெப்படி?

சைத்ரிகர்: மனைவி தனக்கு அனுகூலமாயிருப்பதால் கணவன் அவளிடம் அன்பு வைத்தவனுய் அவளுக்கும் சேர்த்துத்தானே கடவுளை வேண்டுகிறான். அரசன் நல்லவனுய் இருந்தால் அவன் புகழையும் குணங்களையும் கண்டு, பிரஜைகள் அரசன் நீண்டகால ஆயுளையும் நல்ல பிள்ளைகளையும் அடைய வேண்டுகிறார்கள்.

பண்டிதர்: அப்படி யார் இருக்கப் போகிறார்கள்? நடக்கிற காரியமா?

சைத்ரிகர்: இருக்கிறார்கள். ஒருத்தி சீதை. மற்றவன் இராமன். சீதை இராமனையே பின்பற்றினாள். இராமன் பிரஜைகளையே பின்பற்றினான்.

பண்டிதர்: ஆம். இப்பொழுது ஞாபகம் வந்துவிட்டது. சீதையின் சரித்திரம் தான் இராமாயணம். தமயந்தியால் நளன் உயர்வு பெற்றான். பார்வதியால் பரமசிவன் புகழ் பரவிற்று. பாஞ்சாலியின் சபதத்தால் தரும புத்திரர் இராஜ்யம் ஆண்டார். பதிவிரதையின் தன்மை எதையும் எதிர்த்து நிற்கும்.

சைத்ரிகர்: இதே வார்த்தைகள்தான் அவள் மொழிந்தாளாம்.

பண்டிதர்: அந்த உத்தம மாதைத் தரிசிக்கலாமா?

சைத்ரிகர்: அதுதான் முடியாது. அவள் ஒரு ஒளியிழந்தவள். கற்புக்கரசி. அவள் காதலித்த புருஷன் இறந்துபோனான். அவனைப்போல் சித்திரம் எழுதி அதை வைத்துத் துதிக்கின்றாள். மிகுந்த வேளையில் இவ்வூர் ஸ்திரீகளுக்கெல்லாம் தருமத்தை உபதேசிக்கிறாள். இவள் வந்த பிறகு இவ்வூர் ஸ்திரீகள் கணவனிடம் நடந்துகொள்ளுவதே ஒரு மாதிரிதான்.

பண்டிதர்: அப்படியா? அப்பாக்கியவதியின் மனதைக் கவர்ந்த அந்த யுவனின் படத்தையாவது பார்க்கலாமா?

சைத்ரிகர்: அது முடியாது. அந்தப்படத்தைப் பூஜை மேடைமேல் வைத்திருக்கிறாள். ஸ்ரீராம நவமிக்கு முதல்நாள் அவள் அயோத்திக்குச் செல்லுகிறாள். அப்பொழுது பார்க்கலாம். வீட்டை என் மனைவிதான் கவனித்துக்கொள்ளுவாள். என் மனைவியிடம் அதிக ஆசையவளுக்கு.

பண்டிதர்: அப்படியாயின் அப்பொழுதே வந்து பார்க்கிறேன்.

இரண்டாம் அங்கம்

அரசரின் அரண்மனை

பண்டிதர்: வைத்தியரே! என் சரீரம் எவ்வாறு இருக்கிறது? நன்றாய் அனுகூலந் தானா? நான் நடமாடலாமா?

வைத்தியர்: அதுதான் கூடாது. ஒரு மாதத்திற்கு நடமாடக் கூடாது. மறுபடி வியாதி திரும்பினால் இவ்வூர் கங்கையின் அரிச்சந்திர கட்டத்தைத்தான் அடைய நேரும்.

பண்டிதர்: பாதகமில்லை. எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கங்கையை அடைகிறார்கள். நான் அடைந்தால் பாதகமில்லை, ஆனால் ஓர் ஆசை இங்கு வந்த பிறகு தோன்றுகிறது. இராமாயணச் சித்திரங்களைப் பார்த்துவிட்டு இறந்தால் பாதகமில்லை.

வைத்தியர்; இராமாயண சித்திரங்கள் முடிவதற்குள் உங்களுக்குச் சௌக்கியமாய் விடும். சரீரத்தில் பலமில்லை. அதற்குப் பஸ்மமும் லேகியமும் தருகிறேன். புளி உப்பு குறைத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும். தித்திப்பு எவ்வளவு வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம்.

பண்டிதர்: அரசர் என் பக்கமிருக்கும் போது எனக்கு என்னகுறை.

(அரசர் வருகிறார்)

வைத்தியர்: அரசே! பண்டிதர் இனி பிழைத்து விட்டார். இவர் வெகு பரபரப்பாக இருக்கிறார். இவரை வெளியில் நடமாட விடக்கூடாது.

அரசர்: வைத்தியரே! என் அதிர்ஷ்டம். நான் பார்த்துக் கொள்ளுகிறேன். இவரால் நடந்து எங்கும் போக முடியாது. அவர் எப்பொழுதும் இராமனையும் இராமன் சரித்

திரமான சாந்தி மண்டபத்தையும் அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார். ஐந்துமைல்கள் இருக்கின்றன. குதிரையும் வண்டியும் கொடுத்திருக்கிறேன். குதிரை மேல் சவாரி விடத் தெரியாது. வண்டியைக் கொண்டு என் லாயத்தில் வைத்துப் பூட்டி விடுகிறேன். அவரைச் சரியானபடி உடம்பை யனுகூலப் படுத்துவது உங்களுடைய பொறுப்பு. நான் இராஜ்ய காரியமாக வெளியே போகிறேன்.

(போகிறுர்)

(சைத்ரிகர் வருகிறுர்)

சைத்ரிகர்: பண்டிதரே! அதுவரை உயிர் தப்பினீர்கள். மிகவும் சந்தோஷம். சஞ் சரிக்க முடியுமா? இன்னும் எத்தனை நாள் படுக்கையில் இருக்கவேண்டும்?

பண்டிதர்: உடம்பு நன்ருக அனுகூலம். பலஹீனம் அதிகம். நடமாடக்கூடாது என்று சொல்லிவிட்டார். சித்திரம் எவ்வளவுவரை முடிந்திருக்கிறது?

சைத்ரிகர்: 'ஸுக்ரீவன் சக்யம்'வரை சித் திரித்து விட்டேன். தங்களைக் கேட்கலாம் என்ருல் படுக்கையாய்ப் படுத்து விட்டீர்கள். இராவணன் சீதையைத் தூக்கிச் செல்லும் கட்டம் வந்தது. ஊம்.

பண்டிதர்: என்ன செய்தீர்? சொல்லும். சரியானபடி எழுதியிருக்கிறீரா? ஏன் அன்னை சீதையால்தான் இராமாயணமிருக் கிறது.

சைத்ரிகர்: நான் யாரோ ஒருவரின் உப தேசத்தைக் கேட்டு ஒரு மாதிரியாய் எழுதி யிருக்கிறேன். சித்திரங்களை ஸ்ரீராமநவமி யன்று பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

பண்டிதர்: எந்தவிதமாய் எழுதியிருக்கிறீ ர்கள்? யாராவது ஏதாவது உபதேசம் செய் திருக்கிறுர்களா?

சைத்ரிகர்: அதைத்தான் சொல்ல வெட்க மாயிருக்கிறது. சித்திரத்தை அந்த இடத் தில் பொருத்தமாய்த்தான் வரைந்திருக்கி றேன். அஸ்தமிக்கிறது. நான் வீடு போய்ச் சேருகிறேன். உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். (போகிறுர்)

(உத்தமன் வருகிருன்)

பண்டிதர்: உத்தமா? இங்கே வா. அவ சியம் எனக்கு ஒரு பெரிய உதவியைச் செய்ய வேண்டும்.?

உத்தமன்: அப்படியே சுவாமி! என்ன செய்யவேண்டும்?

பண்டிதர்: நான் சொல்லும் காரியம் மிக வும் முக்கியமானது. அரசர், வைத்தியர் முத லிய ஒருவருக்கும் தெரியக் கூடாது. என் அன்னையைத் தரிசிக்க வேண்டும். பதிவிர தைத் தெய்வம் அவள். அவளுக்கு இழுக்கு வரக்கூடாது.

உத்தமன்: எனக்கு ஒன்றும் புரியவில் லையே. பதிவிரதைத் தருமத்தை யுபதேசம் செய்யும் அந்த மாதரசியைச் சொல்கிறீர் களா? அவளை ஒருவரும் பார்க்க முடியாது.

பண்டிதர்: நான் சொல்லுவது எல்லாப் பதிவிரதைகளுக்கும் தெய்வமான அன்னை சீதையைச் சொல்லுகிறேன்.

உத்தமன்; நான் சொல்லும் மாது தன் கணவனையே தெய்வமாகக் கொண்டிருக் கிருள். கணவன் இறந்த பிறகு சீதையைத் தெய்வமாகப் பூஜிக்கிருள்.

பண்டிதர்: அந்த அன்னைக்குத்தான் பழுது வரக்கூடாது. பதிவிரதையருலகில் அவள் முதலில் எண்ணப்பட வேண்டும். அவள் தான் சீதை.

உத்தமன்: சீதைக்கு அடுத்த படியாக அந்த மாதரசைத்தான் சொல்லவேண்டும். எங்கள் ஊர் அவளால்தான் திருந்தியது. என் மனைவியின் ஒழுக்கம் இப்பொழுது எவ் வளவோ உயர்ந்திருக்கிறது.

பண்டிதர்: அது இருக்கட்டும். நான் இப் பொழுதே இராமாயண சித்திரங்கள் எழு திய சாந்தி மண்டபம் போய்ச் சேரவேண்டும். வண்டியை அரசர்தான் லாயத்தில் பூட்டி வைத்துவிட்டார். எப்படிப் போவது?

உத்தமன்: குதிரைமேல் ஏறிச் செல்லுங் கள்.

பண்டிதர்: அரசர் தெரிந்துதான் குதிரை யை விட்டுப்போயிருக்கிறுர். எனக்குத்தான் குதிரைச்சவாரி தெரியாதே. நீ குதிரை மேல் ஏறிக்கொள். நானும் உனக்குப் பின்னுல் ஏறி உட்கார்ந்து உன்னைப் பிடித்துக்கொள் ளுகிறேன்.

உத்தமன்: ஐயோ! மிகவும் சிறிய குதிரை யாயிற்றே! தாளாதே. நீங்கள் ஏறி உட் கார்ந்துகொள்ளுங்கள். நான் கடிவாளத் தைப் பிடித்துக்கொண்டு ஓட்டமும் நடையு மாய்ப் போகிறேன். அதனுல் கீழே விழக் காரணமிராது.

பண்டிதர்: எப்படியும் நான் விழுந்துவிடு வேன்.

உத்தமன்: அப்படியானுல். குதிரைமேல் கவிழ்ந்து படுத்துக்கொள்ளுங்கள். பிடரி மயிரைக் கையில் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் விழமாட்டீர்கள். நான் இழுத்துக் கொண்டு போகிறேன்.

பண்டிதர்: உத்தமா! ஒரு தீவட்டியையும் கையில் எடுத்து வா.

(குதிரையைக் கொண்டு வந்து நிறுத்துகிறன்.) பண்டிதர் குதிரைமேல் ஏறிப் படுத்துப் பிடரி மயிரைப் பிடித்துக்கொள்ளுகிருர். உத்தமன் கடிவாளத்தைப் பிடித்துக்கொள்ளுகிருன்.)

பண்டிதர்: உத்தமா! வாயிலில் யாரைக் காவல் வைத்திருக்கிருய்? நீ வருவது அரசருக்குத் தெரியக்கூடாது!!

உத்தமன்: யாரை வைத்திருக்கிறேன். என் தருமபத்தினியைத்தான். உங்கள் சமாசாரத்தைச் சொன்னேன். என் கத்தியை வாங்கிக்கொண்டாள். என்னைத் தங்களுக்கு உதவ அனுப்பிவிட்டாள்.

பண்டிதர்: அவள் உத்தமி. எப்படியடா இந்த உத்தமியை அடைந்தாய்?

உத்தமன்: இல்லை சுவாமி! எல்லாம் அந்த மாதரசியின் உபதேசத்தால்தான் இந்தக் குணம் அவளுக்கு வந்தது.

பண்டிதர்: மண்டபம் வந்துவிட்டதே. உள்ளே செல்லுவோம்.

உத்: அப்படியே. (போகிருர்கள்)

(சுவரின் ஓரமாய்ச் சித்திரங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. திரைச்சீலை போட்டு மூடியிருக்கிறது. தீவட்டியைக் கொளுத்திச் சீதையை இராவணன் தூக்கிச் செல்லும் இடத்தைப் பார்க்கிருர்)

பண்டிதர்: (ஆச்சர்யமடைந்தவராய்) அன்னையே! உன் சக்தியே தனி. பத்தினிக் கடவுளே! குணநிதியே! சைத்ரிகருக்கு எவ்வாறு இப்படி எழுதத் தோன்றியது?

(தீவட்டியில் திரைச்சீலைபட்டுப் பற்றிக் கொள்கிறது)

உத்தமன்: சுவாமி! நல்ல காரியம் செய்தீர். திரைச்சீலை பற்றி எரிகிறதே. (கையால் கசக்கி நெருப்பை அவிக்கிருன்)

பண்டிதர்: என்ன தவறு செய்துவிட்டேன்? சைத்ரிகருக்குத் தெரியக்கூடாது என்றல்லவா இந்தப் பிரயத்தனம். சரி உத்தமா! நான் சைத்ரிகர் வீட்டிற்குச் சீக்கிரமாய்ப் போய்ச் சேரவேண்டும்.

(இருவரும் முன்போலவே போகிருர்கள்)

சைத்ரிகர்: பண்டிதரே! எப்படி வந்தீர்கள்? வைத்தியர்தான் நடமாடக்கூடாது என்று உத்தரவுபோட்டிருக்கிருரே?

பண்டிதர்: ஆம். நான் பெரிய தவறுதல் செய்திருக்கிறேன். நீங்கள் மன்னித்தேன் என்று சொல்லவேண்டும். இல்லையேல், நாளை என்னை உயிரோடு பார்க்கமுடியாது.

சைத்ரிகர்: என்ன அப்படித் தவறு செய்துவிட்டீர்கள்?

பண்டிதர்: பெரிய தவறுதான் செய்துவிட்டேன்.

சைத்ரிகர்: எனக்குத் தெரியும். நான், தங்களைக் கலக்காது சீதையை இராவணன் தூக்கிச் சென்றதைப்பற்றி உங்களைக் கேட்காது எழுதிவிட்டேன். அதற்கு நீங்கள் தான் மன்னிக்க வேண்டும்; அப்பொழுது நீங்கள் உடல் நலமில்லாது படுத்திருந்தீர்கள். ஒருவரும் பார்க்கக் கூடாது என்று அரசர் ஆணை. ஆதலால்தான் உங்களைக் கேட்க முடியவில்லை.

பண்டிதர்: கேட்டிருந்தாலும் ஒன்றுதான். கேட்காமலே செய்தது பன்மடங்கு அதிகமாயிருக்கிறது. சீதையை மண்ணோடு எடுத்துச் செல்லுவதை நன்ருய் வரைந்திருக்கிறீர்கள். உங்களுக்கு இந்த அபிப்பிராயத்தை யார் சொன்னது?

சைத்ரிகர்: அந்தப்பதிவிரதைதான். அவள் தான் இன்னும் கொஞ்ச நாளில் முந்நூறு பெண்களுடன் அயோத்திக்குப் போகப் போகிருள்.

பண்டிதர்: நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் அந்தச் சித்திரத்தை இப்பொழுதுதான் பார்த்துவிட்டு வருகிறேன். அரசருக்குத் தெரிந்தால் நான் உயிருடன் இருக்கமாட்டேன்.

சைத்ரிகர்: எதற்கும் நீங்கள் அரண்மனைக்குப் போய்ச் சேருங்கள்.

பண்டிதர்: நான் போகிறேன். இன்னொரு வரம்தர வேண்டும். அந்தப் பதிவிரதையைக் காதலித்த புருஷனின் படத்தை மாத்திரம் ஒரு தரம் பார்க்க வேண்டும். அதுதான் நான் எடுத்த பிறவிக்குப் பயன்.

சைத்ரிகர்: அப்படியே சுவாமி! இன்று இரவே என் குருநாதர் தம் நண்பருடன் வருவதாய்ச் செய்தி வந்திருக்கிறது. அவரைக் கேட்டுக்கொண்டு அதன்படி நடக்கிறேன், ஆனல் அரசருக்குத் தெரிவிக்க வில்லை,

(பண்டிதரும் உத்தமனும் போகிருர்கள்)

மூன்றும் அங்கம்

"சைத்ரிகரின் வீடு"

சைத்ரிகர்: குருநாதரே! வரவேண்டும் தமிழ் நாட்டு மணியே வருக.

குருநாதர்: மங்களம் உண்டாகட்டும், இவருக்குத்தான் நீ உபகாரம் செய்யவேண்டும். தமிழ்த் தேசத்து அரசர், தான் இங்கு வந்திருப்பது ஒருவருக்கும் தெரியக்கூடாது, இவருக்காகத்தான் நான் இங்கு வந்தேன். எல்லாவிதச் சௌகரியங்களையும் செய்து கொடுக்கவேண்டும்.

சைத்ரிகர்: குருநாதரே! ஒரு பிராயச் சித்தம் வேண்டுகிறேன். நான் இராமாயண

சித்திரம் எழுத ஆரம்பித்தேன். இன்னும் பூர்த்தியாகவில்லை. அதற்குள் ஒரு கவி அதைப் பார்த்து விட்டார். அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? இராமபக்திபூரணமாகப் படைத்தவர். சீதையைத்தான் உயர்ந்த தெய்வமாகக் கருதுகிறார்.

குருநாதர்: பிராயச்சித்தமே கிடையாது. அவர்பார்த்ததே பிராணப் பிரதிஷ்டைதான். ஆனால் சித்திரம் பூராவும் வரையவில்லையே. ஆதலால் ஸ்ரீராமநவமி தள்ளி வைசாக மாதத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

சைத்ரிகர்: சரி அப்படியே. தாங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? நாளை காலை இருந்து போகலாமே.

குருநாதர்: இல்லை, நாளைக் காலை ஹரித்வாரத்தில் வீர அர்ஜுனன் சிலை திறக்க வேண்டும், இவருக்காகத்தான் வந்தேன், இதோ போய்க் கொண்டிருக்கிறேன், நன்றாய் இந்தத் தென்தேச மனிதரைக் கவனித்துக்கொள்ளும். (போகிறார்)

வந்தவர்: ஏதோ சித்திரம் என்றாயே என்ன?

சைத்ரிகர்: இங்கு ஐந்து மைலில் மண்டபம் ஒன்று கட்டி முடித்தார்கள். அதில் இராமாயணத்தைச் சித்திரம் வரைந்தேன், அரசர் ஏற்பாடு, அதில் சீதையைப்பூமியோடு தூக்கிச் செல்வதாய் வரைந்தேன். அந்தப் பண்டிதர் உனக்கு இது எப்படித் தெரியும் என்று கேட்டார், இவ்வூரில் ஒளியிழந்த பதிவிரதை இருக்கிறாள், அவள் தான் உபதேசம் செய்தாள் என்றேன், அவளைப் பார்க்க வேண்டுமென்றார்,

வந்தவர்: பார்க்க முடியுமா? அவள் யார்? எப்படி இருக்கிறாள்?

சைத்ரிகர்: அவளைப் பார்க்க முடியாது, இன்னும் கொஞ்ச நாளில் ஸ்ரீராமநவமி வருகிறது. அதற்குப் பத்து நாளும் அயோத்தி செல்லுவாள், அப்பொழுது அவள் காதலித்த புருஷனின் படத்தைக் காண்பிக்கிறேன் என்று சொன்னேன். அதைத்தான் கேட்கிறார்.

வந்தவர்: அப்படியா? தாடி வைத்திருக்கிறாரா? என்ன வயதிருக்கும்?

சைத்ரிகர்: ஆம்! தாடி வைத்திருக்கிறார். எழுபது வயதிருக்கும். நல்ல கவி. ஸம்ஸ்கிருதம் வெகு நன்றாய் உச்சரிக்கிறார். நீங்கள் படுத்துக்கொள்ளுங்கள்.

(கொஞ்ச நாள் கழித்து)

பண்டிதர்: சைத்ரிகரே!

சைத்ரிகர்: அடியேன்.

பண்டிதர்: என்னுடைய எண்ணம் நிறைவேறுங்காலம் வந்துவிட்டது.

சைத்ரிகர்; தாங்கள் எதற்காக வந்தீர்கள்? சித்திரம் எது வரை எழுதியிருக்கிறாய் என்கிறீர்களா? யுத்தம் வரை எழுதிவிட்டேன். யுத்தப் பகுதிக்குத்தான் மறுபடி தங்களிடம் யோசனை கேட்கலாமென்றிருக்கிறேன்.

பண்டிதர்: அதுவல்ல என் எண்ணம். அந்தப் பதிவிரதையின் காதலன் படத்தைக் காட்டும்படி கேட்டேனே.

சைத்ரிகர்: அப்படியே சுவாமி! எனக்கு அங்கு இப்பொழுது வர அசந்தர்ப்பமாயிருக்கிறது. அதிதி ஒருவர் வந்திருக்கிறார். அவரையுபசரிக்கவேண்டும். தங்களுக்குத்தான் என் மனைவியைத் தெரியுமே. அவளை யழைத்துக் காட்டச் சொல்லுகிறேன்.

பண்டிதர்: அப்படியே செய்யும். அதிதிகள் தான் தேவதைகள்.

(இருவரும் அடுத்த தெருவில் உள்ள வீட்டையடைந்து உள்நுழைகிறார்கள். உள்ளே போய் அந்தப் படத்தைப்பார்த்து, பண்டிதர் கீழே விழுந்து மூர்ச்சையுறுகிறார். சைத்ரிகர் மனைவி ஓடிவருகிறாள்)

சைத்ரிகர் மனைவி: (ஓடிவந்து) பிராணபதி! அந்தப் பண்டிதர், படத்தைப் பார்த்து என் மகனே, அம்பிகாபதி! என்று மூர்ச்சையாய் விழுந்து விட்டார்.

வந்தவர்: ஐயோ! நான் நினைத்தது சரியாய்ப் போய்விட்டது. அவர்தான் கம்பர். அவர் பிள்ளைதான் அம்பிகாபதி. அந்த ஒளியிழந்த பெண்தான் அமராவதி.

(யாவரும் ஓடுகிறார்கள்)

(கம்பர் மூர்ச்சை தெளிந்து எழுகிறார். காலடியில் குலோத்துங்க சோழ அரசர் கை கூப்பி நிற்கிறார். சைத்ரிகரும் கைகூப்பி நிற்கிறார்.)

கம்பர்: குலோத்துங்கரா! நான் பாக்கியமற்றவன். இப்படிப்பட்ட பதிவிரதாசிரோமணி என் மருமகளாய் இருக்கக் கொடுத்துவைக்கவில்லை, நான் ஒரு பாபி. எவ்வளவோ பாபத்தைச் செய்தவன்.

சோழர்: நான் செய்தபாவத்திற்குக் கங்கு கரை கிடையாது. இந்தப்பெண்ணும் மருமகனும் சந்தோஷமாயிருப்பதைப் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லை, என் மனைவி அழுது அழுது கண்ணீரைப் பெருக்கினாள். கடைசியில் பிராணனையே விட்டுவிட்டாள். அன்று தான் காசிராஜனுடைய ஓலை வந்தது. அதில் தங்களை அனுப்பச் சொல்லியிருந்தது. நான் பெண்ணை இழந்த துக்கத்தை நினைத்தால் மிகுந்த கஷ்டம்தான். அதை நினைத்துத் தான் கடிதம்போடவில்லை. என் பெண் எங்கே போனாள் என்று தெரியவில்லை, அவளைத் தேடுகின்ற வியாஜத்தில் எல்லாவற்றை

யும் மந்திரியிடம் ஒப்படைத்து இங்கு வந்தேன்.

கம்பர்: சோழ அரசே! நாமிருவரும் தெரியாது செய்த பாவங்கள் கணக்கில் அடங்கா. எதற்கும் காசியில் சந்தித்தோமே, இந்தப் புண்ணிய க்ஷேத்திரம் நம்மிருவர் பாவங்களைப் போக்கட்டும். நான் அமராவதியைப் பார்த்தபிறகுதான் என் ஜன்மம் புனிதமடைந்ததாக நினைப்பேன்.

சோழர்: சுவாமி! நீங்கள் அமராவதியைப் பார்க்கமுடியும். அந்தப் புனித உத்தமன் அம்பிகாபதியை நான் எங்கே சென்று பார்ப்பது. பரம உத்தமனின் பிள்ளையையல்லவா கொன்றேன். என் பெண்ணும் என்னை விட்டு வந்துவிட்டாள். பெண் பாவம் பொல்லாதல்லவா?

கம்பர்: கஷ்டப்படாதேயும். நாம் கொடுத்துவைத்தது அவ்வளவுதான். இல்லையேல் இப்படிப்பட்ட இராமபக்தியுடன் இருக்கும் இரண்டு இளம் தம்பதிகளை எப்படி நாம் கொடுத்து வைத்திருப்போம்?

சைத்ரிகர் மனைவி: உங்கள் பிள்ளையா அம்பிகாபதி? அமராவதி தங்கள் மருமகளா? எங்கள்குலகுருவான அமராவதியின் மாமனார் நீங்களா?

கம்பர்: ஆம் அம்மணி! போனதுக்கத்தை ஏன் கிளப்புகிறீர்கள். அமராவதி ஸ்ரீராம நவமி கழித்துவந்துவிடுவாளல்லவா?

சைத்ரிகர்: கண்டிப்பாய் வந்துவிடுவாள். இனி இங்கேயே இருந்துவிடுங்கள். என் பாக்யமே பாக்யம்.

சைத்ரிகர் மனைவி: சுவாமி என் பாக்யமும் என் கணவர் பாக்யமும்தான். அவரால் தான் தங்கள் பொன்னடிகள் படும் பாக்யம் என் இல்லம் பெற்றது.

சோழர்: கம்பரே! தாங்கள் எனக்குப் பரிசாக அளித்த கம்ப ராமாயணத்தை என்ன செய்தேன் தெரியுமா?

கம்பர்: என்ன செய்தீர்கள்? நான் இரண்டெழுதினேன். ஒன்று உங்களிடமும் மற்றொன்று மதுரைப் பாண்டியனிடமும் கொடுத்தேன்.

சோழர்: (கம்பரது இரு கால்களையும் பிடித்துக்கொண்டு) கவியரசே! மன்னிக்க வேண்டுகிறேன். அம்பிகாபதியின் மேல் கோபத்தால் கிழித்தெறிந்தேன். நான்செய்த பாவம்எட்டு ஜன்மமெடுத்தாலும்தீராது. ஒரு தெய்வாம்சம் பொருந்திய புஸ்தகத்தையல்லவா கிழித்தேன். என்னை மன்னியுங்கள்.

கம்பர்: சோழரே! நீர் என்ன செய்வீர்? எல்லாம் தெய்வச்செயல். ஆனாலும், பிரகிருதி ஸம்பந்தம் நம்மை விட்டபாடில்லை. உம் பெண் என்ன? உயர்ந்த ஞானத்தையல்லவா அடைந்துவிட்டாள். நம்மைக்காட்டிலும் ஒருபடிஉயர்ந்தல்லவா இருக்கிறாள். நாம் தர்மங்களை அவளிடமல்லவா உபதேசம் பெறவேண்டும்?

சோழர்: ஆம் சுவாமி! அவள் இராம பக்தி யாருக்கு வரும்? அங்கேயே இராமா இராமா! என்று சொல்லிக்கொண்டிருப்பாள் இதோ பாருங்கள், இராமர், லக்ஷ்மணர், சீதை, அவர்கள் பாதங்களில் உங்கள் அம்பிகாபதியின் படத்தை வைத்திருக்கிறாள், தவிர ஏதோ இரண்டு ஓலைச்சுவடிகள் என்ன?

கம்பர்: நான் எடுத்துப் படிக்கிறேன். (எடுக்கிறார், பிரித்துப் படிக்கிறார்) சிலப்பதிகாரம்! என் புத்தகமல்லவா? நான் சிறுவயதில் வாசித்தது. இதுதான் என் உயிர். என் குமாரன்அம்பிகாபதி இதை ஒரேமாதத்தில் கற்று மற்றொரு பையனுக்குப் பாடமும் சொல்லிக்கொடுத்துவிட்டான்.

சோழர்: அப்படியா! அவ்வளவு மேதாவியை நான் எப்படி மருமகனாக அடைய முடியும்?

கம்பர்: ஐயோ! என்ன அழகான விஷயத்தை எழுதியிருக்கிறான் பார்த்தீர்களா? இராமாயணம் முழுவதும் அமராவதிக்குச் சொல்லிக்கொடுத்திருக்கிறான். சிலப்பதிகாரம் பூராவும் சொல்லிக்கொடுத்திருக்கிறான். சிலப்பதிகாரம் உள் பக்கம் முதல் ஏட்டில் ஏதோ குறிப்பு எழுதியிருக்கிறான், வாசிப்போம். 'என் தகப்பனார் சிலப்பதிகாரத்தில் பூரண விசுவாசம் வைத்தவர். பத்தினிக்கடவுள்தான் தெய்வம், அவள்தான் கண்ணகி தேவி. இதை வைத்துக்கொண்டுதான் தம் இராமாயணத்திலும் சில இடங்களில் மாற்றி இருக்கிறார்.' அப்பா, அம்பிகாபதி! உன் புத்தி எப்படிப்பட்டதடா! என்னஆனையடா! இன்னொரு புத்தகத்தில் விசேஷமான இடங்களில் என்ன என்ன எழுதியிருக்கிறான். (இராமாயணத்தைப் பிரித்துப் படிக்கிறார்.)

சோழர்: என்ன முத்துப்போன்ற எழுத்துக்கள். வெகு அழகாய் இருக்கின்றனவே!

கம்பர்: ஆம். வெகு நன்றாய் எழுதுவான். இதோ இந்த ஏட்டில் விசேஷவிஷயம் எழுதியிருக்கிறான். இது சீதையை, இராவணன் இலங்கைக்குத் தூக்கிச் செல்லும் இடம். (படிக்கிறார்) என் தகப்பனாருக்குப் பிரியமான புத்தகம் சிலப்பதிகாரம். ஆதலால், அதை நன்றாய் அனுபவித்த அவருக்குச் சீதையின் கற்பில் பங்கம் வரக் கூடாது என்று இராவணன் சீதையைப் பூமியோடு தூக்கிச் செல்லுவதாய் எழுதியிருக்கிறார். தென்தேசத்தைக் கௌரவிப்பது கோவலன் கண்ணகியின் கதையாகிய சிலப்பதிகாரம்தான்.

அதை மனத்தில் நன்றாய் ஊன்றித்தான் இந்த இராமாயணத்தில் பூமியோடு சீதையைத் தூக்கிச் சென்றதாக எழுதியிருக்கிறார்.

அடே அம்பிகாபதி! என்ன புத்திசாலித்தனமடா? அந்த அமராவதியின் குணம் எல்லோரையும் ஒருபடி கீழே இருக்கும்படி செய்கிறது. உன்னைக்காட்டிலும் உன் காதலியின் குணம்தானடா சிலாகிக்கத் தகுந்தது. அவள் அழுத அழுகைக்கு வானம் இடிந்து போயிருக்குமாம்.

சோழர்: நாம் இன்னும் பத்து நாள் இருந்து அமராவதியை அழைத்துச் செல்ல வேண்டும். நீங்களும் கூட இருந்து போகலாமா?

கம்பர்: எப்படியாவது பத்தினித் தெய்வத்தைப் பார்த்தே தீரவேண்டும்.

சைத்ரிகரும் மனைவியும்: ஆம் சுவாமி! அவள் பத்தினித் தெய்வம்தான்.

சோழர்: சுவாமி! தாங்கள் தங்கள் கம்பராமாயணத்தைத் தமிழ் நாட்டில் பரவவிடாமல் இங்கே கொண்டுவந்தீர்களே, அது தப்பு. இன்னும் பத்துநாட்களில் நாமெல்லோரும் ஊர் போய்ச் சேரவேண்டும். அங்கே இந்த இராமாயணத்தைப் பரவச்செய்யவேண்டும். அதன் பிறகுதான் இப்பக்கத்திலும் கொண்டுவரவேண்டும். என் பிரதிதான் போய்விட்டது. மதுரைப் பாண்டியன் பூஜை அறையில் வைத்து மடியாய் அப்பொழுது அப்பொழுது பூஜை செய்கிறான். ஆதலால், அந்தப் பிரதியால் ஒரு பிரயோஜனமும் இல்லை. நீங்கள் இந்தப்பிரதியை யெடுத்துக்கொண்டு தமிழ்நாட்டில் தெய்வத் தன்மை பொருந்திய இந்த இராமாயணத்தைப் பரவச் செய்யுங்கள். தமிழ் நாட்டில் இராமன் இல்லாத கோவில்களே கிடையாது. அம்மாதிரியே கம்பராமாயணம் படிக்காத மனிதரே இருக்கக்கூடாது. நிச்சயம் அக்காலம் நம் தமிழ் நாட்டில் வரப்போகிறது.

கம்பர்: அப்படியே அரசே! இராமாயணம் உம் பெண்ணால்தான் பரவவேண்டும். அமராவதிக்கு அன்பளிப்பாக அளித்த இந்தப் புத்தகத்தைக் கொண்டே பரவச் செய்யப்போகிறேன். அவளால்தான் என் இராமாயணம் பரவப்போகிறது; நான் வரும்போது வடுவூர் இராமனைத் தரிசித்து வந்தேன்; என்ன அழகு என் இராமன்! அன்னை சீதையின் அழகும் இலக்ஷ்மணன் அழகும் சொல்லத் தரமன்று.

(காசி அரசர் அங்கு வந்து சேருகிறார்)

அரசர்: நாம் எல்லோரும் இங்கே சேருவதற்குக் காரணம் உங்கள் மகள் அமராவதியும் இங்கு நதியான அமராவதியும்தான்; ஒருமுறை என் மனைவியும் தங்கள் பெண்ணின் உபதேசத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டாள்; என் தேசத்தில் பண்டிதர்கள் நிறைந்திருந்தனர்; இப்பொழுது ஸ்திரீகள் தங்கள் தருமங்களையும் பூரணமாய்த் தெரிந்துகொண்டார்கள்; என் மனைவி அடிக்கடி சொல்லுகிறாள்: "பதிவிரதை சரித்திரம் சிலப்பதிகாரம் என்ற தமிழ்நூலாம்; அதைத் தெரிந்து கொள்ளாத பெண்களே கிடையாதாம்"

சோழர்: நான் சோழ அரசன். நான் தங்கள் கடிதத்திற்குப் பதில் போடவில்லை என்ற கஷ்டம் வேண்டாம். இவர்தான் கம்பர். எங்களுக்குள் துரதிர்ஷ்டதேவதை வந்து பிரித்துவிட்டது. தங்கள் கடிதத்திற்குக் கம்பரை யனுப்ப முடியவில்லை, தங்கள் நல்ல எண்ணம் எப்படியோ கம்பரை இங்கே கொணர்ந்து விட்டது.

காசி அரசர்: என்னவோ எல்லாம் பகவான் அருள். நீங்கள் எல்லோரும் உங்கள் ஊருக்குப்போக வேண்டியதுதான். நான் அரசன், அல்லாவுதீன் கில்ஜி படையெடுக்கிறதாகக் கேள்வி, நான் மார்தட்டி நிற்க போகிறேன்.

கம்பர்: என்ன! என்ன! மகம்மதியர் படையெடுத்து வருகிறார்களா? அப்படியாயின் என் மருமகள் அமராவதியின் கதி என்ன?

அரசர்; அதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். ஸ்ரீராமநவமி கழித்து வந்து விடுவாள். அவள் வருவதற்குள் அவள் பெயரில் கங்கைக் கரையில் ஒரு மண்டபம் கட்டலாம் என்றிருக்கிறேன், அதற்குப் பத்தினித் தெய்வம் அமராவதி மண்டபம் என்ற பெயரை வைக்கலாமென்றிருக்கிறேன்.

சைத்ரிகர்: அப்படியே செய்யுங்கள்.

சைத்ரிகர் மனைவி: அதுதான் நான் என் குருவுக்கு வேண்டுவதும்.

கம்பர்: என் மருமகளுடைய பெயரில் ஏதாவது செய்ய வேண்டுமென்றிருந்தேன், தங்களுடைய யோசனையே மிகவும் நல்லது.

சோழ அரசர்: ஆம், எங்கள் அமராவதி புகழ் பெற்ற உங்கள் அமராவதியைப் பார்த்துத் தானும் புகழ் பெற்றாள். இது எங்கள் எல்லோருக்கும் பெருமை, இனித் தமிழ் நாட்டு ஜனங்கள் வந்தால் அமராவதி கட்டத்தில் தான் ஸ்நானம் செய்வார்கள், அரசே! அடுத்த வருஷம் எல்லோரும் ஸ்ரீராமநவமிக்கு வடுவூர் இராமனைத் தரிசிக்க வாருங்கள்.

ஒரே காலத்தில் எல்லோரும் இரண்டு அமராவதிகளால் ஒன்று சேர்ந்தோம்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.



நாகரீக பால் பண்ணை

மக்களின் ஆரோக்கியத்திற்கு, சுத்தமான புதிய பால் இன்றியமையாதது. ஆகையினால், பண்ணைக்கட்டிடங்கள் சுத்தமாகவும், நீர்க்கசிவு இல்லாமலும், சுகாதாரத்திற்கு உகந்ததாயும் இருக்கவேண்டும். அதற்கு சிமெண்ட் கான்கிரீட்டை விட வேறு எந்தப் பொருளால்தான் ஈரம், தூசி, முதலியவை இல்லாமல் சுலபமாகஸ்தலத்தைக்காக்க முடியும்?

கான்கிரீட் பரப்பிற்கு வழவழப்பைக் கொடுக்கிறது. அதில் கிருமிகள் தங்குவதற்கு வெடிப்புகள் கிடையாது ஓதத்தினால் துர்நாற்றமும் ஏற்படுவதில்லை, கான்கிரீட்டின் ஆரம்ப சிலவு குறைந்ததானபோதிலும் அக்கட்டிடங்கள் நிரந்திரமாக இருப்பதுடன் மதிப்பு மிக்க தோற்றத்தையும் அளிக்கின்றன. மேலும், வசதியும் ஆரோக்கியமும் உள்ள பண்ணை, அதிகமான, முதல் ரக பாலீட்டுதலின் மூலம், மிகுந்த நன்மைக்கு ஹேதுவாகிற தென்பதையும் கவனியுங்கள்.

மற்ற விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள் :— தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 9 மவுண்ட் ரோடு, மதருஸ்.

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லி.
டிஸ்டரிபூடேர்ஸ் போர்
தி அஸோஸியேடெட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லி.

CMI 814 ADTS. TAMIL

The Cauveri Colour Press, Kumbakonam.